# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969



## கல்முனை மறைக்கோட்டச்

# சிறப்பு மலர்

ஜுலை – ஆகஸ்ட் - 2001 25 /=

# தொண்டன்


ஜூலை – ஆகஸ்ட் - 2001

மலர் 33 ❄ இதழ் 05



ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்



வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA. 30000**
**Tel: 065 - 22723**

விலை – 25/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே


அன்புடன் உங்களோடு........ – 01
ஆயரின் ஆசிச்செய்தி – 02
வாழ்துச் செய்தி – 03
புது வழி சமைப்போம் – 04
கத்தோலிக்கரின் கல்வி....... – 05
எனக்குள் ஏதோ – 07
கௌரவிக்கப்படும் கலைஞர் – 08
ஏன் ராத்தா அழுகின்றாய் – 11
எங்கள் கல்முனைப் பங்கு – 12
மீண்டுமொரு முறை – 13
மாணவர் பக்கம் – 14
தொடர்பு சாதனங்கள்....... – 17
வேட்டை வாளி – 19
கல்முனை மறைக்கோட்ட.... – 22
யாரைத் தேடுகிறாய் – 27
அம்பாரை மாவட்டத்தில்... – 28
தூய யூதாததேயு திருத்.... – 30
உங்களுடன் சில நிமி..... – 32
வறிய நெஞ்சங்களை..... – 34
கல்முனைப் பிரதேச..... – 35
வெள்ளி விழா ஆண்டில் – 39
இலக்கிய மஞ்சரி – 41
தியானம் – 42
கல்முனைப் பிராந்தி.... – 43
அரசியல் பக்கம் – 47
நன்றி சொல்வோம் – 48

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்
18 AUG 2001



# அன்புடன் உங்களோடு.......

பல தரப்பட்ட செய்திகள் பல வகைகளில் பல இடங்களுக்கும் பரவுகின்றன. புறாக்களின் வழியாக செய்திப் பரிமாற்றங்கள் நடந்த காலங்கள் மாறி, புது யுகத்தில் செய்மதிச் சாதனங்களையும் மிஞ்சி செய்திகள் மின்னல் வேகத்தில் பரவுகின்றன.
பரப்பப்படும் செய்திகள் நாம் விரும்பியோ, விரும்பாமலோ எம் மனசுக்குள் புகுந்த இச் செய்திகள் எம்மனசை ஆக்கிரமித்து எம் வாழ்க்கை நிகழ்வுகளையே மாற்றி அமைக்கின்றன. கீழ்த்தரமான செய்திகள் சீரழிந்த வாழ்க்கைக்கே வழிகோலும் அதேவேளையில் நற்செய்திகள் நலமிக்க சமுதாயத்தை உருவாக்குவதும் உண்மைதான்.

செய்திகளுக்குள் எல்லாம் சிறந்த செய்தி இறைமகன் இயேசு தந்த நற்செய்தி. இவ்வுலகில் இறையரசையும் மறுஉலகில் நிலை வாழ்வையும் தரவல்லது. அப் பெருமகனின் மலைப் பிரசங்க நற்செய்தியை மகாத்மா காந்தியே தனதாக்கிக் கொண்டு அகிம்சை வழியில் இந்தியாவை மீட்டெடுத்தார்.
ஒவ்வொரு மனிதனும் தத்தம் பெலவீனங்களிலிருந்து தம்மை மீட்டுக் கொள்ள, யுத்த கலாசாரம் அகிம்சைக்குத் திரும்ப, போதை வஸ்து மோகம் மறைந்து, மனிதம் பிறக்க யேசு சொன்ன செய்திகள் நற்செய்தியாக நானிலமெங்கும் பரவவேண்டும். காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்றவாறு புது யுக ஊடகங்கள் ஊடாக உலக முடிவுவரை உலகெங்கும் உயிர் தரும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். அன்று கூரைமீதிருந்து நற்செய்தியை அறிவிக்க இயேசு சொன்னார். இன்று பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, செய்மதி சர்வதேச வலைப்பின்னல் (இன்ரனெற்) ஆகிய ஊடகங்கள் ஊடாக மனித இதயங்களை ஊடறுத்து உலகெல்லாம் நற்செய்தி மயமாக்கப்படவேண்டும்

35 வது உலகத் தொடர்பு தினத்தை மறைமாவட்டரீதியில் கல்முனைக் கோட்டத்தில் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். இந் நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக கல்முனைக் கோட்டத்தின் கைவண்ணத்தில் உருவான தொண்டன் சிறப்பிதழை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.இந் நிகழ்ச்சி கல்முனைக் கோட்டத்திற்கு ஓர் ஆன்ம திருப்தியையும், அதேவேளை ஒரு புதிய உத்வேகத்தையும் அளிக்கும் என எதிர்பார்க்கிறோம்.
இந்நிகழ்வையொட்டி சகல உதவிகளையும் அளித்த கல்முனைக் கோட்டத்தினருக்கு

எமது மனமார்ந்த நன்றிகள்.

ஆசிரியர்



## இறைவாக்கு

காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல் தளத்திலிருந்து அறிவியுங்கள்
மத். 10/27




பொதுசன நூலகம்

# ஆயரின்

✠

## ஆசிச் செய்தி



நமது மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இம்முறை கல்முனை மறைக் கோட்டத்தில் உலகத் தொடர்பு தின விழாவைக் கொண்டாடுவதோடு 'தொண்டன்' வெளியீட்டையும் கல்முனை மறைக் கோட்டச் சிறப்பு மலராக வெளியிடுவதறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த ஆண்டில் தொண்டன் திருகோணமலை மறைக் கோட் டச் சிறப்பு மலராக வெளிவந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. இவ் வாறு மறைக் கோட்டங்களை – மாவட்டங்களை முன்னிலைப் படுத்தி வெளி வருவது மிகவும் பயனுடைய முயற்சி ஆகும். அது அவ்வப் பிரதேச சமய, சமூக, கலை, இலக்கிய முயற்சிகளை சிறப்பாக வெளிப் படுத்து வதாகவும் அப்பிரதேச எழுத்தாளர்களை, படைப்பாளிகளை உற்சாகப்படுத்து வதாகவும் அமையும் என்பது திண்ணம்.

இன்று தொ டர்பு சாதனங்கள் மிக நவீனமாகவும், விரைவாகவும் விரிவடைந்து வருகின் றன. அதேவேளை அவை மனித சமூகத்தின் மீதும் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், விழுமியங்கள் மீதும் ஒருவித ஆதிக் கத்தைச் செலுத்துகின்றன. தொடர்பு சாதனங்களைக் கட்டுப்படுத்து வோர், கைவசம் வைத்திருப்போரின் கருத்துகளுக்கேற்ப மக்களை வடி வமைக்க முயல்கின்றன. இதையிட்டு திருத்தந்தை இவ்வாண்டுக்கான தமது உலக தொடர்பு தினச் செய்தியில் "முன்பு தொடர்பு சாதனங்கள் நிகழ்ச் சிகளை அறிவித்தன. இப்போது தொடர்பு சாதனங்களின் தேவைக்கேற்ப பெரும்பாலும் நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படுகின்றன" என்று குறிப்பிட்டு உள்ளார். இந்நிலைமை சிக்கலானது, மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டியதுமாகும். இந் நிலையில் திருச்சபை மௌனமாய் இருக்காது தொடர் புசாதனங்கள் இறைத்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற செய்திகளுக்கு இடையே உண்மையைக் கண்டு கொள்ளவும் அவற்றுக்கிடையே கிறிஸ்துவின் நற்செய்தியையும் இறைவனின் அன்பையும் உரத்து ஒலிக்கவும் நம்மைத் தூண்டுகிறது. இவ்வகையில் எமது மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு கல்முனையில் எடுக்கும் உலகத்தொடர்பு தினவிழா, தொடர்பு சாதனங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.


கல்முனைப் பிராந்தியம் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். அதேவேளை பல்லினமக்களும் பரவி வாழ்கின்ற பிரதேசமாகவும் காணப் படுகின் றது. இப்பிரதேசத்தில் கிறிஸ்தவம் முன்னூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நிலைகொண்டு இங்கு வாழ்கின்ற மக்களின் ஆன்மீக மற்றும் சமூக மேம்பாட்டுக்காக உழைத்து வந்துள்ளது. கிறிஸ்தவ விசுவாச வேர்கள் மிக ஆழமாகவே இங்கு ஊடுருவி உள்ளன. இதன் காரணமாக இப் பிரதேச மக்களின் கல்வி மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்திகளில் கிறிஸ்தவம் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளதோடு நாட்டுச் சூழ்நிலைகள் காரணமாக பல்வேறு இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்த மக்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி உள்ளது. இத்தகைய பெருமையும், பழமையும், சிறப்பும்மிக்க கல்முனை மறைக்கோட்டச் சிறப்பு மலராக தொண்டன் வெளிவருவது மிகவும் பொருத்தமானதும் பாராட்டுக்குமுரியதுமாகும். மறைமாவட்ட ரீதியில் கொண்டாடப்படும் உலகத் தொடர்பு தினவிழாவை யொட்டி வெளியிடப்படும் இம்மலர், பல வகையிலும் சிறப்புற்று கல்முனை மறைக்கோட்ட மணத்தை அனைவரும் முகர இதழ் விரிக்கட்டும் என வாழ்த்துகின்றேன். இறை அருள் நிறைய இறைஞ்சுகிறேன்.

✠ பேரருள் திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
ஆயர், திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம்

## கல்முனை மறைக் கோட்ட முதல்வரின்

✝

### வாழ்த்துச் செய்தி



திருமலை – மட்டக்களப்பு மறைமாநில தலத் திருச்சபையின் இலக்கிய ஏடான தொண்டனுக்கு வயது முப்பத்திரண்டு

இச்சந்தர்ப்பத்திலே உலகத்தொடர்பு தினத்தைச் சிறப்பிப்பதற்காக இம்முறை கல்முனை மறைக்கோட்ட படைப்பாளிகளின் ஆக்கங்களை மாத்திரம் சுமந்துவந்து கல்முனை மறைகோட்டத்திற்குச் சிறைப்பைத் தேடி நல்லாசி கூறுவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.


இளமைபூத்துக்குலுங்கும் இத்தொண்டன் வேதனைகள் சோதனைகள் பலவற்றைச் சந்தித்ததுடன் பலசாதனைகளையும் படைத்துக்கொண்டு தனது இலக்கியப்பணியை வீறுநடையுடன் தொடர்ந்து கொண்டிருப்பது போற்றுதற்குரியது.

படைப்பாளிகளின் இலக்கியப்பசிக்கு விருந்தாகி ஆக்கச் சிந்தனைகளுக்கு ஊற்றாகி இலக்கியத் தொண்டு ஆற்றிவரும் 'தொண்டன்' பல்லாண்டுகாலம் வாழ இறையாசீர் வேண்டுகிறேன்.

மேலும் பல வடிவங்களிலான தடைகள் நெருக்கடிகளைத் தாண்டி, தமிழ்கூறும் நல்லுலகிற்கு தொண்டனின் இலக்கியச் சேவையைப் பெற்றுத்தரும் நமது மறைமாநில சமூக தொடர்பு ஆணைக்குழு இயக்குனர், சஞ்சிகை ஆசிரியர் – பணிக்குழுவினர் மற்றும் படைப்பாளர்கள், வாசகர்கள் அனைவர்க்கும் எமது உளமார்ந்த நல்லாசிகள்

அருள்திரு. **ஜே. எஸ். மொராயஸ்**
கல்முனை மறைகோட்ட முதல்வர்
திருஇருதயநாதர் ஆலயம்
கல்முனை.

# புது வழி சமைப்போம்



ஏர் பிடித்து போர் அடிக்கும்
எமதிலங்கை நாட்டினிலே
போர் புரிந்து புன்மை செய்து
பாழடையும் மானிடரே
ஆர்பரித்து அன்பின்றி
அவலமாய் வாழலாமோ?
ஊர் செழிக்க சேவை செய்து
உன்னதமாய் உயர்வடைவோம்

எல்லைகளை வகுத்து நின்று
எமது மண்ணை மாற்றிவிடும்
தொல்லை நிலை தொடராமல்
தூய சமாதான மென்று
முல்லைப் பூ முகமலர
முறுவலித்து கரம் இணைத்து
இல்லையெனும் சொல்லை இனி
இல்லா தொழித்திடுவோம்

இனங்களிடை பிரிவின்றி
இன்பமுடன் ஒன்றினைந்து
சபைகளெல்லாம் சமமென்று
சனநாயக உரிமையுடன்
மனங்களால் ஒன்றுபட்டு
மகிழ்வுடனே குறை மறந்து
குணக்குன்றாய் உயர்ந்து நின்று
குற்றமிலா வழி சமைப்போம்

K.M டெல்கிஸ்
கல்முனை.

# கத்தோலிக்கரின் கல்வி சமூகப்பணி கல்முனைப் பிராந்தியம்

அருள் திரு S.A.I. மத்தியு SSJ



1893 இல் திருகோணமலை மறை மாவட்டம் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இருந்து பிரிவதற்கு முன்பே யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இம்மாவட்டத்திலும் குறிப்பாக கல்முனைப் பிராந்தியத்திலும் கத்தோலிக்கரின் கல்வி சமூகப்பணிகள் தடம் பதித்திருந்தன. இந்த நீண்ட வரலாற்றில் எத்தனையோ சேவைகள் ஆவணப் படுத்தப்படாது மறைந்துவிட்டன. கிடைத்த மூலாதாரங்களைக் கொண்டும் பல்வேறு தேடல்கள் மூலமும் 'கிழக்கு மகாணத்தில் கிறிஸ்தவர் ஆற்றிய கல்விப்பணி' என்ற நூலை யான் எழுதினேன். இற்றைக்கு சுமார் கால் நூற்றாண்டிற்கு முன் எழுதிய இந்த நூலில் கடந்த இருபத்தைந்து ஆண்டு கால வரலாறு இடம்பெறவில்லை. இவ்விடயத்தையும் கருத்திற்கொண்டு கல்முனைப் பிராந்தியத்தில் கத்தோலிக்கர் ஆற்றிய கல்விப்பணியையும் ஓரளவு தொட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

1867 இல் யாழ் ஆயராக நியமனம் பெற்ற கிறிஸ்ரோபர் போஞ்சின் ஆயரின் காலத்தில் மட்டக்களப்பு பிதேசத்தில் கல்விப்பணி ஓங்கவும் சுயமொழிக்கல்வியை ஆதரித்தும் அவர் பணியாற்றினார். கல்முனைப்பிராந்தியம் மட்டக்களப்பின் ஓர் அங்கமாக இருந்தமையை குறிப்பிடல் அவசியம். 1893 இன் பின்பு யேசுசபைக் குருக்கள் கல்முனைப்பிராந்தியத்தில் கல்வி நலத்திற்காகவும் பாடுபட்டார்கள். இதற்கு முன்னைய காலத்தில் அமலமரித்தியாகிகள் சபையினர் இங்கு சமயக் கல்விப்பணியாற்றினார்கள். அக்காலத்தில் கல்முனைப்பிராந்திய மக்கள் கத்தோலிக்க பாடசாலையான புனித மிக்கேல் கல்லூரிக்கே உயர் கல்விக்காக சென்றார்கள். இக்கலாசாலையில் ஒழுக்கத்திற்கு சிறப்பிடம் வழங்கப்பட்டது.

கல்முனைப் பிராந்தியத்தில் யேசுசபைக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட புனித மரியாள் பாடசாலையில் யேசுசபைக் குருக்களின் முயற்சியினால் கார்மேல் கன்னியர் வரவழைக்கப்பட்டு 1928 இல் பெண்களுக்கான கல்வியை வழங்கும் காமேல் கன்னியர்மடம் ஸ்தாபிக்கப்பட்டு தமிழ், ஆங்கில கல்விப்பயிற்சியும், தையல் பயிற்சியும், கவின் கலைப்பயிற்சியும் அளிக்கப்பட்டன. கல்முனைப்பிராந்தியத்தில் கல்வி கற்ற பெண்கள் அனேகர் இக்கலாசாலையின் மாணவரே. இலங்கைக் கல்வி வரலாற்றிலும் சமூகப்பணி வரலாற்றிலும் குறிப்பாக இஸ்லாமிய உலகிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கும் தேசபந்து திருமதி ஜெசிமா இஸ்மாயில் போன்றவர்களும் இக்கலாசாலையின் பழைய மாணவிகளே. இக்கலாசாலை பெண்களுக்கான விளையாட்டுத்துறையையும் ஊக்குவித்து இசை, நாடகம், நாட்டியம் ஆகிய கலைகளையும் வளர்த்த முன்னோடிப் பாடசாலை ஆகும்.

புனித மரியாள் பாடசாலை பிற்காலத்தில் (1952) பாத்திமா கல்லூரியாக பெயர் மாற்றம் பெற்றது. 1938ம் ஆண்டு தொடங்கி இக்கல்லூரியைப் புனித வளனார் துறவிகள் சபையினர் ஏற்று இக்கல்லூரியின் மூலம் ஏராளமான இந்து, இஸ்லாமிய சிங்கள மாணவர்களை கல்வியில் உயர்த்தி பலர் கல்வி உலகில் உயர்நிலை பெறுவதற்குக் காலாக இருந்தனர். விஞ்ஞானக் கல்விக்கு இப்பிராந்தியத்தில் முன்னோடிக் கல்லூரியாக இது விளங்கியது. உயர் திரு. விபுலானந்த அடிகளாரும் புனித மரியாள் பாடசாலையில் சிறிது காலம் ஆசிரியப் பணியை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கலாசாலையில் விளையாட்டு, நுண்கலைகள், ஆங்கிலம் ஆகியவற்றிற்கிருந்த மவுசு காரணமாக இலங்கையின் ஏனைய பாகங்களில் இருந்தும் இங்கு வந்து மாணவர்கள் கல்வி கற்றார்கள் இக்கல்லூரி தோற்றுவித்த கல்முனைப் பிராந்தியத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள் பலர் மிக உயர்ந்த பதவிகளை வகித்தார்கள். தற்போது இக்கலாசாலையின் பழைய மாணவர்கள் பல்வேறு துறைகளில் உயர் பதவிகளை வகித்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

அக்கறைப்பற்று கருங்கொடித் தீவில் 1930களில் வளர்ச்சி அடைந்த ரோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலை 1907ல் மொறிஸ் அடிகளார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் திரு. செல்லப்பா, திரு கணபதிப்பிள்ளை, திரு க. காசுபதி, திரு. க. முத்துலிங்கம் ஞானப்பிரகாசம் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றி ஏராளமான கல்விமான்கள் உருவாகக் காலாக இருந்தனர். அக்கரைப்பற்று பிரதேசத்திலே முதலாவதாக B.A பட்டம் பெற்று ஆசிரியராகவும் கல்வி பணிப்பாளராகவும் மிக நேர்மையாகத்

பணியாற்றிய ஜனாப் எஸ்.எம்.எம். ஏ கபூர் அவர்கள் இப் பாடசாலையில் கல்வியை ஆரம்பித்து பின்னர் பாத்திமா கல்லூரியில் மாணவராகவும் பின்னர் ஆசிரியராகவும் பணி யாற்றியவர்.

1936 ஆண்டளவில் சுமார் 60 ரோமன் கத்தோ லிக்க பாடசாலைகள் கிழக்கு மாகாணம் முழுவதிலும் இயங்கிவந்தன. இவற்றுள் பல பாடசாலைகள் இன்று கல்முனைப் பிராந்தியம் என வரையறை செய்யப்படும் குருக்கள் மடத்தில் இருந்து பாணம வரையிலான பிரதேசத்தில் இயங்கின. இப்பாடசாலைகளில் பெரும்பான்மையானோர் கத்தோலிக்கர் அல்லாதோர் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இதனால் கத்தோலிக்கர்கள் சாதிசமயங்களைக் கடந்து தம் பணிகளை ஆற்றினார்கள் என்பது தெளிவாகிறது.

கத்தோலிக்கரின் சமூகப் பணியை சிந்திக்கும் போது கவனிப்பார் அற்ற வேடர்கள் என வருணிக்கப்படுகின்ற இலங்கையின் ஆதிக் குடிகளுக்காகவும் பாடசாலைகள் அமைத்து சமூகப் பணிகள் ஆற்றினர். யேசுசபைத் துறவியான குக் அடிகள் அலிக்கம்பைக் குறவர் நலத்திட்டதிற்காக அயராது பாடுபட்டவர்.

இத்தோடு கத்தோலிக்கரின் சமூக நலப் பணியில் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக நடத்தி வருகின்ற அனாதைகள் இல்லங்களையும் குறிப்பிடுதல் அவசியம். இன்று கல்முனைப் பிராந்தியத்தில் கார்மேல் கன்னியர்கள் கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களிலும், பிரான்சிஸ்கன் (ஆண்கள்) குருக்கள் மடத்திலும், புனித வளனார் சபையினர் கல்முனையிலும் அனாதை இல்லங்களை நடத்தி வருகின் றனர்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட இனக்கல வரங்களின் விளைவாகக் கல்முனைப் பிராந்தியத்தில் வீடுகளை இழந்தோருக்காக மாண்புமிகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் இனம், மதம், பராது ஏராளமான வீட்டுத் திட்டங்களை உருவாக்கியும் எகெட் ஸ்தாபனத்தின் மூலம் மக்கள் இன்னல்களுக்கு உட்பட்ட வேளைகளில் எல்லாம் கல்முனை பிரதேசத்தில் ஏராளமான சமூக நலத்திட்டங்களை உருவாக்கியதையும் இங்கு விரித்து உரைக்க இடம் போதாது. இந்தச்சேவைகளுள் மருத்துவம், தொழில் வாய்ப்பு, தொழிற் கல்வி, கருத்தரங்குகள், கடன் உதவிகள் என்பன போன்ற பல சமூகநலத் திட்டங்கள் உள்ளடங்கும். அண்மைக் காலங்களில் ஆயர் அவர்களும், குருக்களும் பொதுநிலை யினரும் இணைந்து இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ தொடர்பாடல்களை ஏற்படுத்தியமை மிகச்சிறந்த சமூகப் பணியாகும்.

இப்பிரதேசத்தில் பல்வேறு பங்குத்தளங்களில் ஏழை களுக்குதவும் வின்சன் டி போல் சபையினரும், இளைஞர் அணிகளும், பங்குச்சபைகளும் மறைக்கல்வி இயக்கத் தினரும் ஏராளமான சமூகப்பணிகளை ஆற்றுகின்றனர். இந்த விடயங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய மிகமுக்கிய மான அமிசம் இனங்களுக்கிடையே சமாதானத்தை வளர்க்கும் முயற்சிகளில் கத்தோலிக்கத் தலைமைகள் தம்பங் களிப்புக்களைச் செய்து வருவதாகும்.

சுமார் இரண்டு நாற்றாண்டு கால கல்வி சமய வரலாற்றில் தடம்பதித்த சில அமிசங்களையும் சில பெரியார் களையும் மட்டுமே குறிப்பிடக்கூடியதாக உள்ளது. முன் பள்ளிக்கல்விக்கு கத்தோலிக்க நிறுவனங்கள் இப் பிராந் தியத்தில் பெரும் பங்களித்துள்ளன. தேத்தாத்தீவு பிரான்சி ஸ்க்கன் கன்னியர்சபையினரும் சொறிக்கல்முனையில் திருக் குடும்பக் கன்னியரும் ஏனைய துறவற சபையினரும் மக்கள் இல்லங்களில் மலர்ச்சி பொங்க குடும்ப நலன்களில் அக்கறை கொள்வதையும் விசேடமாகக் குறிப்பிடுகின்றோம்.

முடிவுரையாகக் கத்தோலிக்கரின் கல்வி சமூகப் பணிகளில் அவர்கள் ஒழுக்கத்திற்கு அளிக்கும் அழுத்தம் சகல சமூகத்தினரும் நன்கு போற்றும் ஒன்றாகும். முடிவாக ஒன்று கூறல் அவசியம். கல்வி சமூகப்பணிகளில் மெதடிஸ்த திருச்சபையினர், ஏனைய திருச்சபையினர், 75 ஆண்டு கால இராமக்கிருஸ்ண சங்கத்தினர், இஸ்லா மிய சமூகத்தினர் ஆகியோருடன் இணைந்து இப் பணி களை கத்தோலிக்கர் ஆற்றி வரினும் இத்தலங்களில் முதன் முதல் தடம்பதித்தவர்கள் மெதடிஸ்த திருச்சபையினரும், கத்தோலிக்க திருச்சபையினருமே, மனித மேம்பாட்டிற் காகவும் முழுமனித வளர்ச்சிக்காகவும் கல்வி, சமய, சமூகப் பணிகள் பற்றி ஒரு மேலான ஆய்வினை இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளல் அவசியம்.

எது அர்த்தம் நிறைந்த வாழ்க்கையோ; எதை நாம் பூரணமாக நம்புகின்றோமோ அதிலே இறங்கி உழைக்கும் சிரமம் (ஆனந்தம்) இருக்கிறதே அதுதான் உலகம் அறியா ரகசியம்.

**ஜான் கார்ட்னர்.**

# எனக்குள் ஏதோ

○ தி. மதி
பெரிய கல்லாறு.

வெள்ளைக் காகிதமாய் என் வாழ்க்கை -ஏதோ
வேகமாய் ஒரு விரல் மறையென எழுதியது.
வேந்தன் இயேசு வழி செல்லென - ஒரு
வேதம் எனக்குள் மணியாய் ஒலித்தது.

என்னவோ என்னைச் சுற்றி ஒளி வட்டம் - ஏதோ
என் உயிருக்குள் உண்மை உருகும் சத்தம்
எரிமலை போல் இதயம் எரிந்தது - மன
எல்லைகளைத் தாண்டி தீமைகள் அழிந்தது.



கண்கள் என்னும் வாள் கொண்டு - ஒரு
கள்வனாய் என்னைக் கைது செய்தது.
கருணைச் சங்கிலியால் வழி மாறிய - என்
கால்களைக் கட்டிப் போட்டது.

விந்தைகள் இவையெல்லாம் என் மனதில் - ஒரு
விபத்தாய் தோன்றியதும் மாறியதும் ஏனோ
விண்ணும் மண்ணும் ஆளும் மைந்தன் ஒவ்வொரு
வினாடிப் பொழுதும் நம்மோடிருப்பதால் தானோ.

# கௌரவிக்கப்படும் கலைஞர்

கிழக்கிலங்கையில் தொன்மைமிக்க கிராமங்களில் ஒன்று சொறிக்கல்முனை. இது சொர்க்கமுனை அல்லது சொரிகல்முனை என்றோ அழைக்கப்பட்டு காலப் போக்கிலே மருவி இப்பெயர் வந்தது என்று வரலாற்றாய்வாளர் கூறுகின்றனர். இத்தகைய கிராமம் பல கலைஞர்களையும், கல்விமான்களையும் பிரசவித்துள்ளது. நுற்றாண்டு விழாக் கண்ட தலத்திருச்சபையுடன் இன்றும் தனித்து வமான பல பண்புகளுடன் தலைநிமிர்ந்து நிற்கும் இப் பங்கிலே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மூத்த கலைஞர் தான் விசுவாசம் குருசுத்தம்பி அவர்கள்.

இவருடைய பரிமாணங்கள் பலதிறப்பட்டவை. நாடக நடிகராக, நாட்டுக் கூத்துக் கலைஞராக, பாடகராக, படைப்பாளராக, சினிமா நடிகராக என்று தன் கலைப் பசிக்குத் தீன் போட்டவர். இத்தகைய பழம்பெரும் கலைஞரின் நீண்டகால கலைப்பணிகளைப் பாராட்டி திருமலை மட்டுநகர் மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழு பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கின்றது. தொண்டன் வாசகர்களுக்காக இவரை சந்தித்து செவ்வி கண்டோம்.

❒ **முதலில் உங்களைப்பற்றி நீங்களே கூறுங்கள்.**

○ நான் பிறந்தது 1926.03 26 நான் படிச்சது ஐந்தாம் வகுப்புவரைதான். கலைத்துறைகளில் ஈடுபட்டு ஊர் ஊராகத்திரிஞ்சி 31 வயதில் கலியாணம் நடந்தது. பதினாலு வருடங்களுக்குப் பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இப்போதைக்கு எழுபத்தாறு வயதாகுது.

❒ **இன்று இப்பிரதேசத்தில் இருக்கிற மூத்த கலைஞர்களில் நீங்களும் ஒருவர். கலைத் துறையில் நீங்கள் ஈடுபட காரணமாக அமைந்த பின்னனிகள் பற்றிக் கூறுங்கள்.**

○ எனக்கு இளம் பராயமாக இருக்கும் போதே கொட்டகை போட்டு பேசும் படங்கள் காட்டினாங்க. எனக்கு அதில் பெரும் ஈடுபாடு ஏற்பட்டுப் போச்சி. திரும்பத் திரும்ப படங்கள் பார்த்திருக்கிறேன். பாட்டுக்களப் பாடம் பண்ணியிருக்கிறன். அதனால்தான் எனக்கு இந்தியா போற ஆசை ஏற்பட்டது.

❒ **நீங்கள் இந்தியா போனீர்களா? எதற்காக. யாருடைய அழைப்பின் பேரில். எத்தனையாம் ஆண்டில் போனீர்கள்?**

○ படங்களப் பாத்து அதில ஈடுபாடு ஏற்பட இந்தியாவுக்கு கடிதம் மூலம் தொடர்புகள் ஏற்படுத்தி என்ர ஆசையையும் எழுதியிருந்தன். ஜோண் கவாஸ் என்ற ஒரு தயாரிப்பாளர் இந்தியா வருமாறு அழைத்திருந்தார். நானும் தலை மன்னார்போய் வள்ளத்தில் இந்தியா போனேன். ராமநாதபுரம் சம்பங்கிபுரம், மதிவதனபுரம், ராமேஸ்வரம் இப்பிடியாக பயணப்பட்டு காரைக்குடி பட்சிராசா ஸ்ரூடியோவில் எனக்கு சினிமாவில் நடிக்க வாய்ப்புக்கிடைச்சது. மங்கம்மா சபதம் படத்தில் சவுந்தரா கோஷ்டியொன்று வரும் நான் அந்தக்சவுந்தரா கோஷ்டித் தலைவனாக நடித்தேன். இது நடந்தது 1948ம் ஆண்டு. சுமார் மூன்று மாதங்களே இந்தியாவில் தங்கியிருந்தேன் அஞ்சலிதேவி எஸ். வரலட்சுமி, வசந்த கோகிலா, போன்றோருடைய அறிமுகம் கிடைத்தது. அந்தக் காலத்தில் எனக்கு நாற்பது ரூபா சம்பளம் தந்தார்கள் அவர்களுடைய பேச்சுத் தமிழை என்னால் சகிக்க முடியவில்லை. சொந்த ஊர் ஆசை எழவே திரும்பி வந்து விட்டேன்.



❒ **நீங்கள் நாட்டுக் கூத்துத் துறையிலே அதிகமாக ஈடுபட்டவர் என்பதை அறிந்தோம்அதுபற்றி சற்று விளக்குவீர்களா?**

## தியானம் செய்யுங்கள்

தியானம் செய்யும்போது மனம் ஒரு கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஒரு நெறியில், ஓர் அமைதியில் எங்கோ ஏதோ ஒன்றுடன் ஐக்கியமாகிவிடுகிறது. இதன் விளைவாக செய்யும் காரியங்களில் ஒரு தெளிவு ஏற்படுகிறது. ஓர் ஆக்க சக்தி நம் வேலைகளில் வெளிப்படுகிறது. ஒரு நிதானம் நம்மிடையே நிலவுகிறது. நமது சூழ்நிலை நமது கைக்குள் இருப்பதாக ஓர் உணர்வு ஏற்படுகிறது. தினம் காலையிலும் மாலையிலும் ஒரு பதினைந்து நிமிடம் இப்படித் தியானம் செய்வது மற்ற இருபத்தி மூன்று மணி நேரத்தையும் சிறப்பாகவும் பயனுடையதாகவும் ஆக்கிவிடுகிறது.

○ நான் தென்மோடியிலமைந்த சனிக்கிழார் நாட்டுக் கூத்திலே எனது பதினேழாவது வயதிலே ஆடினேன். அந்த நாட்களிலே கந்தையாஅண்ணாவியார் இப்பிரதே சங்களில் நாட்டுக் கூத்துக்களை பயிற்றுவித்து. அரங் கேற்றி வந்தார். நான் அவரோடு சேர்ந்து நாட்டுக் கூத்தின் நுணுக்கங்களை கற்றுக் கொண்டேன். வடமோடி, தென்மோடிக் கூத்துக்களிலே எனக்கு நல்ல பரிச்சியமும், திறமையும் உண்டு. அத்தோடு கன்னன்குடாவைச் சேர்ந்த ஒரு அண்ணாவியார் எனக்கு இந்த நாட்டுக் கூத்தின் ஆழமான தன்மைகளைக் கற்றுத் தந்தார். சின்னத்தம்பி என்னும் அண்ணாவியாருடன் சேர்ந்து நானும் சத்திய நாதன் எனும் நாட்டுக் கூத்தை பாடினோம். களரிக்கு வருவதற்கிடையில் அந்தப்பிரதியை கிழித்து, அழித்து விட்டார்கள். இதனால் முன்னீடு காரர்கள் என்னை எப்படியாவது புதிதாக இதனை இயற்றவேண்டும் என்று வேண்டினார்கள். நான் ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு இருபத்திரெண்டு நாட்களுள் இதனை புதிதாகப் பாடி னேன். முறைப்படி வெண்பா, விருத்தம், கொச்சகம், ஆசிரிய விருத்தம் இவை யெல்லாம் அமைந்து வரும் படி இதனைப்பாடி அரங் கேற்றினேன். (இவ்வேளை அந்த சத்தியநாதன் கூத்தி லிருந்து ஒரு சோகப் பாடலைப் பாடிக் காட்டுகிறார்)

❒ **நீங்கள் பாடிய இந்த வடமோடி சத்தியநாதன் நாட்டுக் கூத்திலிருந்து மன்னன் வரவுக்குரிய ஒரு தாளக்கட்டு பாடிக் காட்டுங்களேன்.**

○ தாளக்கட்டென்றால் உண்மையில் விதிப்படி நூற்றிப் பன்னிரண்டு தடவை பாடினாத்தான் அதற்குரிய ஆட்ட மெல்லாம் சரியாக வந்து முடியும். நீங்கள் கேட்பதற்காக ஒரு அடியை பாடுகிறேன்.
தாத்தையத்தோம் தகதிகதா தையாதை தை.. (என்று தொடங்கி ஒருதாளக்கட்டை அருமையாகப் பாடுகிறார்)

❒ **நீங்கள் ஆடிய, அரங்கேற்றிய நாட்டுக் கூத்துகளில் உங்கள் மனதில் இடம்பிடித்த சில கூத்துக்களை கூறுவீர்களா?**

○ நான் சத்தியநாதன், பிலோமினாள், ஞானசவுந்தரி, ஞான புத்திரன் வள்ளிநாடகம், மகாசூரன் போர், ஆஞ்சநேயர் யுத்தம் இப்படியான கூத்துக்களில் முக்கிய பாத்திரம் ஏற்று ஆடியதுடன் பல தடவைகளில் பல ஊர்களிலும் களரிகளில் அரங்கேற்றினேன். சில கூத்துகளில் இரட்டை வேடங்களும் தாங்கி ஆடியுள்ளேன். அத் தோடு அந்தக் காலங்களில் இந்தக் கூத்துக்களிலே எனக்கு இருந்த ஒரு அவா காரணமாக சுமார் நூற்று க்கும் மேற்பட்ட கூத்துக்களில் பங்கெடுத்து பெரும் பங்களிப்புச் செய்துள்ளேன்.

❒ **மேடை நாடகங்களில் நடித்துள்ளீர்களா? இந்த நாடகத்துறையில் உங்கள் அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்களேன்**

○ நான் பல றாமாக்களில் நடிச்சிருக்கிறன். ஒரு தரம் ஒரு றாமாவில் இயமன் வேஷம் போட்டு நடிச்சத என்னால மறக்க முடியாது. கூடுதலாக நகைச்சுவை நாடகங்களில் நடிச்சி பாராட்டுகள் பெற்றிருக்கிறன். அதில் ஒண்டு என்னென்டால் வசனம் எழுதித் தந்து பாடமாக்கி நடிக்கிறதெண்டதே இல்ல. அவர் கதையச் சொல்லுவர். நாங்களும் கலந்து பேசுவம், ஒருக்கா ரெண்டு தரம் செய்து பாப்பம், பிறகென்ன மேடையில ஏறுனா நாடகந்தான்.

❒ **வேறு எவ்விதமான எழுத்தாக்கப் பணிகளில் ஈடுப்பட்டீர்கள்?**

○ அனேகமான பாட்டுக்களை நான் எழுதியதுடன் அவற்றில் பல பாடல்களுக்கு நானே இசையமைத்துப் பாடியுமுள்ளேன். படங்கள் பார்த்து பல பாடல்கள் மனப்பாடமாகவும் இருந்ததால் இசைக் குழுவொன் றிலே இணைந்து பாடகராகவும் அலைந்திருக்கிறேன்.

❒ **அப்படியா எந்த இசைக்குழுவில் உறுப்பினராக இருந்தீர்கள்?**

○ அந்த நாளையில மட்டக்களப்பில பாடுமீன் கோஷ்டி யினர் அருணோதய கலாமன்றத்து இசைக்குழுவினர் என்று இசைக் குழுக்கள் செயற்பட்டு வந்தன. நான் ஆதவன் குழுவில சேர்ந்து ஒரு நல்ல பாடகராக இருந்தன். அதில ஈழத்துச் சௌந்தரராஜன், ஜேசுதா சன், சகுந்தலா போன்றவர்களும் இருந்தனர். சுமார் முப்பதுக்கு மேற்பட்டவர்கள் இந்தக் குழுவில் இருந் தோம். எக்கோடியன் வாத்திய கலைஞராக வேதார ணியம் செட்டியார் இருந்தார். யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசாமி கோயில் அமிர்தகழி, திமிலைதீவு போன்ற இடங்களில் நாங்கள் நடாத்திய இசை நிகழ்ச்சிகளை என்னால் இன்றும் கூட மறக்க முடியாது. தியாகராஜ பாகவதர், டிஆர் மகாலிங்கம், பியு சின்னப்பா வசந்த கோகிலம், எம்.எஸ் சுப்புலட்சுமி இவங்கட பாடல் களெல்லாம் எனக்கு மனப்பாடம். இப்ப எங்க தம்பி அப்படியான பாட்டெல்லாம் வருகுது. அந்த நாளை யில் கல்லடியில் நாகமணி எண்ட நாதஸ்வரக் கலைஞர் இருந்தார். அவர்ர மகள் மேரிதான் என்ர மனைவி. அவவுக்கும் இதுகளில ஈடுபாடும் ஆர்வமும் இருந்ததால் என்ர நடவடிக்கைகளுக்கு அவ எதிர்ப்புத் தெரிவிக்கல்ல.

❒ **வேறு என்ன துறைகளில் உங்களது கலையார்வம் சென்றது**


○ அதில தம்பி வடமோடிக் கூத்துக்களில வீசாணம், பொடியடி, றத்து, எட்டடி, குதிரைத்தாளம் எண்டெல்லாம் வரும். இதுகள் ரொம்பக் கஸ்ரமான ஆட்டங்கள். இதுகளப் பழக்கி களரி வரைக்கும் கொண்டு போக அரும்பாடு படவேணும் தென்மோடியில பூமுடி, தட்டுப்பு

இதுகள் இருக்கும். ஒருதரம் இத்தாலி ராசன் வரவு. நான் உடுப்புக்கட்டி களரியில ஏறி ஒரு பாட்டு எடுக்க மந்திரத்தால சுட்டிப் போட்டானுகள். அதில பெரிய அவதிப்பட்டு - இப்படியாகத்தான் கலைப்பணி செய்து வந்தனான்.


❑ உங்கட கலைப்பணிய பாராட்டி சமூகத் தொடர் ஆணைக்குழு உங்கள கௌரவிப்பதையிட்டு உங்களது கருத்தென்ன

❍ அந்த நாளையில நல்ல உடம்புக் கட்டும் பார்க்க லெட்சணமுமாக இருந்தன். இப்ப வயதுபோய் பல்லும் விழுந்து இரிக்கிற நிலமையில இப்படியொரு கௌரவத்த எனக்கு வழங்குறீங்க. நினைச்சுப் பார்த்தா சந்தோஷமாத்தான் இரிக்கி. எதிர்காலத்தில இந்தப் பழமையான நாட்டுக் கூத்துகள அழிஞ்சி போக விடாம உங்களப் போல ஆர்வம் கொண்டவங்க முயற்சி யெடுத்து பாதுகாக்க வேணுமெண்டதுதான் என்ர ஆசையும் வேண்டுகோளுமாகும்.

இவ்வாறு மூத்த கலைஞர் வி. குருசுமுத்து அவர்கள் இதயந்திறந்து உரையாடி வேண்டுகோளும் விடுத்தார். பழம் பெரும் கலை வடிவமான நாட்டுக் கூத்து மட்டுமன்றி உளளங்களை உருக்கி பக்தி மயமாக நிகழ்த்தப்படும் பாஸ்கா மரபு இக்கிராமத்திலே உண்டு. யேசுவின் திருப்பாடுகளின் காட்சியை பொம்மை களைக் கொண்டு பசான் என்று குறிப்பிடப்படும் இசையோடு கூடிய வாசகங்களுக்கு ஏற்ப மேடை யளிக்கை செய்வது இம்மண்ணின் தனித்துவமாகும். இவை பேணப்பட வேண்டும் என்பது எமது ஆதங்க முமாகும்.



❖ *செவ்வி கண்டவர்*
J. டேவிட்



# வைரவிழாக் கண்ட

## பணியாளர் L.S. அன்ரனி

திருகோணமலை, புனித மரியாள் பேராலயத்தில் கடந்த நாற்பத் தினான்கு வருடங்களாக உபதேசியராகப் பணிபுரியும் **திரு L.S. அன்ரனி** அவர்கள் கடந்த ஜூலை மாதம் 12ம் திகதி தமது பிறப்பின் அறுபது ஆண்டை நிறைத்து வைரவிழாக் கண்டுள்ளார். 1941ம் ஆண்டு பிறந்த இவர் கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக பேராலயப் பங்கில் தொண்டன் சஞ்சிகையை விநியோகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. எட்டுப் பிள்ளைகளின் தந்தையான இவருக்கு ஐந்து பேரப்பிள்ளைகளும் உண்டு. எளிமையும், பக்தியும், அர்ப்பணிப்பும் மிக்க இவர் தமது குடும்பப் பணிகளுடன் ஆலய மற்றும் திருச்சபைப் பணியிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்து வருவது பாராட்டுக்குரியது. தமதுவாழ்வின் பெரும் பகுதியை திருச்சபைக்காகக் கொடுத்து இன்று அறுபதாவது அகவை நிறைத்து நிற்கும் **திரு. L.S. அன்ரனி** அவர்களை இறை அருள் நிறையப் பெற்று நிறைந்த ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ நெஞ்சார வாழ்த்துகிறோம்.

தொண்டன்
ஆசிரியர் குழுவினர்.

# ஏன் ராத்தா அழுகின்றாய்?

✿ சம்மாந்துறை மஷூறா
சது/அல் அமீர் வித்தியாலயம்
சம்மாந்துறை.

சேற்றில் இறங்கி சோற்றுக்கா யுழைக்கும்,
செயினம்பு ராத்தா சிந்துகின்ற கண்ணீரின்
தோற்றம்தா னென்ன? நெஞ்சின் விம்மலிலே,
தொடுத்த திவலைகள் கண்ணீரா யுன்வழியில்,
சீற்றம் கொண்டதுவா ஊற்றாய்ப் பிரவகித்து,
சேற்றோடு கலந்து சோற்றைத் தருகிறதா?

இராத்திரியில் நீயும் ஏன்ராத்தா அழுகின்றாய்?
இன்னல்களின் வடிகால் இரவில்தான் பிறக்கிறதா?
அரக்கப் பரக்க விடிந்தும் விடியாததுமாய்,
அல்லைக்குள் பன்புடுங்க பட்டினியாய்ப் போகின்றாய்,
இரந்து இலட்சங்களை வாங்கும் மாப்பிள்ளைகள்
இங்கு மலிந்ததாலா இரவினிலே அழுகின்றாய்?

ஒட்டுப் போட்ட ஒயில் சேலை கட்டுகிறாய்,
ஒற்றைப் பனையாய் நீ நிற்பதனைத் தவிர்ப்பதற்கா,
சீட்டுப் பிடித்து சீர்செனத்தி சேர்க்கின்றாய்
செப்புகள் பரிமாற கனவு காணுகின்ற,
திட்டம் உனக்குள்ளே இருப்பது நல்லதுதான்,
தேடிவரும் வரன்யாரு எங்கு உள்ளான்?

தாயும் தந்தையும் இழந்து தவிக்கின்றாய்,
தக்கது செய்திடும் அண்ணன்மா ரெங்கே?
சாயும் குணத்தோடு இல்லாள்கள் பின்னாலே,
சாய்ந்தத் நாலுன்னை எண்ண மறந்தாரே?
பேயும் இரங்கும் பெண்பிறவி என்பார்கள்,
பேய்கள் கூட உன்னிடத்தில் இரங்க மறுத்ததுவா?

முற்றிய கருப்பங் கழியாய் நிற்கின்ற
முக்காட்டுக் கிளியே உன்னைச் சிறையெடுக்க - மன
மாற்றம் அடைந்த மகாராசன் தேரேறி
மணமுடிக்க வருவானா என்றோ அழுகின்றாய்?
சீற்றம்நீ கொள்ளாதே கண்ணீரே தீயாகி
செகமே எரிந்துவிடும் மாப்பிள்ளைகள் மடிந்துவிடும்.

உலகில் வாழும் எந்த உயிரின் செயற்பாட்டுக்கும் மத்திய ஸ்தானமாய் இருப்பது அதன் இருதயமே என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. எனவே உடலுறுப்புக்களில் மிகவும் பெறுமதி வாய்ந்ததும் மதிப்புக்குரியதும் புகழ்ச்சிக்குரியதும் அந்த இதயமே என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

அப்படியாயின் இறைவனின் திரு இருதயம் எத்தனை மேலானது என்பதை விளக்க வேண்டியதில்லை.

ஆம். அந்த யேசுவின் திரு இருதயத்துக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட பங்கு எங்கள் கல்முனைப் பங்கு எனக் கூறும்போது என் பேச்சில் ஓர் உறுதி என் மூச்சில் ஒரு சக்தி, எங்கள் பங்கு மக்கள் கொடுத்து வைத்தவர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா!



எங்கள் பங்கு எவ்வாறு செயற்படுகிறது என்பதைக் கூற விரும்புகின்றேன். இங்கு மரியாயின் சேனை, திருப்பாலத்துவ சபை, புனித வின்சன்டி போல்சபை, இளைஞர் ஒன்றியம், மேய்ப்புப்பணிச்சபை என்னும் பக்திச் சபைகள் ஒழுங்காக இயங்கி வருகின்றன. காலஞ்சென்ற அருட்சகோதரி லொறல்லியாவினால் ஆரம்பிக்கப்பட்டு சமீப காலத்திலிருந்து கார்மேல் சபை இயங்கி வருகின்றது. எங்கள் பங்கு பாண்டிருப்பு மணற் சேனை நற்பிட்டிமுனை, பாத்திமாபுரம், கல்முனை என நாலு வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு தமது வளர்ச்சியில் கவனம் செலுத்துகின்றன. ஒவ்வொரு வட்டாரமும் மாதத்தின் நான்கு ஞாயிறு 2ம் திருப்பலியை சிறப்பிக்கின்றது. வாரத்துக்குரிய வட்டார மக்களே திருப்பலியின் முன்னுரை, வாசகங்கள் மன்றாட்டுக்களைத் தம்மிடையே ஒழுங்கு செய்கின்றனர். ஒவ்வொரு வாரத்திருப்பலியையும் அவ் வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு குடும்பங்கள் நிறைவு செய்கின்றன.

இதே போல தவக்காலச் சிலுவைப்பாதை அவ் வாரத்திருப்பலி தேவாலயத் திருநாளுக்கு முன் நடைபெறும் நவநாட்கள் அனைத்தையும் நான்கு வட்டாரங்களும் பொறுப்பேற்று நடப்பிக்கின்றன. முன்னர் வட்டாரமக்களின் பொறுப்பிலிருந்த பாடகர் குழு அருட்பணி I. ஜோசப் அவர்களின் வருகையின் பின்னர் கார்மேல் சபைக் கன்னியர்களிடம் பொறுப்பளிக்கப்பட்டது. இதனால் நாடோறும் நடைபெறும் திருப்பலியிலும், விசேட திருநாட்கள் திருப்பலியிலும் பாடகர் குழுவே பாடல்களுக்குப் பொறுப்பாய் இருந்து வருகிறது.

## எங்கள் கல்முனைப் பங்கு

சிலகாலமாக வட்டாரங்கள் ஊக்கமிழந்து காணப்படுவது வேதனைக்குரியதே. எனினும் வட்டாரக் குழுத்தலைவர், செயலாளர், பொருளாளர் அங்கத்தவர்கள் ஒத்துழைப்பாலும் ஊக்குவிப்பினாலும் அது மீண்டும் சிறப்பாகச் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. திவ்விய நற்கருணை பெறுதல் உறுதிபூசுதல் பெறுதல் என்பவற்றில் விசேட வகுப்புகள் நடாத்தப்படும். அருட்சகோதரிகள், அருட்சகோதரர் உட்பட மறையாசிரியர்களும் மறைக் கல்விக்கும் ஏனைய விசேட அருட்சாதனங்கள் பெறுவதற்கும் கற்பிக்கின்றனர்.

மரியாயின் சேனையினர் வீடுகளைச் சந்திப்பதிலும் வைத்தியசாலை, நோயாளரைச் சந்தித்தலிலும் செபிப்பதிலும் கரிசனை காட்டி வருகின்றனர். புனித வின்சன்ற் டி போல் சபையினர் வாரந்தோறும் வீடுகளுக்குச் சென்று பணமும், அரிசியும் பெற்று வருவதுடன் அவற்றை வாரந்தோறும் குறிக்கப்பட்ட ஏழைகளுக்கு ஞாயிறு வாரங்களில் 2ம் திருப்பலி முடிந்ததும் கொடுத்தும் வருகின்றனர். திருநாட் காலங்களில் தங்கள் தங்கள் நவநாட்களைச் சிறப்பிப்பதுடன் திருநாட் கொண்டாட்டத்திற்கும் தம்மாலியன்ற பண உதவி செய்கின்றனர். பீடத்துக்குரிய சீலைகளையும் அலங்காரப்பூக்கள் விளக்குகளை வழங்குவதிலும் பங்கு மக்கள் கவனஞ் செலுத்துகின்றனர். திருநாட்காலத்தில் நடைபெறும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்திற்கும் அவ்வப் பகுதிமக்கள் தெருக்களை அழகு செய்து வைப்பது வழக்கம். ஆம் இவ்வேளைகளில் அப்பகுதிகளில் இருக்கும் இந்துக்களும் தங்கள் வீட்டின் முன்னிலையில் படம் வைத்து அலங்காரஞ் செய்வது குறிப்பிட வேண்டிய தொன்றாகும்.

கல்முனைப்பங்கில் இருதயப் பேராலயமன்றி பாண்டிருப்பில் புனித அந்தோனியார் சிற்றாலயமும், கல்முனையில் வேளாங்கண்ணிமாதா சிற்றாலயமும், காரைதீவில் குழந்தை யேசு சிற்றாலயமும், மணற் சேனையில் புனித அந்தோனியார் சேத்திரமும் அமைந்துள்ளன. இச்சேத்திரம் தவிர்ந்த ஏனைய சிற்றாலயங்களில் குறிக்கப்பட்ட தினங்களில் திருப்பலி நிறைவேற்றப்படும். இன்னும் திங்கட்கிழமைகளில் கார்மேல் கன்னியர் சிற்றாலயத்திலும்

புனித வளனார் சிற்றாலயத்திலும் காலைத் திருப்பலி நிறைவேற்றப்படும். ஞாயிறுதோறும் காலை 9 மணிக்கு காரைதீவு குழந்தையேசு தேவாலயத்திலும் திருப்பலி நிறைவேறும். இத்தனைக்கும் எங்களுக்குப் பங்குத்தந்தை ஒருவரே இருப்பது கவலைக்குரியதே. துணையாக ஒரு குருவானவர் செயற்பட்டால் இன்னும் கூடிய பயனைப் பெற முடியும்.

எங்கள் பகுதியில் தேவ அழைத்தல் குறைவாக இருப்பது மிக வேதனை தருவதொன்றாகும். கன்னியர்களும் அருட்சகோதரர்களும் மக்களைத் தரிசித்து அடிக்கடி உறவாடுதல், உரையாடுதலால் நற்பயன் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன். எல்லாம் வல்ல இறைமகன் யேசுவின் ஆசீர் கிடைக்க வேண்டுவோம்.

**தகவல்: திருமதி றோஸ்**

# மீண்டுமொரு முறை

D. ஸஹ்ரானா
கல்முனை

அதோ தெரிகிறதே - அது
சித்தார்த்தனை
செதுக்கிய
போதி மரமென்று
பொய்யுரை வேண்டாம்

சகட்டு மேனிக்கு
சமாதானம் பேசிட
நிழல் தரும் இனவாத மரம்
அண்ணாந்து பாருங்கள்
அதன் கிளைகளில் கூட
ஆயுதப் பூக்கள்



இவர்கள் சமாதானப்பேச்சுக்கள்
சிகரங்களையே தாண்டுகின்றன
உள்ளொன்று, உதட்டிலொன்று
அடக்கு முறையே
ஆட்சிக் கோலம்

ஷெல்மாரி பொழியும்!
உடலங்கள்
சல்லடையாய் சிதறும்
ஆனாலுமிங்கே
சிறுபான்மையினத்திலே
சிலகாலம் வாழ்ந்திருப்பான்

சத்தியத்தைப் பற்றி
சத்தியமாய் பேசமாட்டான்
அதிகார வர்க்கத்தின்
எச்சங்கள் ஒழியும்வரை
ஏதோ ஒன்றை
ஏந்திடுவான் திருக்கரத்தில்
எரிமலையாய் வெகுண்டெழுந்து
புரிந்திடுவான்
தர்மயுத்தம்.

## 11ம் பாடம்

## மக்களின் அனுபவத்திலிருந்து நூல்வடிவம் பெற்ற திருவிவிலியம்.


* இஸ்ரயேல் வரலாற்றின் ஆண்டவர் "யாவே" எனப் படுகிறார். மழை, வெயில், குன்று, மலை, பாலை வனம்,விளைச்சல் என்பவற்றைப் போன்று எதிரி களின் சூழ்ச்சிகள், வெற்றிகள் ஆகிய யாவற்றின் வழியாகவும் இறைவன் செயலாற்றுவதை அவர்கள் கண்டு கொண்டனர்.
* இஸ்ரயேல் குலத்தந்தை ஆபிராமில் ஆரம்பமானது.
* இஸ்ரயேல் வரலாற்றின் முக்கிய சம்பவம் விடுத லைப் பயணமாகும்.
* தம்முடன் பயணஞ்செய்த யாவேயின் அளவற்ற அன்பு சக்திவாய்ந்ததெனக் கண்டனர்.
* இஸ்ரயேல் வரலாற்றில் மட்டுமல்லாது, நமது வர லாற்றிலும் இறைவன் நம்முடன் மிகவும் சமீப மாகப் பயணஞ் செய்கிறார்.
* எம்முள் செயற்படும், இறையன்பு, மன்னிப்பு, சுகம், இரக்கசிந்தை , மன அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி என்பன இறை செயற்பாடுகளே என அறிவோம்.
* ஆதித்தந்தையர் காலத்தில் இறைவனாக "எல்சா டாய்" எனும் பெயரில் வணங்கிய நிலை ஆபிராமின் வம்சத்தார், மோசேயின் காலத்தில் "யாவே" எனமாறியது.
* மோசேக்கு எரியும் முட்செடியின் வழியாக காட்சி யளித்த இறைவன் தம்மை "யாவே" என அறிமுகஞ் செய்தார். யாவே என்றால் "தாமாய் இருப்பவர்" என்று பொருள்.
* விடுதலைப் பயணத்தின் வழியாக இறைவன் ஒரு வரே நம் மீட்பரென இஸ்ரயேலர் அறிந்து கொண் டனர்.
* யாவே வல்லமை மிக்க இறைவனென விளங்கிக் கொண்டனர்.
* பன்னிரண்டு கோத்திரங்களாகப் பிரிந்து வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் மோசேயின் தலைமையில் ஒரே இறைவனை யேற்று ஒற்றுமையாகச் செயலாற்ற ஆரம்பித்தனர்.
* யாவேயின் அன்பு, பாதுகாப்பு, இரக்கம், மன்னிப்பு, வழிநடத்துதல் ஆகியவற்றைப் பற்பல விதத்தில் கண்டுகொண்டனர்.
* சீனாய் மலையடிவாரத்தில் இறைவனைச் சந்தித் ததன் பின் இஸ்ரயேலரின் வாழ்வில் மாற்றமேற் பட்டது. இறைவனைப்பற்றியும், தம்மைப்பற்றியு மிகுந்த எண்ணங்கள் மாறின.
* தமது தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களென்ற அந்தஸ்தைப் பெற்ற இறையன்பைப் பெற்றனர்.
* பத்துக்கற்பனைகள் இறையன்பின் அதிசிறந்த அடையாளமாக விளங்கியது. இதன்மூலம் இறைவ னுடன் உடன்படிக்கை வழியாக இணைக்கப் பட்டனர்.
* அவர்கள் இறைவனை அரசனாகவும், ஆண்ட வராகவும், தந்தையாகவும் ஏற்றுக் கொண்டனர்.
* தாம் இறைவனுக்குப் பணிந்திருக்கும் மக்களா கவும்,இறைவனின் பிள்ளைகளாகவும் வாழ வாக் களித்தனர்.

# மாணவர் பக்கம்

க.பொ.த (சாதாரணம்)

–சுத்தோலிக்கம்–

மெற்றில்டா



### உடன் படிக்கை

* உடன்படிக்கைகள் பலவற்றைப்பற்றி நாம் உலகவாழ்வில் அறிந்திருக்கிறோம்.
* மனித - மனித உறவில் ஏற்படும் உடன்படிக் கைகளை விட இறை - மனித உறவில் ஏற்படும் உடன்படிக்கை சிறப்புமிக்கது.
* இறை - மனித உடன்படிக்கையின் ஆரம்பகர்த்தா இறைதந்தையாவார்.
* இறைவன் தனது உடன்படிக்கையின் உறுதிப் பாட்டை நிறைவு செய்வார்.
* இதில் வாக்குறுதிகளை முன்வைத்தவர் இறைவனா வார்.
* கிறி ஸ்தவ வாழ்வும் ஒரு உடன்படிக்கை வாழ் வாகும்.

> வாழ்வில் மறைந்து கிடக்கும் சில நியாயங்கள் இருக்கின்றன அவைதான் நம்மை வழிநடத்திச் செல்கின்றன.
>
> *தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன்.*

அரசர் காலத்தில் எழுத்து வடிவம் பெற்றவை

* கி.மு. 2000 - 1200ம் ஆண்டு வரையில் யாக்கோபின் பரம்பரையினர் தொடர்பான வரலாறும். ஆபிரகாமின் பரம்பரையினர் தொடர்பான வரலாறும் வாய்மொழியாகக் காணப்பட்டன.
* வாய்மொழியாக நாட்டுப்பாடல்கள் நாட் டுக்கதை கள் அன்று காணப்பட்டன.
* கி.மு இஸ்ரயேல் மக்களாகத் தோன்று கையில் வாய்மொழி பாரம்பரியச் செய்தி யாக வந்த நீண்ட கதைகள், அவர்களது உரிமைகளாயின. அவை ஜே. ஈ.டீ.பி என அழைக்கப்படுகின்ற இவை எல்லா நூல் களிலும் முதன்மை பெறுகின்றன.
* குலமுதுவர் காலமுதல் சவுல் அரசன் காலம் வரை வாய்மொழியாக இருந்து வந்த திருவிவிலிய நூல்கள், சாலமோன் அரசனது காலத்தில், அதாவது கி.மு. 950ல் முதன்முதல் நூல்வடிவம் பெற்றது. திருவிவிலியத்தின் அதிகமான பகுதிகள் 'ஸ்கிறோல்' என்ற ஏடுகளில் எழுதப் பட்டன.
* கி.மு. 450ல் குருக்கள் மரபிற்கு வித்திட்ட ஜெரு சலேம் குருக்கள் திருவிவிலியத்தின் இந்நான்கு மரபுகளையும் ஒன்றிணைத்து நூலாக்கினர்.

வாய்மொழி மரபு நூல்வடிவம் பெற்றமைக்கான காரணிகள்

* இஸ்ரயேல் மக்கள்பெற்ற இறையனுபவங் களின் கருத்து வேறுபடாமல் கொண்டு செல்வது.
* தேவாலயம் கட்டியெழுப்பப்பட்டதுடன், அதன் வழிபாடு கள் தொடர்பாக விசுவாச அனுபவங்களைப் பகிர்வது.
* இறைமக்கள் விசுவாச அனுபவங்களை ஊட்டம் பெறச்செய்வது
* திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவை கற் பனைக் கதைகளல்ல. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் வாழ்ந்த மக்களின் உண்மை அனுபவங் களாகும்.
* வாழக்கைப் பயணத்தில் கண்டுகொண்ட என்றுமிருக் கின்ற ஒரே இறைவனைப்பற்றிய விளக்கங்களாகும்.

12ம் பாடம்
பழைய ஏற்பாட்டை நிறைவுசெய்யும் புதிய ஏற்பாடு

* 'என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக் கப்படும் என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆனால் நீங்கள் அதைக் கள்வர் குகையாக்குகிறீர்கள் என்று அவர்களிடம் சொன்னார்' (மத்தேயு 21:13)

இயேசு உண்மையான யூதர்

* சிறுவயதிலிருந்தே யூத சமயம், பழக்க வழக்கங்கள் ஆகிய வற்றிற்கேற்ப வாழ்ந்து வந்த இயேசு ஒரு யூதர்.
* 'தோரா' அல்லது இறைவார்த்தையை உயிருக்கும் மேலாக மதித்த யூதரைப் போல அவரும் மதித்து. அதன்படி வாழ முயற்சித்தார்.
* வளர்ந்த பின் சில முக்கிய கருத்துக்களை முன்வை த்தார்.
* அன்பின் சமுதாயத்தை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த மோசேயின் சட்டப்பிரமா ணங்கள் அல்லது இறைவாக்கு திரிபடைந்து மனிதனை மனிதனிடமிருந்து பிரிப்பதைப் போலவே மனிதனை இறையிடமிருந்து பிரிக்கும் சட்ட திட்டங் களை உருவாக்கியிருப்பதைக் கண்டார். சட்டத்தை இறைவனை விட மேலாக மதித்தனரென இயேசு கண்டார்.
* பணம், பதவி, சட்டதிட்டங்களுக்கு முதலிடமளித்து ஏழைகளை வருத்திச் சட்டங்களை மேலாக மதித்து வந்த யூதருக்கு இயேசு சவால் விடுத்தார்.

கிறிஸ்துவின் அறிவுரைகள்

* புறச்சட்டங்களை நாம் ஏற்றுக்கொண்டு நடந்தாலும் நமது ஆன்மா அசுத்தமாக இருந்தால் பயனில்லை
* கட்டளைகளை உண்மையாகவே கடைப்பிடித்து நடந்தால் இறைவனின் அன்பையும் நீதியையும் பெறுவர். அவர்கள் ஏழைகளுக்கும் துன்பப்பட்டு பவர்களுக்கும் உதவி செய்வர்.
* கற்பனைகளைக் கற்பிப்போர் முதலில் மற்றவர்க்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும்.
* உண்மையான விசுவாசம் உண்மையான சகோதர உறவைக் கட்டியெழுப்பும்.
* நீதி, நேர்மை, பேரன்பு ஆகிய இறையாட்சியின் பிரதான பண்புகள் மூன்றும் நாம் இறைவனையறிய ஏதுவாகின்றன.
* அநீதி காரணமாக வேதனைப்படும் மக்களைச் சந்தித்து அவர்களது வேதனையில் பங்குகொண்டு அதிலிருந்து அவர்களை விடுவிக்கக் கிறிஸ்து வழிவகுக்கிறார்.

இறைவனை இயேசு வெளிப்படுத்துகிறார்.

* இறைவனின் நிறைவை வெளிப்படுத்தும் இயேசு நம் வாழ்நாள் முழுவதும் அன்பும் நேர்மையும்,

உள்ளவராக வாழ்ந்தார். அவர் நமக்கு வழியும், உண்மையும், வாழ்வுமாக இருக்கிறார்.

* கிறிஸ்து உலகுக்கு நற்செய்தியைப் பரப்ப வந்தார். மனித இனத்தாரனைவரும் உரிமைகளைப் பெற்று நேர்மையாக வாழவேண்டுமென்பதே அவரது குறிக் கோள்.
* இவ்வுலகில்இயேசுவின் நண்பராக இருந்தோர் ஏழைகள், பாவிகள், நோயாளர், விபசாரிகள், வரிவ சூலிப்பவர்கள், போன்ற சமுதாயத்தால் ஒதுக்கப் பட்டவர்கள் ஆகியோர் நேர்மையின் இறைவன் துன்புறுவோர் பக்கமிருந்தார்.
* புதிய ஏற்பாட்டினடிப்படையாகிய இயேசு இறைவனின் நீதிபற்றி விளக்கமாகக் கூறுகின்றார். மத்தேயு 23:23
* இறைவனையடையவும், அவரைப்போலாகவும் வழிசெய்யும் நீதி, நேர்மையை இறைவனிடமிருந்து பெற்று அதைத் தன்னலத்தால் தனதாக்கிக் கொள்வது பிழை.
* ஒருவன் தன் வாழ்நாளில் அநீதியின் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு உண்மையான சகோதரத் துவத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டுமென இறைவன் இறைவாக்கினர் வழியாக இஸ்ரயேல் மக்களுக்குவிடுத்த செய்தியை இயேசுவுமறிவித்தார். மத்தேயு 225: 31 - 46
* இறைவனின் உண்மையையும், நேர்மையையும் வாழ்வில் கடைபிடித்து நடக்க வேண்டிய முறைபற்றி உவமைகள் மூலம் இயேசு போதித்தார்.
* லூக்கா நற்செய்தி 12: 16 -21 பகுதியின்படி இறைவன் சகலரும் சகலமும் பெறவேண்டுமென விரும்புகிறார் என இயேசு விளக்கினார்.
* மக்களனைவரும் நேர்மையான வாழ்வை வாழ வேண்டுமென்பதே இறைவனின் குறிக்கோள்.
* இயேசு தம் வாழ்வு முழுவதும் இறை பற்றியும், அவரது அன்பு, நேர்மை, பற்றியும் மக்களுக்கு எடுத்துரைக்கத் தம்மை அர்ப்பணித்தார்.
* இறைவனின் நீதி, நேர்மைக்கும், பூரணத்து வத்துக்கும் சான்று பகர்ந்த இயேசு அவரது மக்க ளான நம்மிடமும் அதையே எதிர்பார்க்கிறார்.

<u>கற்பனைகளை நிறைவுசெய்த இயேசு</u>

* இறைமக்களாக வாழ இறைவனளித்த கட்டளை களும் நீதிச்சட்டங்களும் உட்படப் பத்துக்கற் பனை கள் இயேசுவின் புதிய கட்டளைகள் மூலம் நிறைவு பெற்றன.

* இயேசு எம்மைப்போன்ற பலவீனமான மனிதனாகப் பிறந்து எம்மை அன்புசெய்யும் முதற்படியை ஆரம்பித்தார்.
* இறையாட்சியை உண்மையாக்கும் முறையைக் கற்பித்தார்
* எமை மீட்க உயிர்ப்பலியானார்.
* இயேசு கற்பனைகளை நிறைவுசெய்ய நால்வகைக் கற்பித்தல் முறைகளைக் கையாண்டார்.

# சிந்தனைக் கதை

அவள் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி. அமெரிக்காவில் வழக்கறிஞராகப் பணிபுரிகிறார். கம்பிரமான ஒரு நிர்வாகியின்உடை கையிலே ஒரு தோல் பெட்டி, வேகமாக முன்னுக்கு வந்துகொண்டி ருக்கும் எடுப்பான தோற்றம் அதிகாரமும் கட்டுப் பாடும் அவளைச் சுற்றி காற்றில் மிதப்பதுபோல் தெரிகிறது

வீட்டுக்கு வந்தாள். அவளது மகன் வால்டர் ஓடிவந்தான். அவனைத் தடவிக் கொடுத் தாள். ஏதோ கேட்டாள் 'சாப்பிட்டாயா? நல்ல பையனாக இன்று நடந்து கொண்டாயா?

தன் பெட்டியைத் திறந்தாள். போன்விலாசப் புத்த கத்தை எடுத்தாள். டெலிபோனைச் சுழற்றினாள் தலைமயிரைத் தள்ளியவாறு.

'அம்மா!' என்றான் குழந்தை

'அம்மா போன் செய்யப் போகிறேன்: மாடிக்குப் போய் விளையாடு' அம்மாவின் கட்டளை.

வால்டர் பதில்பேசவில்லை, மாடிக்குப் போக நடந்தான்

ஒரு யோசனை. ஒரு கணம் திரும்பினான் 'அம்மா! அந்தப் புத்தகத்தில் என்ன இருக்கிறது?

இதில் முக்கியமானவர்களின் விலாசமெல்லாம் இருக்கிறது. நான் சிலருடன் இப்போது பேச வேண்டும்!'

வால்டர் தயங்கிவாறே கேட்டான்

'அம்மா! அதில் என் பெயர் இருக்கிறதா?"


# தொடர்பு சாதனங்கள் உருவாக்கும் புதிய கலாசாரமும் நற்செய்திப்பணியும்

அருட் திரு. S.A.I மத்தியு SSJ

தொடர்பு சாதனங்களின் பெருக்கத்தாலும் விரைவினாலும் உலகம் ஒரு குக்கிராமமாகிவிட்டது. ஒரு கிராமத்தில் நடக்கும் நிகழ்வுகள் அக்கிராம மக்களுக்கு எட்டும் முன்பதாகவே உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெறுகின்ற முக்கிய செய்திகள் நம்மை வந்தடைகின்றன. இந்தத் தொடர்பு சாதனங்கள் உலகை ஒன்றாக்கும் புதிய கலாசாரங்களை உருவாக்குகின்றன. வியாபார நோக்கில் உருவாகும் புதிய கலாசாரத்தினால் இளையோர் முதல் முதியோர்வரை போலி மதிப்பீடுகளினாலும், இன்ப உணர்ச்சிப் போதையினாலும் தாக்கப்பட்டு வன்செயல்கள் அதிகரித்து, பெற்ற பிள்ளைகளே தம் கருத்துக்கு இசைவுறாத பெற்றோரைக் கொலை செய்வதும், பாலியல் வன்முறைகளும் கொலைகளும், கொள்ளைகளும் போலி இன்பங்களினால் வெறுமையும் வெறுப்பும் அடைந்து தற்கொலைகளும் பெருகிவருகின்றன. இந்தச் சூழ்நிலையில் இளையோர்கள் பிறந்து வளர்ந்து இதே சூழலின் பண்பைப் பெற்று வீணர்களாவதா? புதிய சவால்களை ஏற்பதற்கு நற்செய்திப் பணி: வன்முறைகளுக்கும் போலிகளுக்கும் முகம் கொடுக்கும் பாவனையில் புதிய தொடர்பு சாதன வாகனங் களில் ஏறி முழு மூச்சுடன் செயற்படுவது அவசியமும், அவசரமுமானதும் ஆகும்

இன்றைய நவீன தொடர்பு சாதனங்களான செய்மதி மூலமும் வானொலி தொலைக்காட்சி மூலமும் கோடிக்கணக்கான பத்திரிகைகள் சஞ்சிகைகள் மூலமும் செய்திகளும் விளம்பரங்களும் ஆபாசங்களும் அழிவுகளும் வெளிவருகின்றன. இதற்கு வளர்ந்து வரும் நவீன கணினி தொழில் நுட்பம் பெரும் ஆதாரமாக அமைகின்றது. ஆமை வேகத்தில் சென்ற ஒரு கால உலகு கணினியினால் ஆயிரம் குதிரைகளின் வேகத்தைவிட ஒளியின் வேகத்தில் உலகைச் செல்லவைக்கின்றது.

இன்றைய உலகின் நற்செய்தியைப் பரப்புவதற்காக யேசுபகவான் மீண்டும் இவ்வுலகிற்கு வருவாரேயானால் அவர் பலஸ்தீன நாட்டில் கால் கடுக்க நடந்து சென்று மலைமேல் இருந்து அல்லது கடலில் படகில் இருந்து இயற்கையைக் கருவியாகப் பயன்படுத்திப் போதிக்க மாட்டார். நவீன தொடர்பு சாதனங்களின் ஊடாக விமானங்களில் பறந்து அவரவர் மொழியில் அவரவர் தரத்திற்கு ஏற்ப தம்போதனைகளை ஆற்றுவார். D. S அமலோற்பவதாஸ் அடிகள் ஒரு சமயம் விவிலிய கருத்தரங்கு ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.



இன்று இலங்கை போன்ற நாடுகளில் 50 சதவீதமானவர்கள் தொலைக்காட்சியை சொந்தமாக வைத்திருக்கின்றார்கள். வீடுகளில் நாள் முழுவதும் இயங்கும் தொலைக் காட்சியில் மக்களை மயக்கும் ஏராளமான விளம்பரங்களும், இளம் சமுதாயத்தினைக்கவரும் ஆபாசப் படங்களும் அதிகரித்துள்ளன. அதைவிட எப்படி கொலைகள் நடைபெறுகின்றன, எப்படி கொள்ளைகள் இடம் பெறுகின்றன என்பன போன்ற படங்களுக்கு மவுசு இருப்பதனால் அதைப்பயன்படுத்தி நவீன முறையில் கொள்ளைகளும். கொலைகளும். குரோதங்களையும் விரோதங்களையும் தீர்த்தக் கொள்ள வழிமுறைகளையும் வகுத்துக்கொடுக்கின்றன. பண்டைய பாரம்பரிய கலை, இசைக்கு பதிலாக கீழான உணர்ச்சிகளைத் தூண்டும் ஒலிச்சித்திரங்கள் மலிந்துவிட்டன. வீடியோப்படங்கள் மிகப் பெருமளவில் மலிந்துவிட்டன. வாழ்க்கை வரட்சியுற்றிருக்கும்போது இவ்வீடியோப்படங்களில் ஏராளமானவை மக்களின் மனதிற்கு இதத்தை வழங்கி இதயங்களை போலித்தன்மைகளும், பொல்லாத நினைவுகளும் பூத்து மலர்கின்ற விளைநிலமாக மாற்றுகின்றன.

இன்று, வினாடி ஒன்றிற்கு தொழில்நுட்பத்தின் விரைவு காரணமாக இலட்சக்கணக்கான பத்திரிகைகள், அவற்றை விற்பனை செய்வதற்காக விளம்பரங்களையும் ஆபாசப்படங்களையும் நிரப்பி மனித விழுமியங்களை மழுங்கடிக்கச் செய்கின்றன. சமயங்களையும், நல்ல விழுமிய கருத்துக்களையும் தாங்கிவரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மிகக் குறைவே.

இவ்வேளையில் இளம் தலை முறையினருக்கு ஒரு புதிய உலகைப் படைப்பதற்கு நவீன உத்திகளை கையாண்டு வெகுசனத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். இளம் கலைஞர்களும், எழுத்தாளர்களும் உருவாக்கப்படுதல் அவசியம். மொழிபெயர்ப்புத் துறை வளர்ச்சியடைய வேண்டும். பல்வேறு மொழிகளிலும் வருகின்ற நல்ல விழுமியக்கருத்துக்கள் மொழிபெயர்க்கப் பட்டு மக்களுக்கு நன்கு பரிச்சயமான மொழியிலே, மன

தைக் கவரும் முறையிலும் கருத்தைக் கவரும் பாங்கிலும் மலிவான விலையிலும் அவற்றை வாங்கிப்படிக்கும் வாசகர் குழுவை வளர்த்தலும் அவசியம்.

நவீன கலாசாரங்களினால் வருகின்ற அழிவினை, AIDS போன்ற நோய்கள் பரவுதலை தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, சஞ்சிகை, ஒலி நாடாக்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரம் வாயிலாக பரப்புதல் அவசிய மாகும்.

அதிவேக ஜெற் விமானத்தின் பெருக்கத்தினால் உல்லாசப்பயணத்துறை வளர்ச்சியடைந்து பெருந்தொகையான உல்லாசப்பயணிகளின் வருகையால் நம்நாட்டு நல்ல கலாசாரங்கள் பாதிக்கப்படுகின்றன. உல்லாசப் பயணங்கள் மூலம் நாடுகள் பெறுகின்ற பணவருவாயை விட விழுமியங்களின் பாதிப்புக்களே அதிகமாகும். ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் உயர்வான விலைக்கு கலாசாரங்களை அடகு வைத்து விற்பனை செய்யும் நிலையங்களாக ஒரு புறம் இருக்க உல்லாசப்பயணிகளை ஈர்க்கும் சுற்றுச் சூழலில் சேரிவாழ் மக்கள் தம்கற்பினை விலைபேசி நிற்கும் அவலமும் இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கிலும் நாம் காணும் தெளிவான காட்சிகளாகும்

வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் உலகிற்கு பெரிய நன்மைகளையும் அளித்துள்ளன என்பதை மறுத்தற்கு இயலா. இந்த வேளையில் இந்தத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி மக்கள் பிறழ்வான நடத்தைக் கோலங்களுக்கு இட்டுச் செல்லப்படாது தடுப்பதற்கு ஒரு போர் நடாத்த வேண்டியுள்ளது. நற்செய்திப் போதனைகள் ஒரு மகத்தான உல கைச் சமைப்பதற்கு என்றும் இல்லாதவகையில் இன்று பொருள் பொதிந்து மக்களை அழிக்கும் கலாச்சாரத்திலிருந்து மீட்க போதுமான நல்லாயுதங்களைக் கொண்டுள்ளன. இந்தப் பூமியை புண்ணிய பூமியாக்குவதற்கு நறிசெய்தி போதுமானதாகும்.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் தம்மை வளர்த்துக்கொள்வதற்காக அன்றி தம்மை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும் பெரும் பிரயத்தனத்தைச் செய்து, மக்களின் பெரும்பாலானவரை சந்தைக்களமாக்கி குறிக்கோள் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்கி உண்போம், குடிப்போம், நாளை சாவுவந்தால் வரட்டுமே என்ற மனநிலைக்கு மக்களை இட்டுச்செல்வதை மாற்றி நவீனத்துவ முறையில் நற்செய்தி பரப்பும் பயணத்தை விரைவாக ஆரம்பிப்போம்.

புதிய எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், மொழிபெயர்ப்புத்துறை வல்லுனர்களையும் பயிற்றுவிக்கும் கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் நாம் தோற்றுவிக்கத் தவறின் 21ம் நூற்றாண்டு நம்மை அழிவு என்னும் அந்தகாரத்தில் ஆழ்த்திவிடும்.

## கல்முனைப் பங்கு ஈந்த முத்துக்கள்.

01. அருட் திரு. F.M செலர் அடிகள்
02. அருட்திரு. R அரசரெட்ணம் அடிகள்
03. அருட்திரு. T. பயஸ் பத்மராஜா அடிகள்
04. அருட்திரு. A. றேமன் அரசரெட்ணம் அடிகள்
05. அருட்திரு அன்ரனி குருஸ் அடிகள்
06. அருட்சகோதரி. M டொமினிக்கா A.C
07. அருட்சகோதரி. M. மேபிள் A.C
08. அருட்சகோதரி. கொலட் P.C
09. அருட்சகோதரி. கிளேறா ஞானப்பிரகாசம் F.M.M.
10. அருட்சகோதரி. மாறி ஈனிட் A.C
11. அருட்சகோதரி. G. செல்வராணி A.C
12. அருட்சகோதரி. பெப்பத்துவா F.M.M
13. அருட்சகோதரி. எஸ்மி தொக்வஸ் F.M.M
14. அருட்சகோதரி. லோகநாயகி H.F
15 அருட்சகோதரி. மேரி நிலாந்தி A.C
16. அருட்சகோதரி. ஆஞ்சலா H.F

தொகுப்பு
K.M. டெல்கிஸ்
கல்முனை.

# வேட்டை வாளி



கல்முனை மறைக்கோட்ட எழுத்தாளர்களிடையே 'தொண்டன்' நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை

சஞ்சீவி சிவகுமார்

சுவரில் மோதிச் சுருண்டு கிடந்த பின் தன்னை உயிர்ப்பித்துக் கொண்டு பறந்து போனது அந்த வேட்டை வாளி. அது மீண்டும் வரும். என் காதுகளுக்குள் சிணு சிணுக்கும் தன் குஞ்சுகளைத் தரச் சொல்லி என்னைக் கெஞ்சும். ஒரு நிலையில் எனக்குச் சினம் வரும். விசிறி மட்டையை எடுத்து விசுக்கி விடுவேன். ரீங்காரத்துடன் சுருண்டு விழும். நாலு ரவுண்ட்போட்டுவிட்டு மயங்கிக்கிடக் கும். கொஞ்ச நேரத்திற்கு அதன் தொல்லை இருக்காது. மயக்கம் தெளிந்து மீண்டும் எழும். என் காது களுக்கு அருகில் மீண்டும் சிணுசிணுக் கும். விசிறிமட்டையால் திரும்பவும் விசுக்கி விடுவேன். "ஏண்டா வாயில் லாத ஜீவனைப் போட்டு வருத்துறா" அம்மா புத்தனின் போதனைகள் போல அறிவுரை கூறினார். எனக்கு அது விளங் கினாலும் அதை நான் கடைப் பிடித்த தாய் ஞாபகமில்லை. வீட்டின் பின் புறமிருந்த வேட்டை வாளியின் கூட்டை உடைத்து குஞ்சுகளை வெயிலில் எறிந்து விட்டிருந்தேன். அவை உடல் கருகிச் செத்திருக்கும். ஆனால் அந்தத் தாய் வேட்டைவாளி என்னைச் சுற்றிக் கொண்டே இருந்தது. அதன் குஞ்சுகள் என்னிடம் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்குமாக்கும்.

இந்த வேட்டைவாளிக் கூட்டை உடைத்து குஞ்சுகளை எரி வெயிலில் போடுவதால் எனக்கு என்ன லாபம். காலங்கடந்து வலும் ஞானம் போல இத்தனை ஆண்டு கழித்து எனக்குள் இந்தக் கேள்வி ஓடிக் கொண்டிருந்தது.

மண்டபத்தின் ஒரு மூலையில் பெரியம்மா சுருண்டு படுத்துக் கொண டிருந்தா. பெரியம்மாவின் தோற்றம் எனக்கு அந்த வேட்டை வாளியைத்தான் நினை வூட்டியது. லேசான விசும்பலுடன் கண்ணீர் தாரையாக வெளியேறிக் கொண்டிருந்தது. இடையிடையே ஈனக்குரலில் ஏதோ கூறிக் கொண்டிருந்தா. அது தெளிவாக விளங்கவில்லை. நாளைக்கோ மறுதினமோ மீண்டும் படைமுகாமுக்குப்போவா அழுகையுடன் திரும்பி வருவா 'நாங்க உன்ர மகனைப் பிடிச்சு வரவில்லை கரச்சல் படுத்தினா, சுட்டுப் போடுவம் போ..." என்று அடிக்க வாறானுகள். துவக்கை நீட்டிக் கொண்டு வாறானுகள். தூசணத் தால் பேசுகிறானுகள் என்றுகூறி அழுது கொண்டு திரும்பி வருவா இறுதியில் இதே விசும்பலுடன் சுருண்டு படுத்துக் கொண்டு அழுவா. அம்மா ஊற்றி வைத்த தேனீர் பெரியம்மாவின் தலை மாட்டில் ஆறிப்போயிருந்தது. "இந்த தண்ணியையாவது குடியன்" என்று அம்மா அழுத்திக் கூறினார். பெரியம்மா அதை உள்வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. அப்படியே படுத்திருந்தா.

அந்த வேட்டைவாளி இப்ப செத்துப் போயிருக்குமா? ஒரு கழிவி ரக்கம் எனக்குள் பரவியது. பெரியம் மாவை ஒரு தடவை பார்த்துக் கொண் டேன். முகத்தில் மொய்த்துக் கொண டிருந்த இலையான்களை ஒரு கரம் அசைந்து துரத்திக் கொண்டது. அதே விசும்பலுடன் இன்னும் படுத்துக் கொண டிருந்தா. எழுந்து சென்று அந்த வேட்டை வாளிக்கூடு இருந்த இடத்தைத் தேடி னேன். அதன் அடையாளமே இருக்க வில்லை. பல வருடங்களுக்கு முன் நானே உடைந்தெறிந்த கூட்டின் அடையாளத்தை இப்போது தேடுவது முட்டாள்தனமாக வும் இருந்தது. அந்த வேட்டை வாளியை எனக்கு மீண்டும் பார்க்க வேண்டும் போல் இருந்தது. இப்போ தெல்லாம் எங்கள் வீட்டில் வேட்டை வாளி கூடு கட்டு வதில்லை. ஏன் வேட்டை வாளி இனமே அழிந்திருக்குமோ? அல்லது தூர விலகி ஓடியிருக்குமோ? ஒரு இனத்தையே அழித்துவிட்ட குற்ற உணர்வு எனக்குள் வலித்தது.

இரண்டாம் கட்ட்போர் தொடங் கும்போது கண்டால் பிடிப்பானுகளா, பிடிக்கமாட்டானுகளா என்று சொல்ல முடியாத இரண்டுங் கெட்டான் வயது எனக்கு. அம்மாவுக்கு என்னை காட் டுக்கோ கிளியர் பண்ணாத இடத்திற்கோ ஓடச் சொல்ல மனமில்லை. நான் கடைசிப் பிள்ளை. நீ சின்னப்பொடியன் தானே

கிளியர்பண்ணி வரும்போது கோயிலில் போய் இருப்பம். நீ ஓடவேண்டாம் என்றார். பிடித்துக் கொண்டு போவானுகளா? அடிப்பானுகளா? சுடுவானுகளா வெட்டு வானுகளா? என்று அனுமானிக்க முடியாத திகிலில் ஓடித்தப்புவதுதான் ஒரே வழியாக எனக்குத் தெரிந்தது. அதுதான் நான் அசோகனுடன் இருந்த கடைசிக் காலங்கள்.

கட்டுப்பாடில்லாத பகுதிக்கு ஓடுவதென்றால் ஊரின் பின்புறமாக உப்புத்தண்ணிக்கட்டைத்தாண்டி, துரவந்திய மேட்டினூடாக செல்ல வேண்டும் ஏறக்குறைய 10–15 மைல் சுற்றுப் பாதை. வயலும், வரப்பும், நீர்ப்பாசன அணைக்கட்டுமான ஒதுக்குப் புறப்பகுதி.

**செய்த கொலைகளின் எண்ணிக்கையிலும், குற்றங்களின் எண்ணிக்கையினும் யாரையும் வீரன் என்று சொல்வது எனக்கு இப்போதெல்லாம் எரிச்சலாக வந்தது**

ஊரின் எல்லையைக் கடக்கும் போது நெஞ்சில் சிலீரென்றொரு நெருப்பு தீய்த்தது. தாய்நிலத்தை, சொந்தங்களை சிதறவிட்டதான கறுப்பு திரைபோட்டு நின்றது. வனவாசம், சூரன்போர், காவடியாட்டம், கூத்துக்களரி, கோயில்விழா என்று அந்த வயதில் எனக்குப் பிடித்தமான எல்லாவற்றையும் இழந்து விட்டோமே என்ற வெறுமை தெரிந்தது. என்றாலும் உயிர்தப்புவதற்கு ஓடு வதை தவிர வேறுவழி தெரியவில்லை.

நான் யாருடைய சைக்கிளிலாவது தொற்றிக்கொண்டு கடந்தேன். அசோகன் வாயில்லாப் பூச்சி. யாரிடமும் எதையும் கேட்கவோ அதிகம் பேசவோ மாட்டேன். ஓட்டமும், நடையுமாகத்தான் இந்தப்பகுதியைக் கடந்தான்.

எங்கள் வாழ்க்கை (இங்கு வாழ்க்கை என்பது வயதை மட்டும் தான்) அங்குமிங்கும் ஓடுவதிலும், பஸ்கோல்ட், மரநிழல் என்றுமே கழிந்தது. போக்கு வரத்து இரண்டு திசையும் அசைபட்டு நாளாந்த உணவுக்கே போராட்டம் நடாத்தினோம். சிலவேளை மதியச் சாப்பாடு, இரவுச்சாப்பாடு இரண்டுக்கும் பொதுவாக ஏதாவது சாப்பிட்டோம். இந்த நாட்களில் பசிமுகங்களுடன் வீட்டிலிருந்து ஏதாவது வருமா என்று பார்த்துக் கொண்டிருந்தோம்.

அதுதான் அசோகன் என்னுடன் பேசிய கடைசி நாளாயிருக்கலாம். "இப்படிப் பசியோட இருக்கிறத விட வீட்டிலிருந்து சாகலாம் நான் ஊருக்குப்போகப் போகிறேன்".

எனக்கும் இந்த வாழ்க்கை சலித்துப்போயிருந்தது. சலித்துப் போனது என்பதைவிட எந்த நம்பகமும் இல்லாதிருந்தது என்பதுவே உண்மை. இரண்டு பக்கமும் கிளியர் பண்ணிக் கொண்டிருக்கையில் உயிர் தப்புவதற்காக ஒரே பதினைந்து மைல் நெடுங் கோட்டு வீதிக்குள் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்தோம். ஊருக்கே திரும்பி பட்டிப்பளை ஆற்றுப்பகுதியிலுள்ள நாணல் சதுப்பில் ஒழிந்திருப்பது இரவில் வீட்டுக்கு வருவது தான் சரியென்று அசோகன் முடிவெடுத் திருந்தான். எனக்கு அப்படி ஓடுவது பிடிக்கவில்லை. அப்படி ஓடுவதை ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக சாவது போல் உணர்ந்தேன். அங்கு நுளம்பும், குளிரும் சகிக்க முடியாதபடி இருந்தது. ஒரு சில நாட்கள் அங்கு தங்கியிருந்த அனுபவமே எனக்கு தாங்க முடியாதிருந்தது.

இப்படி ஓடிக்கொண்டிருக்கையில்தான் அசோகன் பிடிபட்டான். பிடித்துக்கொண்டு போகிறார்கள், சுட்டுக் கொண்டு போகிறார்கள் என்ற இரு கதைகள் பரவியது. அசோகனைப் பிடித்துவைத்து சுட்டார்கள். அவன் கைகளை உயர்த்துக்கொண்டு துடித்து விழுந்தான் என்று நேரில் கண்டவர்கள் மூலம் அறிந்தபோதிலும் பிடித்துக் கொண்டு சென்றதாகவே பெரியம்மாவிடம் கூறியிருந்தோம்.

அசோகனைக் கொல்லுவது சராசரி மனிதர்களால் முடிந்திருக்காது. அப்படி அப்பாவித்தனமும், குழந்தைத் தனமும் கூடிப்பரவிய முகம். நடந்த இடத்தில் புல்லும்சாகாது என்று அம்மா அடைமொழி கூறுவதுண்டு.

அரும்பமுயன்று தோற்றவை போல அங்கொன்று, இங்கொன்றாக முளைத்து நின்ற பூனைமயிர் மீசை. பால் வடியும் கன்னம், ஆழமற்ற அப்பாவித்தனமான பேச்சு. இவைதான் அசோகனை நினைக்கும்போது மனதின் முன் னிற்கும் அவனது உடல்வாகுகள். இத்தகைய அசோகனை எப்படி இவர்களால் கொன்றொழித் திருக்கமுடியும்.

அவர்கள் எங்கு அசோகனின் முகத்தைக் கவனித்திருக்கப் போகிறார்கள். அவனை எங்கு பேசவிட்டிருக்கப் போகிறார்கள். பேசினாலும் எங்கு அவர்களுக்கு அவை விளங்கியிருக்கப் போகிறது. வேட்டைவாளி என்ன பேசியது என்று எனக்கு விளங்காமல் போனது போல. அவை அனல்வெயிலில் துடித்து கருகிக் கொண்டிருந்தபோது போட்ட ஓலம் வெறும் ரீங்காரமாக மட்டும் எனக்கு தெரிந்தது போல. அசோகனின் மரண அவஸ்தையும் அவர்களுக்கு அப்படித்தான் தெரிந்திருக்கும். உயிர் பிரிந்துவிட்டதை உறுதி செய்ய முன்னமே புதை குழியிலிட்டு மூடியிருப்பார்கள்.

அந்த வேட்டைவாளியைக் கொன்றொழித்ததை எப்படி என்னால் நியாயப்படுத்த முடியும். அது வேறு இனம் அதன் பாஷை எனக்குப் புரியாதது. அதன் தாயின் துயரம் என் தானத்தில் நின்று பார்க்கும் போது தெரியாதிருந்தது என்பதைத் தவிர, அதனைக் கொன்றதற்காக எனது சமூகம் என்னைக் கொலைகாரன் என்று பட்டஞ் சூட்டாது

என்பதையும் தவிர வேட்டைவாளியின் குடும்பத்தையே அழித்ததற்காக, சட்டத்தின் முன் நான் குற்றஞ் சாட்டப்பட மாட்டேன். சட்டம் என்னைக் கவனிக்காது என்பதையும் விட, இந்த வேட்டைவாளியின் கொலையை எப்படி நியாயமென்று கூறப்போகிறேன். என் மனச்சாட்சி என்னை கொலைகாரன் என்று மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டிருந்தது போலிருந்தது.

இதனைக் கொன்று குவித்ததால் எனக்கு எண்ணலாம். சிலவேளை இதனை தீரச்செயலாக நினைத்து எனது சம காலத்தில் யாரும் என்னைச் "சுட்டிப் பயல்" என்று கூறியதை தவிர அம்மா "சரியான துடியன்" என்று எனக்குப் பிடித்தமான வார்த்தைகளால் என்னை திட்டியிருந்ததை தவிர எனக்குள் நானே உணர்ந்து பெருமைப்பட இதில் எதுவுமே இல்லையே! செய்த கொலைகளின் எண்ணிக்கையிலும் குற்றங்களின் எண்ணிக்கையாலும் யாரும் யாரையும் வீரன் என்று சொல்லுவது எனக்கு இப்போதெல்லாம் எரிச்சலாக வந்தது.

எழுந்து சென்று பெரியம்மாவின் தலைமாட்டில் அமர்ந்தேன். கையைத்தொட்டு உசுப்பி "பெரியம்மா தேத்தண்ணியையாவது குடிங்க" என்றேன். என் கண்களும் கலங்கிப் போயிருந்தன. என்ன நினைத்தாரோ தெரியவில்லை. எழுந்து குந்திக் கொண்டார். பெரியம்மாவின் உடல்

**இத்தனை உயரம் பொருப்பத்துக்கு வளர்த்தெடுத்த பிள்ளையை இந்த கொள்ளையில போவானுகளிட்ட கொடுத்திட்டு எப்படி மகனே உயிரோட இருக்க முடியும்**

ஒடுங்கிப்போயிருந்தது. முகம் வாடிவதங்கியிருந்தது. கைகளில் லேசான நடுக்கம் தெரிந்தது. அழுதழுது கண்கள் சிவப்பேறியிருந்தன. என் தோள்களோடு தலையைச் சாய்த்துக்கொண்டார். "இத்தனை உயரம் பெருப்பத்திற்கு வளர்த்தெடுத்த பிள்ளையை இந்த கொள்ளையில போவானுகளிட்ட கொடுத்திட்டு எப்படி மகனே உயிரோட இருக்க முடியும் தின்னக் குடிக்க மனம் வருமா? நான் இன்னும் எதுக்கு உயிரோட இருக்க வேண்டும்" பெற்ற வயிறு பற்றுதேடா, நான் என்னடா செய்யிற..... அசோகன் இப்ப வளைய வளைய வந்து கொண்டிருப்பானே, அவனைப் பார்க்காமல் எப்படியடா இருக்கிற"

பெரியம்மாவின் அழுகை எனக்குள் ஆழமாக சென்று வலித்துக் கொண்டிருந்தது. அசோகனின் பிரிவை யாராலும் உணரமுடியாது அந்தத் தவிப்பு பெரியம்மாவுக்குத்தான் தெரியும். அவரின் உடலும், கோலமும் இதற்கு சான்றாக தெரிந்தது. எனக்கும் அசோகனின் பிரிவு தாங்க முடியாதவொன்றாக இருந்தது எனக்கே இப்படி என்றால் பெரியம்மா வால் எப்படி முடியும்?

அந்த வேட்டைவாளியின் துயரம் எனக்கு இப்போது முழுமையாக தெரிந்தது. அதன் ஒவ்வொரு அசைவையும் இப்போது மீட்டுப் பார்க்க முடிந்தது. அதன் ஒவ்வொரு கெஞ்சுதலும் எனக்குள் மீண்டும், மீண்டும் வந்துபோயின.

"தம்பி சந்தியில் நிற்காணுகளாம் வெளியில போகாத" என்று அம்மா வந்து பதட்டத்துடன் கூறினார். எனக்கு நெஞ்சுக்குழி காய்ந்து கொண்டது. அவர்கள் இன்னும் இந்த பாச உணர்வுகளை உணருவதாயில்லை. பெருமூச்சொன்று இறுக்கத்துடன் வெளியேறிக் கொள்கிறது.

**எது அர்த்தம் நிறைந்த வாழ்க்கையோ, எதை நாம் பூரணமாக நம்புகின்றோமோ அதிலே இறங்கி உழைக்கும் சிரமம் (ஆனந்தம்) இருக்கிறதே அதுதான் உலகம் அறியா ரகசியம்.**

***ஜான் கார்ட்னர்.***

வாழ்க்கை என்பது தன்னை அறியும் முயற்சி இவ்வுலகை அறியும் முயற்சி. மூலத்தை அறியும் முயற்சி

மனதில் தோன்றிய எண்ணம்தான் அந்த மனிதனை உருவாக்கி இருக் கிறது. நமது எண்ணங் கள்தான் நம்மை உரு வாக்கி இன்றையநிலைக் குக் கொண்டு வந்திருக் கின்றன.

***புத்தர்.***

அன்பு என்பதன் விஞ்ஞான வார்த்தை ஈர்ப்பு. ஈர்ப்பின் மூலம் தான் இப்பிரபஞ்சம் இயங்குகிறது. உலகமே, பிரபஞ்சமும் மனித வாழ்வும் ஒரு மையத்தில் இயங்குகின்றன. எல்லாமே ஒன்றுக்கொன்று உதவியாகச் சார்ந்தே வாழ்கின்றன.தனி மனித வாழ்வு மேம்பாடு அடைய வேண்டு மானால் நாம் இங்கு இயங்கும் பிரபஞ்சலயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

*டாக்டர். எம் எஸ் உதயமூர்த்தி.*



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கல்முனை மறைக்கோட்ட ஆலயங்கள்

## சிறுகுறிப்பு


அருள். திரு. S.A.I மத்தியு S.S.J

கல்முனை மறைக்கோட்டம் குருக்கள்மடம் தொடங்கி பொத்துவில் வரையிலான பகுதிகள் உள்ளடங்கும். அம்பாறை இப்பிரதேசத்தோடு இணைக்கப்பட்டதாகும்.

கல்முனைப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆலயங்களின் ஊடாக மிக அதிக அளவில் சமயப்பணிகள், சமூகப்பணிகள், கல்விப்பணிகள் ஆற்றப்பட்டுள்ளன. கிறிஸ்தவர் அல்லாத இந்துக்களும், முஸ்லிம்களும், பௌத்தர்களும் இவ்வாறு சேவைகளின் வகைகள் பற்றியும் அச்சேவைகளின் ஊடாக பணியாற்றிய ஆயிரக்கணக்கான தொண்டர்கள் பற்றியும் குறிப்பிடவில்லை. அப்பெரியார்களது சேவைவ்யை பூரணமாகத் தேடப்பெற்று வெளிக்கொணர வேணுமாயின் தனியான ஒரு நூல் தேவை என்பதை மிக அடக்கமாகக் குறிப்பிடலாம். இங்குள்ள ஆலயங்கள் பற்றியும், சிற்றாலயங்கள் பற்றியும், அவற்றைக் கட்டி எழுப்புவதற்க்காக, உதவி நன்கொடைகள் வழங்கியவர்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பங்குத் தந்தைகளின் பணி விஸ்தாரம், ஆயர்களின் அயராத சேவைகள் ஆகியன இக்கட்டுரையின் விரிவஞ்சிக் குறிப்பிடவில்லை.

**இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் 1995ம் ஆண்டு முடியவுள்ள காலப்பகுதிக் குரியதாகும்.**

### கல்முனை
### திருஇருதய ஆண்டவர் ஆலயம்



கல்முனைப்பங்கின் ஆரம்பத்தைப் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் தெளிவாக இல்லை. ஜோசப் வாஸ் அடிகளார் 1694, 1706ம் ஆண்டுகளில் மட்டக்களப்பிற்கு வருகை தந்ததைப் பற்றிய சான்றுகள் உண்டு. அவருடைய காலத்தில் கல்முனையிலும் கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருக்கலாம். அருட்தந்தை ஜோசப் டி மெனெசஸ் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார்.

இங்கு ஆரம்பத்தில் தென்னிலங்கையில் இருந்து குடியேறிய சில கத்தோலிக்க சிங்களக் குடும்பங்களும், சில பறங்கிய குடும்பங்களும் கத்தோலிக்கர்களாக இருந்திருக்க வேண்டும். தற்காலிகக் கோயில் மணற்சேனையில் அமைந்திருக்கலாம். தற்போதுள்ள ஆலயம் 1878ம் ஆண்டளவில் கட்டப்பட்டிருக்கலாம்.

1908ம் ஆண்டிலே அருட்தந்தை கென்றி பியூறி இவர்கள் நிரந்தர பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார்கள். உறுதியான கோயில் கட்டிட அமைப்புகளுக்கும் அத்திவாரமிட்டார். பங்கு மனைக்கும் இவரே அத்திவாரமிட்டார். கார்மேல் மாதாவின் திருச்சுருவத்தையும் அங்குராப்பணம் செய்துவைத்தார். இவ்வாலயத்துக்கான மணி பிரான்ஸ் நாட்டின் ரூபெக்ஸ் (Rubex) என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டது.

ஆரம்பத்தில் இங்கு குஷ்டரோகிகளுக்கான ஒரு வைத்திய நிலையம் இருந்தது. இதனை கிறிஸ்தவ பாதிரிமாரே பராமரித்தனர். கல்முனை வைத்தியசாலையோடு இணைக்கப்பட்டிருந்த குஷ்டரோக மருத்துவமனை பின் நாளில் மாந்தீவுக்கு மாற்றப்பட்டது. அருட்தந்தை பியூறிக்குப் பிறகு அருட்தந்தை மொறில் (Moreel) பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டு பியூறி அவர்களின் பணியினைத் தொடர்ந்தார்.

ஆரம்பத்தில் கல்முனை உட்பட மாகாணத்தில் பல தேவாலயங்களும் ஒறட்டோறியன்ஸ் (Oratorians) சபைக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. கல்முனையிலுள்ள இரண்டு கத்தோலிக்கப் பாடசாலையின் புனரமைப்புக்கும், வளர்ச்சிக்கும் அருட்தந்தை பியூறி அவர்கள் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார்கள்.

அருட்தந்தை றொதம்புஸ் யே.ச. அடிகளார் 1900ம் ஆண்டில் புனித மரியாள் ஆங்கிலப் பாடசாலையை தற்போதுள்ள ஆலய வளவில் அமைத்தார். இதனால் இங்கு கல்வி விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

இங்கு பணியாற்றிய குருக்கள் அருட்திரு. கொட்பிரிகுக், அருட் தந்தை ஒ.பி.எஸ் சந்தனம் யே.ச.

அருட்தந்தை கென்றி பொன்னையா, அருட்தந்தை அலெக்ஸ் சாண்டர், அருட்தந்தை பீற்றர் நாராயணன். அருட்தந்தை யோன்பிள்ளை, அருட்தந்தை நோபட் ஒக்கஸ், அருட்தந்தை சந்திரா பெர்ணாண்டோ அருட்தந்தை ஆர். எஸ். லோப்பு. அருட்தந்தை கிங்ஸ்லி, அருட்தந்தை ராகல், அருட்தந்தை பிலிப், அருட்தந்தை இன்னாசி ஜோசப் அருட்தந்தை மொறாயஸ் ஆகியோரின் பணி சிறப்பானதாகும்..

இங்கு கார்மேல் கன்னியர்களின் கல்விப்பணியும், சமய சமூகப்பணியும் சிறப்பானதாகும். இக்கன்னியர்கள் 1928ம் ஆண்டு தொடக்கம் இங்கு பணியாற்றுகின்றனர். இவர்கள் பெண் பிள்ளைகளுக்கான அனாதை இல்லமும், முன் பாடசாலையையும் அமைத்து நீண்டகாலம் சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றார்கள்.

புனித வளனார் துறவிகள் 1938ம் ஆண்டு தொடங்கி கல்விப் பணியும் சமயசமூகப் பணியும் ஆற்றி வருகின்றனர். அனாதை மாணவர்களுக்கான இல்லம் இவர்களது பராமரிப்பில் இருந்து வருகின்ற ஒன்றாகும். இத்துறவிகளின் அதிசிரேஸ்ரர்கள் நீணடகாலம் கல்முனையிலேயே பணியாற்றி வருகின்ற காரணத்தினால் அவர்களது தலைமைச் செயலகம் இங்கேயே அமைந்துள்ளது.

## அன்னை வேளாங்கண்ணி ஆலயம்.

இங்குள்ள சிற்றாலயங்களில் அன்னை வேளாங்கண்ணி ஆலயம் கல்முனை இரண்டாம் குறிச்சியில் அமைந்துள்ளது. இக்கோயில் தனியார் ஒருவர் அன்பளிப்புச் செய்த காணியில் அருட்திரு. ராகல் அடிகளால் அமைக்கப்பட்டது.



## அந்தோனியார் ஆலயம்



அந்தோனியார் ஆலயம் புனித லோப்பு அடிகளால் நிறுவப்பட்டது.

## காரைதீவு குழந்தை யேசு ஆலயம்.



காரைதீவு குழந்தை இயேசு ஆலயம் அருட்திரு எஸ் பீபீ்பு அடிகளால் பிரதான வீதிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டது. இதற்கான காணியினை பக்தர் ஒருவர் அன்பளிப்புச் செய்தார்.

கல்முனையில் தற்போது சுமார் 350 கத்தோலிக்க் குடும்பங்கள் உள்ளன. மேற்கூறிய மூன்று சிற்றாலயங்களோடு கார்மேல் மடத்து சிற்றாலயத்திலும், புனித வளனார் துறவிகளின் கல்முனை சிற்றாலயத்திலும், பாண்டிருப்பு மாணவர் இல்லத்தில் அமைந்துள்ள சிற்றாலயத்திலும் திருப்பலிகள் இடம்பெறுகின்றன.

## சொறிக்கல்முனைப் பங்கு

## திருச்சிலுவை ஆலயம்



சுமார் 350 ஆண்டுகள் பழமை வாய்ந்த கத்தோலிக்கர் வாழும் இடம் சொறிக்கல்முனையாகும். இவ்வாலயத்திற்கு பெயர் சாந்த குரூஸ் என்பதாகும். இலங்கையிலே தோற்றுவிக்கப்பட்ட முதல் திருச்சிலுவை ஆலயம் இதுவேயாகும். இந்த ஆலயத்தை ஆரம்பித்தவர் வண. பிதா. ஜேக்கப் கொன் செல்வஸ் அடிகளாகும், (காண்க: வி. போணியோலா பக்கம் 468, The Catholic Church in Srilanka Dutch period Volime 11)

1710களில் இவ்வாலயம் அமைக்கப்பட்டிருக்கலாம். 1740களில் இக் கிராமத்தினது பெயர் சுவர்க்காமனை அல்லது சொர்க்காமனே என்பதாகும்.

புரட்டாதி 14ம் திகதி இவ்வாலய விழாவாகும். பெரிய வெள்ளியன்று காட்டப்படும் திருப்பாடுகளின் பொம்மைக் காட்சி மிகவும் பிரசித்தமானது. யேசு மரித்த சிலுவையின் துண்டொன்று பெற்றிக்கினி ஆயரினால் கோவையிலிருந்து பெறப்பட்டு இங்கு பேணப்பட்டு வருகின்றது. வண. பீதா. ஜோசப்வாஸ் அடிகள் இங்கு விஜயம் செய்திருக்கலாம்.

1808ம் ஆண்டில் பாஸ்குவால் முதலியார் என்பவரால் இவ் ஆலயம் சொறிக்கல் கொண்டு அமைக்கப்பட்டது.

1850களில் அமலமரித்தியாகிகள் சபையினர் ஆலயத்துடன் இணைந்த பாடசாலை ஒன்றினை நிறுவினர்.

கல்முனைப் பங்குடன் இணைந்திருந்த இப்பங்கினை 07. 10. 1936 இல் ஆயர் பேரருட் திரு கஸ்ரன் றொபீஷே தனிப்பங்காகப் பிரகடனப்படுத்தினார். இதனது முதற்பங்குக் குரு அருட்திரு யோசப் மேரி அடிகள் (யே. ச) இற்றை வரை 18 பங்குத்தந்தையர் பணியாற்றியுள்ளனர்.

தற்போது உள்ள திருச்சிலுவை ஆலயம் அருட் திரு எல்மோ யோண்பிள்ளை அடிகள் காலத்தில் ஆயரினால் நிர்மாணிக்கப்பட்டது. 1976 முதல் திருக்குடும்பக் கன்னியர்களும், 1989 முதல் அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்களும் சமய, சமூக கல்விப் பணியாற்றி வந்துள்ளனர். 20. 12. 96இல் இப்பங்கு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது.

சுமார் 500 கத்தோலிக்க குடும்பங்களை இப்பங்கு கொண்டுள்ளது. இப்பங்கிலிருந்து பலர் குருக்களாகவும் துறவற சகோதர சகோதரிகளாகவும் சேவைக்கென தம்மை அர்ப்பணித்து பணிபுரிந்து வருகின்றனர். பின்வருவோரை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

1. *அருட்திரு இன்னாசி யோசப் அடிகள்*
2. *அருடதிரு ஏ. ஜீ. ரெட்ணகுமார் அடிகள்*
3. *அருட். சகோ பிரான்சிஸ் ரொபின்சன்*
4. *அருட் சகோ ராணி அக்னஸ்*
5. *அருட் சகோ லீமா றோஸ்.*
6. *அருட் சகோ மேரி வோட்டில்லா*
7. *அருட் சகோ அல்போன்ஸ் கமிலஸ்*

## சிற்றாலயங்கள்

### 1. புனித அந்தோனியார் ஆலயம்

ஆறாம் கிராமம் ( 6ம் கொலனி)

ஆயர் இக்னேசியஸ் காலத்தில் குடிசையிலான ஆலயம் அமைக்கப்பட்டது. 1978 சூறாவளிக்குப் பின் 1981 இல் பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு எல்மோ யோண்பிள்ளை இவ் ஆலயத்தினை நிர்மாணித்து ஆற்றிய பணி மகத்தானது. இங்கு பாலர் பாடசாலையும் அமைந்துள்ளது. தற்போது இராணுவ முகாமின் பாவனைக்காகவும் இவ்வாலய வளவு பயன்படுத்தப்படுகின்றது.

### 2. சின்னமடு மாதா ஆலயம்

4ம் கிராமம் (4ம் கொலனி)

கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தின் கீழ் பெரும்பாலான இந்து, இஸ்லாமிய மக்கள் மத்தியிலே சிறுபான்மையாக உள்ள கத்தோலிக்கருக்காக இவ்வாலயம் அமைக்கப்பட்டது. 17. 04. 84இல் சிற்றாலயம் நிர்மாணிக்கப்பட்டு மடுமாதாவுக்குப் அர்ப்பணிக்கப்பட்டது. குடிசையாக இருந்த இவ்வாலயம் அருட் திரு B.A. யோசப் அடிகள் காலத்தில் நிரந்தர ஆலயமாக அமைக்கப்பட்டது. வன்செயலால் அழிவுற்ற இவ் ஆலயத்தினை பங்குத் தந்தை அருட் திரு A.A நவரெட்ணம் அடிகளால் ஆயர் அவர்களின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.


### 3. கிறிஸ்து அரசர் ஆலயம் - சம்மாந்துறை

சம்மாந்துறை வாழ் கத்தோலிக்க மக்களுக்கென அருட் திரு B.A. யோசப் அடிகளால் 21.07.87 இல் பல எதிர்ப்புக்கள் மத்தியில் ஆலயம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. 1990 இன் வன்செயலில் இவ்ஆலயம் அழிக்கப்பட்டது. எனினும் பங்குத் தந்தை அருட் திரு ஏ.ஏ. நவரெட்ணம் அடிகளால் மீண்டும் இவ்வாலயம் ஆயர் அவர்களின் உதவியால் புதிதாகக் கட்டப்பட்டு உள்ளது. இங்கு 20 கத்தோலிக்கக்குடும்பங்கள் உள்ளன.

### 4. புனித மரியாள் ஆலயம் தேற்றாக்குளம்

வீரச்சோலை

இவ்வாலயத்துக்கான காணியை அன்பளிப்புச் செய்தவர் திருவாளர் செல்வம் அருட் பிரகாசம் என்பவராகும். 21.1.86ல் இங்கு ஆலயம் அமைக்கப்பட்டது. 1990 இல் வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்த கத்தோலிக்க மக்கள் இங்கு இற்றை நாள் (2001) வரை மீளக் குடியேறவில்லை.



அக்கரைப்பற்றுப்பங்கு

## ஆரோக்கிய மாதா ஆரயம்

தற்போதைய ஆலயம் 1941 இல் அத்திவாரமிடப்பட்டது. அருட். திரு. டெலாகே அடிகளினால் இப்பணி ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து பங்குத் தந்தையாக இருந்த அருட்.திரு. ஹென்றி பொன்னையா (1943-1950)

அடிகளால் ஆலயத்தின் பகுதிகள் கட்டியெழுப்பப்பட்டன.

இக்கோயிலின் எஞ்சிய பகுதிகளை கட்டி முடித்தவர் அருட் திரு கொட்பிறிகுக் அடிகளாவார். இவருடைய காலத்தில் இது தனிப்பங்கு ஆக்கப்பட்டது. கொட்பிறிகுக் அடிகள் இங்கு 17 வருடங்கள் பணியாற்றினார். இவரால் பங்கு மனையும் கட்டப்பட்டது. இதற்கான காணியையும் வாங்கினார்.

1976 இல் பங்குத் தந்தையாக இருந்த பிரான்சிஸ்டயஸ் அடிகளின் காலத்தில் ஆலயத்தில் இரு விராந்தைகள் அமைக்கப்பட்டன. அருட் திரு சொய்சா அடிகள் 1982 இல் இவ் ஆலயத்தை புனரமைப்புச் செய்தார். இக்கோயிலுக்கு மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் நிதி உதவி வழங்கியுள்ளார். இதற்கு காரணகர்த்தாவாக அருட் திரு நோயல் இம்மனுவேல் அடிகள் விளங்கினார்.

**இரட்சகர் ஆலயம்**

40ம் கட்டை என அழைக்கப்படுகின்ற இடத்தில் கொட்பிறிகுக் அடிகள் ஆரம்பித்தார். குக் அடிகளால் 4ம் கட்டையில் ஓலைக் குடிலில் அமைக்கப்பட்ட ஆலயம் பிரான்சிஸ் டயஸ் அடிகளின் முயற்சியினால் தற்போதுள்ள இரட்சகர் ஆலயம் அமைக்கப்பட்டது. இக்கிராமத்திற்கு இரட்சகபுரம் எனப் பெயர் வழங்கப்படலாயிற்று.

**புனித சவேரியார் ஆலயம்**

அலிகம்பையில் அருட். திரு. கொட்பிறிகுக் அடிகளினால் புனித சவேரியார் ஆலயம் தாபிக்கப்பட்டது. மிகவும் பின் தங்கிய நிலையில் வேடர்களாக வாழ்ந்த இக் கிராம வாசிகள் பலர் அருட் தந்தையின் பணியின் விளைவாகக் கத்தோலிக்கர்களாக மாறியதுடன் இன்று வரை விசுவாச வாழ்வில் நிலைத்து நிற்கின்றனர். 09.04.1961ல் மாத்திரம் இக்கிராம வாசிகள் 184பேர் பேரருட் திரு.கிளெனி ஆண்டகையினால் திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க மறையைத் தழுவினர். 1990ல் இடம் பெற்ற வன் செயல்களினால் இவர்கள் இடம் பெயர்ந்து தற்போது திருக்கோவில் பங்கில் அகதிகளாக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

1985ம் ஆண்டு அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் சபைத் துறவிகள் மடம் அமைத்து இப்பங்கின் ஆன்மீகப் பணிகளில் தம்மையும் இணைத்துக் கொண்டனர்.

வரலாற்று ஏடுகளின் படி 1923 தொடக்கம் இன்று வரை 27 அருட் தந்தையர்கள் பணிபுரிந்த இவ்வாலயத்தின் தற்கோதைய 2001 பங்குத் தந்தையாக இருக்கும் சுகுனேந்திரன் குருஸ் அடிகளுடன், அருட் சகோதரிகளும் இணைந்து பங்கு மக்களின் ஆன்மீக வழிகாட்டிகளாக செயற்பட்டு வருகின்றனர்.



திருக்கோவில்
**சூசையப்பர் ஆலயம்**

1923 இல் இங்கு 12 கத்தோலிக்கக் குடும்பங்கள் இருந்தன. தென்னை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருந்த திரு. கீறின் என்ற ஆங்கிலேயரின் முயற்சியினால் $1\frac{1}{2}$ ஏக்கர் நிலம் அரசிடமிருந்து பெறப்பட்டது. அருட்தந்தை பூறி பெல்சிய பெண்மணி ஒருவரிடமிருந்து 500/- நிதி உதவி பெற்றார். இந்நிதி உதவியினைக்கொண்டு 1925இல் ஆலயம் அமைக்கப்பட்டது. ஆயர் கஸ்ரன் றொபிசே இவ் ஆலயத்தை ஆசீர்வதித்தார்.

1950ம் ஆண்டில் பங்குப்பணி புரிந்த கொட்பிறிகுக் அடிகளினால் இங்குள்ள தென்னந்தோட்டம் அமைக்கப்பட்டது.

தற்போது இங்கு 63 கத்தோலிக்கக் குடும்பங்கள் உள்ளன.

இணைப்பங்குகள்
**குழந்தை யேசு ஆலயம்**

தாண்டியடி சங்கமான் கிராமத்தில் குழந்தை யேசு ஆலயம் அமைந்துள்ளது. அருட். திரு. சொய்சா அடிகள் இதனை அமைத்தார்கள். இங்கு 12 கத்தோலிக்கக் குடும்பங்கள் உண்டு.

கோமாரிக் கிராமம்
**புனித மிக்கேல் தூதர் ஆலயம்**


கொட்பிறிகுக் அடிகளினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. இங்கு 28 கத்தோலிக்கக் குடும்பங்கள் உள்ளன.

பொத்துவில்
**புனித அந்தோணியார் ஆலயம்.**

53 கத்தோலிக்க குடும்பங்கள் உள்ளன.

தங்க வேலாயுதபுரம்
**சதாசகாய அன்னை ஆலயம்**

வன்செயலினால் தற்போது மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர், தற்போதைய பங்குத் தந்தை றொஹான் பேர்னார்ட் அடிகளாவார்.



## கல்லாறு
## புனித அருளானந்தர் ஆலயம்

1894ல் இது கல்முனைப்பங்கின் ஒரு பகுதியாக இருந்தது. இங்கு செபமாலை அன்னையின் பெயரால் ஒரு ஆலயம் இருந்தது.

1932ல் சுமார் 15 குடும்பங்கள் இருந்தன 1933ம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு விசேட நிகழ்வினால் பெருந் தொகையான மக்கள் கத்தோலிக்க மறையைத் தழுவியுள் ளனர். தற்போதைய புனித அருளானந்தர் ஆலயம் அமைக்கப்பட்டது. இது பாடசாலையாகவும் பயன்படுத்தப் பட்டது.

அருட். திரு ஜோன்பீற்றர் அவர்களால் பங்கு மனையும். புதிய ஆலயமும் அமைக்கப்பட்டன.

சூறாவளியின் பின்னர் புதிய ஆலயம் அருட். திரு சந்திரா பர்ணாண்டோ அடிகளினால் அமைக்கப்பட்டது. இப்பங்கு ஐந்து சிற்றாலயங்களைக் கொண்டுள்ளது.

## மரியாள் ஆலயம்,

இதுவே இக்கிராமத்தின் ஆரம்ப கால ஆலயம்.

## மகிழூர் திருக்குடும்ப ஆலயம் (1971)

பங்குத் தந்தை அருட் திரு கொட்பிறிகுக் அடி களினால் அமைக்கப்பட்டது.

## மகிழூர் முனை
## புனித சதாசகாய அன்னை ஆலயம் (1986)


காலம் : அருட் தந்தை J.S. மொராயஸ்.

## கோட்டைக் கல்லாறு புனித அந்தோனியார் ஆலயம்

அருட். திரு. சந்திரா பெர்ணாண்டோ அடிக ளினால் 1983ல் அமைக்கப்பட்டது.

## உதயபுரம் அன்னை வேளாங்கண்ணி ஆலயம்

1980ல் இந்துப் பக்தர்களும், கிறிஸ்தவரும் இணைந்து இவ் ஆலயத்தினை அமைத்தனர். இது இப்பங்கிலுள்ள மிகப் பெரிய ஆலயம். தற்போதைய பங்குத் தந்தை அருட். திரு. றாகல் அடிகளாவார்.



## தேற்றாத்தீவு.

இப்பங்கு ஆலயம் அருட். திரு. நோபட் ஒக்கர்ஸ் அடிகளாரால் 1960ல் ஆரம்பிக்கப்பட்டு, ஓலைக் குடிசையாக முதலில் இது ஆராம்பிக்கப்பட்டது. இதற்கான காணியும் அடிகளார் தனியாரிடமிருந்து கொள்வனவு செய்தார். 1961ல் மிகச் சிறிய ஆலயம் அமைக்கப்பட்டது. ஆயர் கிளேனி நிதி உதவி செய்து புனித யூதாததேயு ஆலயம் என நாமம் சூட்டினார்.

1967ம் ஆண்டு இது தனிப்பங்காகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அருட். திரு. நோபட் ஒக்கர்ஸ் அடிகளைத் தொடர்ந்து அருட் தந்தை ஜோசப் டிக்கோணிங் அடிகள் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றார். இவர் காலத்தில் இலங்கையின் பல பாகத்திலிருந்தும் இங்கு பக்தர்கள் திரண்டு வரத்தொடங்கினர்.

1973 ம் ஆண்டில் பிரான்சிஸ்கன் சபை சகோதர் கள் இங்கு பணியாற்ற அழைக்கப்பட்டனர்.

1977ம் ஆண்டு பிரான்சிஸ்கன் கன்னியர் சபைச் சகோதரிகள் இங்கு பங்குப் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

அருட். திரு. கே. எல். மரியதாஸ் அடிகள் 1979ல் பணியேற்றார்.
சூறாவளி அனர்த்தங்களைச் சீராக்குவதில் பெரும் முயற்சி செய்தார்.

1983 வன்செயலினால் பாதிக்கப்பட்ட அகதி களுக்காக ஆலயத்தின் பின்புறத்தில் தருமபுர வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பின்பு அருட். திரு. அரசரெட்ணம், அருட். திரு. கிங்ஸ்லி றோபட் அருட்திரு றேமன் அரசரெட்ணம், அருட்திரு சந்திரகாந்தன் ஆகியோர் பங்குக்குருக்களாக பணிபுரிந்தனர்.

தற்போதைய பங்குக்குரு அருட். திரு றொபின்சன் போல் ஆவார்.

குருக்கள் மடம்
பெயர் :- **புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்**
காலம் :- **1951**

ஸ்தாபகர் ~ திரு அழகையா அருளப்பு ஆசிரியர். குருக்கள் மடம் புனித பிரான்சிஸ்கன் சகோ. சபையினர் இங்கு கடமை யாற்றுகின்றனர்.

அனாதை மடம் அமைத்து சமய சமூகப் பணிகள் ஆற்றுகின்றனர்.

இது தேத்தாத்தீவின் ஒரு இணை ஆலயமாகும். அருட் சகோதரர்களினால் ஒரு குடியேற்றத் திட்டமும், இளைஞர்களுக்கான ஒரு விவசாய பண்ணையும் ஆரம்பிக் கப்பட்டது.

# யாரைத் தேடுகிறாய்

* பைந்தமிழ்க் குமரன்
சொறிக்கல்முனை.

துருத்தி நிற்கும்
கன்ன எலும்புகளில் ஏறிக்
கண்ணீர்த் துளிகள் வழிந்தோட
கவலையின் உச்சத்திலும்
கண்களை அலைய விட்டு
கனகம்மா நீ
யாரைத் தேடுகிறாய்?

பஞ்சுப் பொதிபோல்
பழுத்து விட்ட பரட்டைத்தலையுடன்
விஞ்சி நிற்கும் எலும்புகள்தான்
உன் கந்தைக் கைத்தறியை
கரம்பற்றி நிற்கின்றன.

கருக்கல் பொழுதினில்
கசிப்பு வெறியுடன் வந்து
கருவாட்டுக் குழம்பு கேட்கும் கணவன்
வருகையையா நோக்குகின்றாய்
இல்லையென்றால், நேற்றிரவு
பழஞ் சோற்றையும் பங்கு போட்டு
பச்சைத் தண்ணி நீ குடித்து
பாய் விரித்த வேளையிலே
பரீட்சைக்குக் காசு கேட்டு
இளைய மகள் சிணுங்கினாளே
அடிவயிற்றில் அனல்பாய

அழாத மகள்; அல்லைக்க
தூண்டல் போட்டு மீன்வித்த
இருபதும்; இன்னாசி மாமியிட்ட
நாளைக்கு வாங்கித் தாறன்
என்று சொல்லி ஏய்த்தாயே
அவளையா பார்க்கின்றாய்

முதுமையின் கோலங்கள்
முகத்தினில் கால்பரப்ப
ஏக்கப் பெருமூச்சுடனே
மூலைக்குள் சிறையிருக்கும்
மூத்தவள் எங்கையாலும்
எழும்பிப் போய் விட்டாளா?

ராசாண்ணன் வயலுக்க
கதிர் பொறுக்கியதைத் துவைத்து
காச்சிய கஞ்சியில்
பொழுதொன்று போனதே
நாளையென்ன செய்வதென்ற
பெருங்கவலை உயிர்பிழிய
கலங்கும் நெஞ்சுடனே
கண்ணீர் தரைதவழ கனகம்மா
யாரை நீ தேடுகின்றாய்?

# அம்பாரை மாவட்டத்தில் அழிந்து போன தமிழ் கிராமங்கள்

சஞ்சீவி சபாரெட்ணம்
நற்பட்டி முனை



தமிழர் தளம் அமைத்து தலைமை தாங்கி வன்னிமை ஆளுமைக்கு உட்படுத்தி ஆட்சி செய்த அம்பாரை மாவட்டத்திலுள்ள பல தமிழ்க் கிராமங்கள் தமிழரின் பாரம்பரிய வாழ்விடமாக இருந்து இன்று தமிழர்கள் வாழ்ந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லாமல் அழிந்து போயுள்ளன. அத்தோடு சில கிராமங்களின் குறைப்பு நடவடிக்கை மூலமாக ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த மாவட்டத்திலுள்ள தமிழ்க்கிராமங்களாக பாணமை, பொத்துவில், கோமாரி, சங்குமாங்கண்டி, தாண்டியடி, வினாயகபுரம், திருக்கோயில், தம்பட்டை, பூரணி, செம்மணிகுளம், தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம், அக்கரைப்பற்று, மீன்ஓடைக்கட்டு, பாலமுனை, திராய்க்கேணி, ஒலுவில், அட்டப்பளம், நிந்தவூர், காரைதீவு, கரவாகு, கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, சேணைக்குடியிருப்பு, நற்பட்டிமுனை, சவளக்கடை, நாவிதன்வெளி, அன்னமலை, இவற்றோடு சம்மாந்துறை, வீரமுனை, சொறிக்கல்முனை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மல்லியத்தீவு, தீகவாவி, இறக்காமம், மாந்தோட்டம், கொண்டவெட்டுவான் போன்ற பல்வேறு தமிழ் கிராமங்களும் அவற்றுடன் பல குடியேற்ற குளனிகளும் அம்பாரை மாவட்டத்தில் தமிழர்களின் வாழ்விடங்களாளக் காணப்பட்டன. ஆனால் அவற்றில் அனேகமான தமிழ் கிராமங்களில் தமிழர்களும் தமிழர் பண்பாட்டு அடையாளங்களும் இருந்ததற்கான எந்த ஆதாரமுமற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலை ஏற்படுவதற்கு இம்மாவட்டத்தில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார, சமுதாய, இனக்காரணிகளே முக்கிய பங்கு வகித்தன.

இவ்வாறு அம்பாரை மாவட்டத்தில் தமிழர்களின் வாழ்விடமாக இருந்த பல்வேறு கிராமங்களில் அனேகமானவை இன்று மாற்று இனங்களின் வாழ்விடமாக மாறியிருப்பதோடு தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் பானமை, மீன்ஓடைக்கட்டு, பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், கரவாகு, சம்மாந்துறை, தீகவாவி மாந்தோட்டம், கொண்டவெட்டுவான், பூரணி செம்மணிக்குளம், தங்கவேலாயுதபுரம், உடும்பன் குளம், போன்ற முக்கிய தமிழ்க் கிராமங்கள் திட்டமிட்ட வகையில் தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய பொருளாதாரத்திற்கும் கடந்த சில காலமாக திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட பேரழிவுகளாலும் அடக்கு முறைகளாலும் தமிழர்கள் அக்கிராமங்களில் இருந்து குடிபெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

பின்பு வளங்களை கைப்பற்றுவதில் இனவாதம் குறிப்பாக இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக தமிழ் மக்களுடைய வீடுகள் சொத்துக்கள் கால்நடை வளர்ப்புத் தரைகள், குளங்கள், நீரூற்றுக்கள் என்பவற்றிலிருந்து அவர்கள் விரட்டி அடிக்கப்பட்டு அங்கு திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் அழிப்பு வேலைகள் கல்முனையிலிருந்து பாணமை வரை காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வந்ததால் இன்று தமிழர்கள் தமது சொந்தக் கிராமங்களையும் உடமை களையும் இழந்து எந்த ஆதாரமும் இல்லாது வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. இது இவ்வாறு இருக்க இன்னும் சில தமிழ்க் கிராமங்களில் தமிழர் குறைப்பு நடவடிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது. அந்த வகையில் தமிழர் இன்று அருகிவருகின்ற கிராமங்களாக திராய்க்கேணி, அட்டப்பளம், சவளக்கடை, சொறிக்கல்முனை, வீரச்சோலை போன்ற கிராமங்களையும் சில கொலணிப் பகுதிகளையும் குறிப்பிட்டு சொல்ல முடிகின்றது. இவ்வாறு தமிழர் உடமைகள் அழிக்கப்பட்டமைக்கான காரணங்களை இரண்டு பெரும் பிரிவுகளாக பிரித்து நோக்கலாம்.

1. திட்டமிட்ட ஆக்கிரமிப்பு, பழி வாங்கும் எண்ணம், இனக்குரோதம் காரணமாக தமிழ்க் கிராமங்கள் மீது ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டது.

2. தமிழர்களின் ஒற்றுமையின்மையும் சாதி வேறுபாடும், பொருளாதார நெருக்கடியும் மற்றுமோர் காரணமாகக் காணப்பட்டது.

இதில் முதலாவது கருத்தின்படி காலத்திற்கு காலம் இனக் குரோதங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் மீதும் தமிழர் கலாச்சாரங்கள் மீதும் மேற் கொண்ட தாக்குதல்களும் தமிழர் கிராமங்கள் அழிவுக்கு காரணமாக இருந்தது. அத்தோடு தமிழர்களின் உடமை களை சேதமாக்குவதன் மூலம் அவர்களின் வாழும் உரிமைக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட்டது. இந்த சந்தர்ப் பத்தில் தமிழர்கள் தமது சொந்த மனையில் வாழ முடியாது வேறு இடங்களுக்கு இடம்மாற வேண்டி ஏற்பட்டது. இன் நிகழ்வுகள் 1980 பின் மிகவும் உக்கி ரமடைந்த ஒரு நிகழ்வாக மாறியது.

இக்காலப் பகுதியின் பின் பயங்கரவாத சட்டத் தின் கீழ் அரச படைகளும் தமிழர்களுக்கு பாதகமாகவே இருந்தன. இதனை இமமாவட்டத்திலிருந்த இனவாதி களும் அரசியல்வாதிகளும் மிகவும் கூடியளவு பயன் படுத்திக் கொண்டு தமிழர் மீதான அடக்கு முறையில் தீவிரம் காட்டத்தொடங்கினார்கள். இதற்கு சாதகமாக அரசபடைகளும் காணப்பட்டன. இந்த அச்சுறுத்தல் காரணமாக பல தமிழர்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு அகதிகளாக வெளியேற வேண்டிய நிலமை ஏற்பட்டது. இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ஆக்கிரமிப்பாளர்கள் தமிழர் வாழ்விடங்களை கிராமங் களை தமதாக்கி கொண்டார்கள். இன் நிகழ்வுகள் 1990ன் பின் மேலும் உக்கிரமடையலாயிற்று.

இதே போன்று தமிழர்கள் தமது வாழ்விடங் களை இழந்ததற்கு இன்னுமொரு காரணமாக தமிழ் மக்களிடையே இருந்த ஒற்றுமையின்மையும், சாதிவேறு பாடுகளும், பொருளாதார நெருக்கடிகளும், அரசியல் தாக்கங்களும் மற்றுமொரு காரணமாக காணப்பட்டன. இந்நிலைப்பாடுகள் காரணமாக தமிழர்களால் ஒரு கட்டுக் கோப்பான சமூகமாக வாழ முடியாமல் போய்விட்டது. சாதியமைப்பு காரணமாக தமிழரிடம் இருந்த ஏற்றத்தாழ்வு களும் அசட்டையீனமான போக்குகளும் அவர்களி டையே உறுதியான ஒரு சமூகமைப்பை ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது. இதன் காரணமாக மற்றைய இனத்தவர்கள் எங்கள் காணிகளையும் வாழ்விடங் களையும் தமதாக்கிக் கொள்வதற்கு இந்த நிலையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.


இது மட்டுமின்றி தமிழர்களிடம் இருந்த பொரு ளாதார நெருக்கடி காரணமாக தமது தாயதி சொத்தான வாழ்விடங்களை கூடியவிலைக்கு மாற்றினத்திற்கு விற்றுவிட்டு அவ்விடங்களை விட்டு வெளியேறி குறைந்த காணியுள்ள இடங்களில் குடியமரத் தலைப்பட்டார்கள். இதுவும் தமிழர்களின். வாழ்விடங்கள் விட்டுப் போவ தற்கு முக்கியமான காரணங்களாக இருந்தன. இத்தோடு உட்நாட்டு அரசியல். இனப்பிரச்சினை தமிழரின் பொருளா தாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் வாழமுடியாத நிலை ஏற்பட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய மான நிலைக்கு உள்ளானார்கள்.

இவ்வாறு தமிழ்க் கிராமங்கள் அழிந்து போவ தற்கு பல்வேறு காரணங்கள் இருந்த போதிலும் இவற்றில் முக்கியமானதாக தமிழர்களின் அசட்டை யீனமான போக்கே கூடிய செல்வாக்கு செலுத்தியது. தமிழர்கள் இன்று இருப்பதனை விட அன்று அரசியல் ரீதியாக பலமானவர்களாகவே காணப்பட்டனர். இருந் தும் தமிழரிடம் சரியான கட்டுப்கோப்பு இன்மையே தமிழர் பின்னடைவுக்கு காரணமாக இருந்தது. குறிப்பாக இன்று அம்பாறை மாவட்டத்தில் தமிழர் மகாசங்கம் ஒன்றிருந்து தமிழர்களை கட்டுப்படுத்தி வழிநடத்தி அவர்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்கு குரல் கொடுப்பது போன்று அன்றும் தமிழர் விழிப்புணர்வு சங்கமொன்று இருந்து செயல்பட்டு இருக்குமேயானால் எமது கிராமங் கள் முற்று முழுதாக அழிந்து போவதில் இருந்து பாதுகாத்திருக்க முடியும். அத்தோடு தமிழர் மத்தியில் இருந்த கல்வி கற்றவர்க்கம் பொது நோக்குடையவர் களாகவும் சமூகப் பாதுகாப்பையும் ஒருங்கிணைப்பையும் பேணக்கூடிய ஆக்கப்பூர்வமான சிந்தனை உள்ளவர் களாகவும் இருந்திருந்தால் எமது சமுதாயத்தின் இன் னல்களை களைந்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு இல்லாமல் அன்றைய சமுதாய முன்னோடிகளாக இருந்த தமிழ்க் கல்விமான்கள் தங்கள் வளத்தை பெருக்கும் மனப்போக்குடைய வர்களாகவும் தங்கள் பிள்ளைகளின் கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றில் மட்டும் கவனம் செலுத்தும் சுயநலப் போக்குடையவர்களாக இருந்தமை யும் தமிழ் கிராமங்களும் தமிழர் உடைமைகளும் அழிவதற்கு காரணமாக இருந்த தென்றால் மிகையல்ல.

# புதுப் பொலிவும், புதுவாழ்வும் பெறும் தூய யூதாததேயு திருத்தலம் தேற்றாத்தீவு

"நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப் படுத்தவும், நலம் தரும் செய்தியை உரைக்க வும் விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி உன் கடவுள் அரசாளுகின்றார் என்று கூற வும் வருவோரின் பாதங்கள் மலைகள் மேல் எத்து ணை அழகாய் இருக்கின்றன (எசா 52 : 7) என்ற ஒப்பற்ற வார்த்தையை வாழ்வாக்குகின்றது தூய யூதா திருத்தலம் இன்று. இத்திருத்தலமானது மட்டக்களப்பு திருகோணமலை மறைமா வட்டத் தில் தேற்றாத்தீவு என்னும் சிற்றுரில் அமைந் துள்ளது. இத்திருத்தலம் குருக்கள்மடம், அம்பிளாந்துறை, கொக்கட்டிச்சோலை, பளுகாமம், போன்ற துணைப் பங்குகளைக் கொண்ட ஒரு பெரிய பங்காகும். இப் பங்கில் பிரான்சிஸ்கன் சகோதரர்களும், சகோதரி களும் தங்கள் ஆன்மீக பணியை செய்கின்றார்கள் என்பதும் குறிப்பிடக்கூடியதாகும், இத்திருத்தல மானது கடந்த 15 – 20 ஆண்டுகளுக்கு முன் அருட்பணி டிக்கோணிங் அடிகளார் இத்திருத் தலத்தின் ஆன்மீக பணியாளராக இருந்த பொழுது அகில இலங்கை முழுவதிலும் உள்ள அனைத்து விசுவாசிகளாலும் போற்றப்பட்டு, பாதை யாத்திரை கள் மேற்கொள்ளப்பட்ட ஒரு புனித பூமியாகும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக நம் நாட்டில் நடை பெறும் யுத்தத்தினாலும், ஏனைய அசௌகரிய நிலைமைகளினாலும் தன்னொளி இழந்து மங்கிக் கொண்டிருந்தது. இவ்வாறான காலகட்டத்தில் தான் அருட்பணி போல் ரொபின்சன் அடிகளார் இத்திருத்தலத்தின் ஆன்மீகப் பணியாளராக நியமனம் பெற்று வந்தார். இவர் வந்த சில நாட்க ளிலேயே இத்திருத்தலம் புத்துயிரும், புது பொலி வும்பெற ஆரம்பித்து விட்டது என்பது குறிப்பிடத்தக்க தாகும். இவரிடத்தில் நாம் கண்ட பண்புகளுக்கு நற்செய்தியே சான்றாகும். 'தொடக்க முதல் இருந்த வாழ்வளிக்கும் வாக்கை, தாங்கள் கேட்ட வாக்கை, கண்ணால் கண்ட வாக்கை, உற்றுநோக்கிய வாக்கை, கையால் தொட்டுணர்ந்த வாக்கைத்தான் நற்செய்தி யாளர்கள் அறிவிக்கின்றனர்' (1 யோவான் 1:1)

இவ்வாறே அருட்தந்தையும் தான் படித்த, அனுப வித்த சுவைத்த இறைவார்த்தையை மக்களோடு பகிர்ந்து கொள்வ தற்காக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பரிசுத்த ஆவியின் செபக் கூட்டத்தியானத்தை நடத்துகின்றார். இத் தியானத்தில் பலர், பாவிகள், தீய பழக்கத் திற்கு அடிமையானோர், சமூக விரோதிகள், எதிர் கால, தன்னம்பிக்கையும் அற்றோர், நோயுற்றோர், திக்கற் றோர், ஒதுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர், உடல் ஊனமுற்றோர் ஆன்மீக தாகம் கொண்டோர் ஆகியோர் இறைவனின் வார்த்தையை கேட்டு விடுதலை பெற்றுச் செல்லுகின்றனர். திருமுழுக்கு யோவான் சீடனு க்கு இயேசு கூறிய விடயங்கள் இங்கே நிறை வேறுவதை நாங்கள் காண்கின்றோம் (லூக்கா 7:18 – 24) ஆரம் பநாட்களில் இத்தியானத்தில் கலந்துக் கொண் டோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந் தது. ஐந்து பேர் என்ற நிலையில் இருந்து இன்று ஆயிரம், ஆயிரம் பேர் இத்திருத்தலத்தை நோக்கி விரைகின்றனர். ஒவ்வொரு வெள்ளிக் கிழமை களிலும் திருத்தலத்தை நோக்கி மட்டக்களப்பி லிருந்தும் கல்முனையிலிருந்தும்வரும், பேருந்து களையும் வாகனங்களையும் பார்க்கின்ற போது. மக்கள் எவ்வளவு இறைத்தாகம் கொண்டோர் என்பதை திருப்பாடல் ஆசிரியருடன் ஒப்பிட்டு நோக்கமுடிகின்றது. 'கலைமான் நீரோடைகளுக் காக ஏங்கித் தவிப்பது போல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது,' (தி பா 42:1) கடந்த நாட்களில் இராணுவ வீரர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் நிழல் கொடுத்த திருத்தல வளாகத்திலுள்ள மரங்களும், விடுதிகளும் இன்று இறையடியார்களுக்கும். பக்தர்களுக்கும் நிழல் கொடுப்பதை பார்க்கும் போது மனதுக்கு மகிழ்ச்




சியைத் தருகின்றது. திருப்பாடல் சொல்லுவது போன்று 'வான் படைகளின் ஆண்டவரே! உமது உறைவிடம் எத்துணை அருமையானது! என் ஆன்மா ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக ஏங்கித் தவிக்கின்றது: என் உள்ளமும் உடலும் என்றுமுள இறைவனை மகிழ்ச்சியுடன் பாடுகின்றது' (தி பா 84:1) திருத்தல வளாகத்துள் நுழையும் போதே அங்கே ஒலிக்கும் தெய்வீக கானங்களும், செப கோசங்களும் அனைவரையுமே ஒரு தெய்வீக பிர சன்னத்தை உணரச்செய்கின்றன என்பது உண்மையே. அத்தோடு ஒவ்வொருநாளும் ஒப்புரவு அருட் சாதனமும். ஆன்மீக ஆலோசனைகளும் திருத் தல ஆன்மீகப் பணியாளரால் வழங்கப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாக பாழடைந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்த புனித யூதா மணிமண்டபம் இன்று புனரமைக்கப்பட்டு மறைமாவட்டத்தின் பொது நிலையினருக்கான இறையியல் கல்விக் கூடமாக இயங்கின்றது. இவ்வாறு பலவழிகளில் புனித யூதா திருத்தலம் இன்று ஆன்மீக வழிகாட்டலில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. இதைப் போல் வருகின்ற காலங்களிலும் பல வழிகளிலும் ஆன்மீக பாதையில் முன்னேற்றம் அடைந்து, மக்களை இறைவன் பால் இட்டுச் செல்லும் ஒரு தெய்வீகத் தலமாக வளர எல்லாம் வல்ல இறை வனை மன்றாடுகின்றோம்.

ஆக்கம்
***சகோ. ஜே. யேசுதாசன்***
குருக்கள்மடம்.

---

# சாதியெனும் தளை

இ. ஜெகதாஸ்
13 கலை
கல்முனை.



கடவுள் படைத்த மானிடத்தில்
ஆண்கள் பெண்கள் இருசாதி
இழிந்தவர் உயர்ந்தவர் என்றேதான்
ஏன் வகுத்தோம் நாம் பல சாதி ?

வேதியர் வெள்ளாளர் சூத்திரர்கள்
வேஷங்களே இவை விதிகளல்ல
உள்ளத்தில் ஒளியுள்ளோர் உத்தமர்கள்
உயர்ந்தோர் இவரே சத்தியமே

செய் தொழில் வைத்தே பிரித்தனரன்று
பின்னவை சாதிகளாயினவே
சுய நலத்தாலே பிரிவுகள் செய்து
வருத்துவதுதான் என்ன நியாயமோ?

செல்வந்த ரேழையென பேதம்பிரிப்பார்
செல்வம் சேர்ந்துவிட்டால் ஒதுங்கிநடப்பார்
படைத்தவரை வணங்கிடவும் சாதிபார்த்து
தடைவிதிப்பார் தரம் பார்ப்பாரே

மானிடரே! கேளுங்கள், பேதம் பார்த்து
மனிதத்தை இழக்காது சாதிபார்த்து
மதியில்லா சாதியெனும் தளையறுத்து
புது மனிதகுலம் படைக்கப் புறப்படுவோம்.

# உங்களுடன் சில நிமிடங்கள்

கல்முனை மறைக்கோட்டமென்பது பரந்துபட்ட எல்லைகளையும், பல்லின சூழலையும், கலாச்சாரப் பின்னணிகளையும் கொண்டது. பங்குக் கோயில்களுடன் ஆங்காங்கே பல சிற்றாலயங்களையும் கொண்ட ஆறு பங்குகள் உள்ளன. இப்பங்குகளில் வாழும் கத்தோலிக்க மக்களது வாழ்க்கை அவர்களது சமூக கலாச் சாரப் பின்னணிகள் என்பன மிகவும் தொன்மைமிக்கனவாய் அமைந்திருப்பது கண்கூடு. இவர்களது மூதாதையர்களது காலம் முதல் இன்றுவரை சில வழக் காறுகளும் சம்பிரதாயங்களும் இதயங்களோடு இழையோடிக் கிடப்பது உண்மை. நாட்டின் ஏனைய பிரதேசங் களின் கத்தோலிக் கர்களிடமிருந்து தனித்து நோக்கக் கூடிய தனித்துவங்களும் இம் மக்களிடம் உள்ளன. விருந்தோம்பல், விடாமுயற்சி, விசுவாச வாழ்வு என்பன இவர்களது விலைபேச முடியாத பண்புகள். இத்தகைய மக்கள் வாழும் பங்குகளில் அருட்தந்தையர்களை மையப்படுத்திய ஆன்மீகப் பணிகளும் சமூகப்பணிகளும் நிறையவே செய்த நன்மக்கள் பலருளர். தனித்தியங்கி கலை இலக்கியப் பணிகளும், கல்விப் பணியும் ஆற்றிய இமயங்களும் உண்டு. அந்த வகையில் கல்முனை திருஇருதயநாதர் பங்கில் அளப்பரிய சேவைகள் புரிந்து சேவையின் செம்மலாக இன்றும் மிளிரும் அருட். சகோ. மத்தயு S.S.J அவர்கள் மறக்க முடியாத மாமனிதர். முப்பது வருடங்களுக்கு மேல் கல்வித் துறையில் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தவர். 1993ல் அதிபர் திலகம், 1994ல் வித்யாசிரோமணிப் பட்டம், 1996ல் அகில இலங்கை அதிபர் தங்கப் பதக்கம் அகில இலங்கை சமாதான நீதவான் எனும் சிறப்புக்களைப்பெற்றதுடன் கிழக்கிலங்கையில் தலை நிமிர்ந்து நிற்கும் தேசியப்பாடசாலை கார்மேல் பாத்திமாக் கல்லூரியை கட்டி வளர்த்து பல கல்விமான்களை உருவாக்கிய பெருமையும், அங்கே பல கலைஞர் களையும் உயிர்ப்பித்த பெருமையும், இவருக்குண்டு. அந்த வகையில் உள்மன யாத்திரையின் சிற்பி கலை மணி உமாவரதராஜன், பாவலர் பசீல் காரியப்பர், வீரகேசரி சித்திராஞ்ஜன் ஜனாப் ஏ.எல்.எம். பளீல் D.S என் போரைக் குறிப்பிடலாம். ஆற்றலுடையோருக் கெல்லாம் கலைப்பாலூட்டிய தாயான இவர் சமயம், பொருளியல், இலக்கியம், கல்வி எனப் பலதரப்பட்ட துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளதோடு இரு நூற்றைம் பதுக்கும் மேற்பட்ட சிறப்புச் சொற் பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். கல்முனைப் பிராந்தியத்திலே முதன் முதலில் பரத நாட்டியத்தை பயிற்றுவிக்க வழி செய்தவர். அத்தோடு சிங்கள கலை பண்பாட்டு நிகழ்வுகளை அறிமுகப்படுத்தியது மட்டுமன்றி கிழக்கத்திய இசைக் கருவிகளுடன் கூடிய இசைக்குழுவை உருவாக்கி சாதனைபடைத்தவர். மேலும் கலாநிதி மௌனகுரு அவர்களது அணிந்துரையுடன் தேடல் சில சில முயற்சிகள் எனும் தலைப்பில் 24 ஆய்வுக் கட்டுரைகளடங்கிய நூலை வெளியிட்டு புகழ் படைத்தவர். நூற்றாண்டு விழா மலரை சிறப்புற தொகுத்தளித்ததுடன் உயர்தர மாணவர்களுக்காக இவர் எழுதிய உலக திருச்சபை வரலாறு. இரட்சணிய வலராறு, நிருபமதிப்பீடுகள். அப்போஸ்தலர்பணி ஆய்வு எனும் பல நூல்கள் அச்சிலே உள்ளன. அம்பாறை மாவட்ட இனக்கல வரங்கள் பற்றிய 1994ம் ஆண்டின் ஆய்வு பலரது பாராட்டுக்களையும் பெற்றதொன்றாகும். அன்பினில் மலர்ந்த ‘அமரகாவியம்’ என்பது இவரது கைவண்ணத்தில் மலர்ந்து அரங் கேறிய நாடகமாகும். மற்றும் ‘மாமன்னன் மனமாற்றம்’ நாடகத்தைப் படைத்து கல்முனையிலும் மட்டுநகரில் இரு தடவைகளும் அரங்கிலே தவழவிட்டார். ரூபவாஹினியை அலங்கரித்த ‘பாஞ்சாலியின் சீற்றம்’ நாட்டுக் கூத்து இவரது தயாரிப்பாகும். அதிபர் ஆசிரியர்கள் பட்டறைகளில் விரிவுரைகள் பல ஆற்றி வழிகாட்டிய இப்

உலகிலே மிகச் சிறந்தது மன நிறைவு நிம்மதி, ஆனந்தம் இப்பிரபஞ்சம் ஒவ்வொன்றுடனும் நாம் இணைக்கப் பட்டிருக்கின்றோம் என்னும் உண்மையை அறிதல்.

பெருந்தகை பற்றி தனியொரு நூலே எழுதலாம். இப் பங்கில் பணியாற்றிய அருட் சகோதரி டொறத்தியாவே மேற்கத்திய வேன்ட் வாத்தியக்குழுவை இங்கு உரு வாக்கி வளர்த்தார். தற்சமயம் இவற்றை பொறுப்புடன் பேணிவரும் அருட் சகோதரர் தயாவும் கலையார்வம் கொண்டவர். அக்கினி யாத்திரை, யாகம், வேள்வி, மடியும் மனிதம் போன்ற பல நாடகங்களை நான் எழுதவும். பயிற்றுவித்து மேடையளிக்கை செய்விக்கவும் காலாக இருந்தவர். கோபுரங்கள் உயர்ந்தவை தான், மயிர்நீப்பின் உயிர்வாழா கவரிமான் எனும் நாடகங்கள் இவ்விரு அருட் சகோதரர்களுடன் நான் படைத்தவை அவை சாதனை படைத்தன. சாகித்திய விழாவுக்காக விடியலும் சுடும் நாடகத்தை அருட் சகோதரர் மத்தியு, உமா வரதராஜன் என்போரது கருத்தொருமித்த வழி காட்டலில் நான் வடித்தேன். தற்சமயம் பணியாற்றும் அருட்சகோதரி புஸ்ப்பறாணி. திருமதி றோஸ் ஜோசப், றெஜினா டிலைட் என்போரது கலைப்பணிகளும் குறிப் பிடப்பட வேண்டியவை. இந்த அளவோடு நம் பார்வைக் கோணத்தை சொறிக்கல்முனை திருச்சிலு வைப் பங்கின் புறமாகத் திருப்பினால் கண்முன் தெரிவது பாஸ்க்கா காட்சிகளே. மிகவும் பண்டைய காலம் முதலே பொம்மை யமைப்புக்களால் மனதை உருக்கும் வகையில் இந் நிகழ்ச்சி வருடாந்தம் காட்சிப்படுத்தப்பட்டு வருகின் றது. இத்திருச்சிலுவைக் கோயில் ஒரு யாத்திரைத் தலமாகவும் மிளிர்கின்றது. செபதேயு சட்டம்பியார் காலம் முதல் காலஞ் சென்ற சுவானி விதானையார், யுவான் பிள்ளை கிறகரி என்போர் இதனையொரு தனிக் கலை யாக வளர்த்தனர். ஓய்வு பெற்ற அதிபர் ஜோசப், யூசை ஓடாவியார், வீயோ, யூசையப்பு, மணியத்தார் என்போரின் பங்களிப்புகளும் மகத்தானவை காலஞ்சென்ற A. கிறகரியவர்கள் தன்மகன் ஜோண்சனின் துணையுடன் கண்களை இமைக்கவும், கைகால்களை இயக்கவும் கூடிய யேசு சுருவமொன்றை உருவாக்கி பல நட்பங் களை புகுத்தி சாதனை படைத்தார். இவர் ஒரு நடிகராக, கதாசிரியராக, தொழிற்க லை வல்லுநராகத் திகழ்ந்தவர். கடந்த வருடங்களில் நவீன காட்சியமைப்புகளுடன் மரபு தழுவிய வகையில் பாஸ்கா காட்சிகளை நிகழ்த்தி வருபவர் குருசு மோசேஸ் அவர்கள். இப்பங்கு மிக ஆழமான கலைத்தன்மை கொண்டதென்பதை யாவரு மறிவர். பல பழமை மிக்க நாட்டுக் கூத்துகள் இன்றும் பேணப்பட்டு ஆடப்பட்டு வருகின்றன. காலஞ் சென்ற இன்னாசி அண்ணாவியார், சவரியார் என்போருடன் தற்சமயம் விருதுபெறும் வி. குருசுத்தம்பி, ஜோசப் தம்பி ஐயா, ஞானப்பிரகாசம், செபமாலை என்போரும் குறிப்பிட வேண்டியவர்கள் மேலும் வடபுல யாழ்பாண கலைப் பூமியில் இருந்து வந்து கடந்த பதினைந்து வருடங் களுக்கு மேலாக வாழ்ந்து வரும் கிறகரி அன்ரனிய வர்கள் ஒப்பனை, ஓவியம், நடிப்பு எனப் பல துறை களில் பிரகாசித்து வருகிறார். ஈழத்து திரைப்படமான குத்துவிளக்கில் ஒரு காட்சியில் நடித்தவர். இப்பங்கில் அருட்தந்தை எல்மோ. அருட் சகோதரி றுபீனா அவர் களது பணிக்காலம் ஒரு பொற்காலமென குறிப்பிட வேண்டும். நடனம், நாடகம், பேச்சு, பாடல், எனும் பல துறைகளில் கலையார்வத்தை தூண்டி கலைஞர்களை இனம்கண்டு வளர்த்து விட்டனர். இக்காலத்தே நான் சிறுவன், வாமகனேவா எனும் நாடகத்தில் எல்மோ அடிகளின் நெறியாள்கையில் நடித்தேன். சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழாவை கோலாகலமாக நடாத்தி அறிஞர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களை நடுவராக, சிறப்புப் பேச்சாளராக அழைத்து அவர் படைத்த வரலாற்றுத் தடங்கள் மறக்க முடியாதவை. இத்தகைய பல பெருமகன்களுடன் வாழவும், கலை பணிபுரியவும் எனக்கு உயிர்தந்த தூயவர் யேசுவை யும் என்னை அவையத்து முந்தியிருக்கச் செய்த பெற் றோரையும் போற்றி விடை பெறுகின்றேன்.ள

***பைந்தமிழ்க் குமரன்.***

அனுபவம் என்கின்ற பள்ளிக்கூடத்தில்தான் மூடர்கள் கற்றுக் கொள்கிறார்கள். புத்தி சாலியோ பிறருடைய அறிவுரை யிலிருந்தும் தன் வாழ்வை திருத்திக் கொள்கிறான்.

எண்ணங்கள்ரகசியமானவை அவற்றை மறைத்து விடலாம் என்று நம்புகிறார்கள் மக்கள்ஆனால் அவற்றை ஒரு நாளும் நாம் ஒ ரித்துவைக்க முடியாது.

*ஜேம்ஸ் ஆலன்.*

# வறிய நெஞ்சங்களை நிறைப்பவனே

நீசருக்கும் நேசம் காட்டும்
நல்ல யேசுவே — நின்
நேசம் தேடி அலைகின்றேன்
எந்தன் நேசனே;

அருகினிலே நீயிருந்தும்
கருணை தெய்வமே;
அறிந்திடாமல் அரற்றுகின்றேன்
அன்பு யேசுவே;
மாறிடாத நேசம் கொண்டு
என்னில் நீயுமே;
எல்லாமுமாய் இருக்கின்றாய்
எந்தன் தந்தையே;
பாவி நானும் உன்போல் வாழ
கருணை கூருமே —என்
நெஞ்சில் உனை சிறைவைக்க
இரக்கம் காட்டுமே;
தீயவனை விலக்கி விட
வலிமை தாருமே;
உன் நேசத்தில் எனையெரிக்க
தயவு காட்டுமே;



வி. ஷர்மினி,
கல்முனை.

# கல்முனைப் பிரதேச அவைக்காற்றுக் கலைகள்

இப்பிரதேசத்தின் அவைக்காற்றுக் கலைகளாக நாடகம், நாட்டுக்கூத்து, நடனம், இசைக்குழு போன்றன பரவலாகப் பயிலப்படுகின்றன.

70க்குப் பின், இலங்கையில் நாடகம் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்படும் கலையாகும். யாழ் பல்கலைக் கழகத்தில் பலபரிசோதனை நாடகங்கள் மேடையேற்றப் பட்டன. சிங்கள மக்களிடையே நாடகம்பற்றிய புதிய பரிமா ணங்களும் புதிய சிந்தனைகளும் முகிழ்ந்துள்ளன. ஒப்பீட் டளவில் இப்பிரதேசத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் எத்தகையன என்பதை அறியவேண்டியது அவசியம்.

இங்கு மேடையேறிய நாடகங்களில் ஒருவகை ஆங்கிலத்தில் Farce எனப்படும் களிக்கூத்துப் போன் றவை. திருவிழாக்களிலும், பண்டிகைகளின்போதும் நடிக்கப் படும் நாடகங்கள் இவையாகும்.

1976ல் கல்முனைக் கலாலயம் ஆரம்பிக்க பட்டதும் பல நாடகங்கள் மேடையேறின. கலாலய நடிகர் களாக E. சிவானந்தநாயகம், C.N. செல்வராஜா, C.V சரவணபவன், P. நமசிவாயம், சி. மனோகரன் ஆகியோர் நடித்தனர். இந்நாடகங்கள் மேடையமைப்பு, காட்சியமைப்பு, ஒப்பனை, அலங்காரம், திரை எதுவுமின்றி திறந்த அரங்கில் நடிக்கப்பட்டன.

இவர்கள் நடித்த 'தம்பி வரட்டும்' என்ற முழுநீள நகைச்சுவை நாடகம் மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை 16 தடவை மேடையேறிற்று. ஏழை, பணக்காரத் தனத்தைக் கிண்டல் செய்வதும், சீதனம், சாதி போன்ற வற்றைச் சாடுவதும் இந்நாடகத்தில் காணப்பட்டாலும், மக்களைச் சிரிக்கவைப்பதே நோக்கமாயிருந்தது.

இப்பிரதேசத்திலுள்ள பாண்டிருப்பில், நகைச் சுவைக் கலைஞர் க. கந்தக்குட்டி 100க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். இவருடைய 'வா கோட்டுக்குப் போக' என்ற நாடகம் அதிக தடவை பல ஊர்களிலும் மேடையேறியது. கந்தக்குட்டியோடு, 'அப்பு' என்ற அற்புதராஜா, அன்பு, S. சந்திரலிங்கம், T. புவனராஜா போன்றோர் மேடையில் துணிச்சலாக 'நக்கல்' செய்து நடிப்பதில் வல்லவர்கள்.

இம்மாதிரி நாடகங்கள் கருத்தாழமோ, கணிக் கக்கூடிய முன்னேற்றமோ இல்லாமல், எந்த இலக்கிய தரத்தையும் எய்தாமல் பண்டிகை கொண்டாடும் மக்களின் மனோபாவத்திற்கேற்ப அவர்களைச் சும்மா சிரிக்கவைத்து மறைவன. இத்திடீர் நாடகங்களில் நகைச்சுவையாவது, புதிய வண்ணங்களில், குறியீடுகளில், மெய்ப்பாடுகளில் நவீன பாங்குடன் வளர்ந்ததாக இல்லை.

நகைச்சுவை நாடகங்கள் தவிர்ந்த ஓரளவு கனதி (Serious Play) கூடிய நாடகங்கள் இரண்டாவது வகையின. 1930களில் கலைஞர் N.S.கிருஸ்ணன் போன்றோரின் தென்னிந்திய நாடகக்கம்பனிகள் நடத்திய நாடகங்கள் மக்களை ஈர்த்தன. தம்பிலுவில்லில் சதாரம் (1956), நாககன்னி (1963), கிருஸ்ணலீலை (1964), ஜெகதலப் பிரதாபன் (1964) போன்ற நாடகங்கள் மேடையேறின. கல்முனையில் 1939ல் ஆரம்பிக்கப்பட்ட சண்முக கான நாடக சபா, சத்தியவான் சாவித்திரி (1950), பாமா விஜயம், காளிதாஸன், லலிதாங்கி, குலேபகாவலி ஆகியவற்றை மேடையேற்றியது. 1965ல் கல்முனை முத்தமிழ்க் கலா மன்றம் அமரர் இலங்கையர்கோனால் ஸ்தாபிக்கப்பட்டது. V. சடாட்சரன் எழுதி நெறியாள்கை செய்த 'பெற்ற மனம்', 'இன்பவாழ்வு' போன்ற நாடகங்கள் அரங்கேறின. இவற்றில் மணிவாசன், K. பீதாம்பரம், திரு நாவுக்கரசு, சீ. மனோகரன், பொன். சிவானந்தன், K. பரராச சிங்கம் போன்றோர் நடித் தனர்.

கல்முனையில் ஆரம்பிக்கப்பட்ட 'கலைக்குழு' அகக்கண் (1974) சந்தனச்சிலை, குலேபகாவலி போன்ற வற்றை மேடையேற்றினர். இந்நாடகங்கள் இடையிட்ட இசையுடையன. ஆண்களே பெண் பாத்திரங்களை ஏற்று நடித்தனர். ஆண்கள், பெண்களாக ஒப்பனை செய்து நடித்த போது அந்த வேஷம் கேலிக்கு இலக்காகும் சமயங்களில், நாடகத்தின் Serious தன்மையை இழக்கச் செய்துவிடும். இந்நாடகங்களைப் போடும் செலவு, நடிக்கப் பெண்கள் முன்வராமை, ஒத்திகை பார்த்தல் ஒழுங்காயிராமை போன்ற கஷ்டங்களால் இந்நாடகங்கள் முன்னெடுத்துச் செல்லப் படவில்லை.

## கல்முனைப் பிரதேசத்தில் நடைபெற்ற பல பரிசோதனை நாடகங்கள்

இலங்கையர்கோன் 'இராவணேஸ்வரன்' நாடகம் 1961ல் சக்தி நாடக சபாவுக்காகப் பாண்டிருப்பில் மேடையேற்றப்பட்டது. இதன் எழுத்துப் பிரதியாக்கத்தையும் தயாரித்து, இயக்கத்தையும் செய்தவர் திரு. சண்முகம் சிவலிங்கம் ஆவர். இராமாயணத்தில் எதிர்மைப் பாத்தி ரமான இராவணனை, சேக்ஸ்பியரின் துன்பியல் நாயகனான மக்பெத் (Macbeth) ன் சாயலில் உருவாக்க முனைந்தார்.

திரு. சண்முகம் சிவலிங்கம் இராவணேஸ்வரனாக நடித்து இந்நாடகத்திற்குச் சிறப்புச் சேர்த்ததை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இரா. கிருஷ்ணபிள்ளை, சா. செல்வராஜா, இ. செல்வரெத்தினம், வேதாரணியம் ஆகியோர் இதில் நடித்தனர். மேடையை நடுத்திரை ஒன்றினால் பிரித்து அலங்காரமான ஒப்பனைக் கவர்ச்சியும், இடைநிறுத்தமோ, திரை விழுவதோ அல்லாமல் தொடர்ந்தேச்சியாக நாடகத்தை நடத்தியது 1960களில் புதுமையே.

அமரர் நீலாவணன் 'மழைக்கை' என்ற கவிதை நாடகத்தை இலங்கையர்கோன் நினைவு தினத்திற்காக மேடையேற்றினார். செஞ்சோற்றுக்கடன் தீர்த்த கர்ணன் கதையிது. இது அறுசீர் விருத்தப்பாவினால் மிகவும் நயமான பேச்சோசைப் பண்பில் அமைக்கப்பட்ட இலகு நடை மேடை நாடகமெனலாம். இப்பிரதேசத்திற்கு இந் நாடக முயற்சி ஒரு முன்னோடியாகும். சிறந்த ஒப்பனை, அலங்காரம், மேடை அமைப்பு, ஒலி, ஒளியமைப்புயாவும் அமைக்கப்பட்டிருந்தன.

இன்று இலக்கிய கர்த்தாக்களான மருதூர்க் கொத்தன் கண்ணனாகவும், கவிஞர் நீலாவணன் குந்தியாகவும், திரு V. சடாட்சரன் கர்ணனாகவும், திரு K. பீதாம்பரம் இந்திரனாகவும், கலாநிதி நுகுமானும், மருதூர்க்கனியும் பிராமணர்களாகவும் பாகமேற்று நடித்து, தாங்கள் இன, மத பேதமற்ற கலைத்தொண்டாற்றுபவர்கள் எனச் சிறப்படைந்தனர்.

1968ல் தம்பிலுவில்லில், வங்கி யாளரான எஸ். பொன்னுத்துரை சேக்ஸ்பியரின் 'ஒத்தெலோ' (Othelto) நாடகக் கதையை மொழிப்பெயர்த்து, வசனப்பிரதியாகத் தயாரித்து, எஸ். சீவரெத்தினத்துடன் இணைந்து 'முதற் பரிசு' என்ற நாடகத்தைத் தயாரித்தளித்தார். இந் நாடகத்தில் பேராதனைப் பல்கலைக்கழக நாடகங்களின் தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது. திரைச்சீலை மூடப்படவில்லை. Lights on, Lights off என்று காட்சிகள் மாறின. அன்றைய சினிமாவினை (Benlten) ஒட்டி ஆங்கில பாணியில் உடை, ஒப்பனை, அலங்காரம் யாவும் அமைக்கப்பட்டிருந்தது. 3 மணிநேரம் நடைபெற்ற இந்த நாடகத்தில் இரட்டையர் இருவர் முன்பாதியிலும், பின் பாதியிலும் ஆக மாறி மாறி நடித்தனர். இப்பிரதேசத்தில் முதல் முதல் நடந்த மொழி பெயர்ப்பு நாடகம் இது எனவும், பெண்கள் பாத்திரமேற்று நடித்ததும் இந்நாடகத்தின் சிறப்பாகும்.

1972ல் கல்முனை வட்டாரக் கலை விழாவொன்றில் இப்பிரதேசத்தின் மூத்த கலைஞர்களில் ஒருவரான மருதூர்க்கொத்தனின் "பாவம் நரிகள்" நாடகம் மேடையேற்றப்பட்டது. மருதூர்க்கொத்தின் இதனை எழுதி, நெறியாண்டார். காட்டு மிருகங்களைக் கதாபாத்திரங்களாக்கி, அவர்களிடையே நடைபெறும் சம்பவம் ஒன்றைக் கருவாகக்கொண்டு, அதிகார வர்க்கத்தின் சுரண்டலை, கையூட்டு கொடுப்பதை, வர்க்க பேதத்தைச் சாடினார். தாளலய நாடகமான இந்த முயற்சி சமூக விரோதிகளின் முகமூடியைக் கிழித்தெறிந்து சாதனை செய்தது. இதனைப் பலரும் பாராட்டியதோடு, மல்லிகையில் க. நவம் குறிப்பிட்டும் எழுதினார்.

1974ல் நாடகக்கலையில் மிகுந்த ஆர்வமுடைய பாத்திமாக் கல்லூரி அதிபர் வண. சகோ. S.A.I. மத்தியு அவர்கள் பைபிளில் உள்ள யேசுவின் திருப்பாடுகளை வசனத்தில் அமைத்து, நாடகமாக நெறியாள்கை செய்தார். 'பாஸ்கா' எனப்படும் இப் Passion Play, வழமையாகச் சிலைகளைக்கொண்டு செய்யப்படும் 'பஸ்க'விலும் புதியது. இது 6 மாதகாலம் ஒத்திகை நடத்தி C.N. செல்வராஜன் போன்றோரின் உதவியுடன் 50,000 ரூபா செலவில் மேடையேற்றப்பட்டது. பிரமண்டமான 4(25' x 40') மேடைகளும், 100' நீளப்பாதையொன்றும் அமைக்கப்பட்டது. திறந்த இம்மேடைகளில் ஒரேநேரத்தில் பல காட்சிகள் சிறந்த ஒலி, ஒளி அமைப்புடன் நடைபெற்றன. 150க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நடித்தனர். பல ஊர்களிலும் இருந்து 15,000த்திற்கு மேற்பட்ட ஜனங்கள் வந்திருந்தனர். இந்தப் பாரிய நாடகம் கத்தோலிக்கர், கிறிஸ்தவர், இந்துக்கள், இஸ்லாமியர் என்ற மதபேதமின்றிப் பார்த்தனுபவிக்கப்பட்டதெனலாம்.

புதுமோடிகளுக்காக உமா வரதராஜன் 'மணிக்கூட்டு மனிதர்கள்' என்ற நாடகத்தை எழுதித் தயாரித்து மேடையேற்றினார். வளவளா என்று வீணே பேசிக் காலத்தை விரயமாக்கும் ஒரு கவிஞனும், கால ஓட்டத்தை எண்ணி எண்ணிச்சாகும் ஒரு குமாஸ்தாவும் ஆகிய இரு முரண்பட்ட பாத்திரங்களை 25 நிமிடத்திற்கு மேடையேற்றினார். கதை என்று ஒன்றில்லை. இழுத்து இழுத்து மூடும் திரையொன்றும் இல்லை. இரண்டே காட்சிகளில் நாடகம் முடிவடைந்தது. இது நாடக முயற்சிகளில் புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்ததெனலாம். அபத்த நாடக வகையை ஒட்டியது. புதுமோடிகளில் இன்னுமொருவரான சபா. சபேசன் 'ஷகானம்' மரணகீதம் என்ற நாடகத்தை மேடையேற்றினார். தனக்கு மட்டும் தெரிந்தவளாக வாழ்ந்து, இறந்துகிடக்கும் தன் மனைவியின் மரணவீட்டில் ஒலிக்கின்ற இழவுப்பறையில் சிக்கி, அவள் மரணத்திற்கான காரணத்தை ஐயத்தோடு அசைபோடுகிறான். அக்காரணங்களைப் பறை ஒலி அம்பலப்படுத்துவதாக எண்ணிக் கொள்கிறான். அலம்பல் சிலம்பல் இல்லாத கதை, கச்சிதமான ஒலி, ஒளியமைப்புடையதாயிருந்தது. பொதுமக்களிடையே சலசலப்பையும், புருவத்தை உயர்த்திப்பார்க்கும்படியான எதிர்பார்ப்புகளையும் உருவாக்கிய புது மோடிகளுக்குக் கால அவகாசம், நாட்டின் சூழல்யாவும் தடையாயிற்று.

கலாநிதி மௌனகுரு எழுதிய 'தப்பிவந்த தாடி ஆடு' என்ற நாடகம் கல்முனை கார்மேல் பாத்திமாக்

கல்லூரியினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. சிறுவர்களின் உளவயது, அநுபவம் ஆகியவற்றிற்கு ஏற்ற வகையில் இக்கதை அமைந்துள்ளது. ஆடம்பரமற்ற குறியீட்டு மேடை அமைப்பு, பாத்திரங்கள், பாடுவோர், கூறுவோர் (Narrators), பாவனைக்கு முக்கியம் அமைத்தல், இனிய இசை, ஒப்பனை, கருத்தாழம் உள்ள வசனங்கள், அறிவுரைகள், யாவும் இந்நாடகத்தின் புதுமைகளாம்.

இதே கல்லூரி 'மாமன்னன் மனமாற்றம்' என்ற பைபிள் கதையை நாடகமாக்கி மேடையேற்றியது. நாடகமும் அல்லாத, நாட்டிய நாடகமும் அல்லாத புதிய பாங்கு இந் நாடகத்தில் காணப்பட்டது. நடனம், இசை என்பன கூடி, வசனங்கள் குறைவாகக் காணப்பட்டது. அலங்காரம், ஒப்பனை, ஆடை, அணிகலன், ஒலி, ஒளி யாவும் நவீன பாணியில் ஆக்கப்பட்டிருந்தது.

## பாடசாலை நாடகங்கள்

பொழுதுபோக்கு நாடக மன்றங்களுக்கப்பால் பாடசாலைகளிலும் நாடகங்கள், கலை விழா, தமிழ்த்தினப் போட்டி போன்றவற்றில் மேடையேற்றப்படுகின்றன.

ஜனாப் சக்காப் மௌலானா மருதமுனை அல்மனாரில் ஆங்கில நாடகங்களை மொழி பெயர்த்தும், தாமே சரித்திர, சமூக நாடகங்களை எழுதியும், தயாரித்தும் மேடையேற்றினார். கல்முனை சாகிராவில் சண்முகம் சிவலிங்கம் 'ஆக்காண்டி' என்ற நாடகத்தை தமது 'ஆக்காண்டி ஆக்காண்டி' கவிதையை மையமாக வைத்துத் தயாரித்துத் தமிழ்த்தினப் போட்டியில் வென்றெடுத்தார். ஆக்காண்டி நாடகம் இப்பிரதேசத்தில் முதன் முறையாக நாட்டிய நாடகப் பாவனையில் அமைந்ததெனலாம். மருதமுனையில் 1962 'ஏழை அழுத கண்ணீர்' என்ற நாடகத்தை மருதூர்க் கொத்தன் தயாரித்து மேடை யேற்றினார். கொத்தனின் 'சுடர் விளக்கு' நாடகம் 63ல் மேடையேறியது. 1973ல் 'நெஞ்சே நீ சொல்' என்ற நாடகத்தைக் கார்மேல் பாத்திமாக் கல்லூரி மேடையேற்றியது. இந்நாடகத்தில் ஆசிரியர்களோடு சேர்ந்து வண. சகோ.S.A.I. மத்தியு நடித்தார். ஆண்களின் சபல புத்தியைக் காட்டும் வண்ணம் அரங்கேறிய இந்நாடகத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் நடித்தனர். இதே நாடகம் C.N. செல்வராஜனால் நெறியாளப்பட்டு தம்பிலுவில் மகாவித் தியாலயத்தினால் 1977ல் தமிழ்த்தின விழாவில் பரிசு பெற்றது.

1975ல் வண. சகோ. S.A.I. மத்தியு பிரதம பாத்திரமேற்று நடித்த 'பண்டா கல்முனைக்கு வருகிறார்' என்ற சிங்கள மொழிக் கலப்புடைய நாடகம் கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் அரங்கேறிற்று. இக்கல்லூரி 'குந்தி' நாடகத்தைத் தமிழ்த்தின விழா (74) வில் வென்றெடுத்தது. கார்மேல் பாத்திமா கல்லூரியில் சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களும் டிக்கன்ஸின் நாடகங்களும் மேடை ஏறின. சிங்கள நாடகங்களும் மேடையேற்றப்பட்டன.

மருதூர்க்கனியின் 'அருமந்த அரசன்' (1969) நாடகம் அதன் தலைமைப் பாத்திரமான மநுநீதிச் சோழனின் சிறந்த நடிப்பிற்கான பரிசு பெற்றது.

கல்முனை மகமூத் மகளிர் கல்லூரி தமிழ்த்தின விழாவில் நாடகமொன்றை வென்றெடுத்தது. 1989ல் வெஸ்லி உயர்தர பாடசாலை 'வீடும் வெளியும்' என்ற குறியீட்டு நாடகத்தைத் தமிழ்த்தின விழாவில் அரங்கேற்றி வென்றெடுத்தது. நாடகக் கலைஞரான கல்முனை இரா, ('தொம்ப்சியா' படத்தயாரிப்பாளர்) ஆசிரியர் அல்லாப்பிச்சை போன்றவர்கள் நாடகங்களை இயக்கியுள்ளனர்.

பாடசாலை நாடக முயற்சிகள் வளர்ச்சிக்குரிய போக்கை அடையவில்லை.

சிறுவர் நாடகங்கள் நடிக்கப்படுவது குறைவு. மாணவர்களின் ரசனையை, நடிப்பாற்றலை வளர்க்கும் முயற்சிகளில் ஆசிரியர் மனங்கொள்ளல் வேண்டும். மாணவர் ரியுசன், ரியுசன் என்று நேரங் காணாமல் அலைகிறார்கள்.

தொடர்ச்சியாக நாடகங்களைத் தயாரித்து அவற்றில் மாறுபட்ட பரிசோதனைகளைச் செய்ய ஆசிரியர்கள் முன்வருவதில்லை. பாடப் புத்தகங்களில் நாடகம் பற்றிய விடயங்கள் குறைவு எனலாம்.

பாடசாலைகளில் இலக்கிய மன்றங்கள் இயங்குவதில்லை. சிறந்த நாடகாசிரியர்கள் நாடகங்களை எழுதித் தர மனம் வைப்பதில்லை.

## நாட்டுக்கூத்து

நீண்டகாலமாக தமது பிரதேசத்தில் நாடகம் என்பது நாட்டுக்கூத்து வடிவத்தில் ஆடப்பட்டது. நவீனமயமப்படுத்தப்பட்ட மக்கள் வாழ்க்கை, நாட்டுக் கூத்தின் சில மரபுகளை அழித்துவிட்டது. விவசாயிகளான இம்மக்கள் வயல்வேலை முடிந்ததும் ஓய்வு நேரத்தில் கூத்துப் பயில்வது வழக்கம். பள்ளு, குறவஞ்சி போன்றன இக்கிராமங்களில் ஆடப்பட்டன. தம்பிலுவில்லில் 'விலாசம்' என்றொரு கூத்து இன்றும் வழக்கில் உண்டு.

ஆட்டமும் இசையும்கொண்ட நாட்டுக்கூத்துக் கதைகள் மக்கள் மத்தியில் பிரபல்யமானவை. இதனால் தான் நவீன நாடகங்களைப்போல, சம்பவங்களில் எதிர் பார்ப்பு, திடீர் திருப்பம் போன்றன நாட்டுக் கூத்து உத்திகள் எனக் கையாளப்படுவதில்லை. வடமோடிக் கூத்துக்களிலும், தென் மோடிக் கூத்துக்கள் நுணுக்கம் கூடியன.

தம்பிலுவில்லில் அண்ணாவியார் சுவை. சரவணமுத்து அலங்காரரூபன் (1962) என்ற தென்மோடிக்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கூத்தையும், சயிந்தவன் (1976) எனும் வடமோடிக் கூத்தையும் மேடை ஏற்றினார். அண்ணாவி பெ. கந்தையா துரோபதை துகிலுரிதல் (1055), வாளவீமன் (1956) போன்ற வற்றை நெறிப்படுத்தினார். அண்ணாவி வேலுப்பிள்ளை சிறிவள்ளி (1964), வீரகுமாரன் (1978) ஆகிய கூத்துக்களை மேடையேற்றினார். இக்கூத்துக்களில் ஒப்பனை அலங் காரம் சினிமாவை ஒட்டி அமைந்திருந்தது.

அண்ணாவி சீதை சின்னத்தம்பி குருக்கேத்திரன் போர் (1954), நச்சுப்பொய்கை (1955) போன்றவற்றை அரங்கேற்றினார். அமரர் சங்கீதபூசணம் எழுதிய 'காமதேனு பர்வதம்' என்பதை இவரே நெறியாண்டார்.

திருக்கோவிலில் திவ்வியாலயா கலாமன்றம் அமைத்து திகாமடுல்ல பராளுமன்ற அங்கத்துவரும், பிரபல நாட்டுக்கூத்து கலைஞருமான கௌரவ து. திவ்வியநாதன் இரு கூத்துக்களை தாமே எழுதித் தயாரித்து அரங்கேற்றினார். "வெற்றித்திருமணம்" என்ற கூத்து பனங்காடு, கோளாவில், கண்டி, திருமலை போன்ற இடங்களில் அரங்கேறியது. இனிய இசையுடைய தாய் ஆண்களும், பெண்களும் ஆடிய இக்கூத்துக்களில் கலாநிதி R. வித்தியானந்தனின் நவீனம் படிந்திருந்தைக் குறிப்பிடலாம்.

அக்கரைப்பற்றில் 'விராட பருவம்' (1952), சூரசம் காரம் (1954) போன்ற கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன. 'கண்டி நாடகம் (1956) M. குஞ்சுத்தம்பி அண்ணாவியா ராலும், 'இராம நாடகம்' (1957) இராவணர் வேலுப் பிள்ளையாலும், 'மாடு பிடி சண்டை' (1967) முருகப்பன் அண்ணாவியாராலும் தயாரித்து ஆடப்பட்டன. 'அண்ணாவி மணி' எனப்போற்றப்பட்ட ஆசிரியர் வேலுப்பிள்ளை 'பாரிசாத புஸ்கரணம்' (1958), லவகுசன் (1961), 'புலந்திரன் களவு' போன்ற நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றினார். 'புலந்திரன் களவு' அகில இலங்கை ரீதியில் புகழீட்டி, யாழ்ப்பாணம், முருங்கன், கொழும்பு போன்ற இடங்களிலும் ஆடப்பட்டது. 'கவிஞர் அக்கரைமாணிக்கம்' போன்ற இளைஞர்கள் நாட்டுக்கூத்துக் கலைஞர்களாக இக்கூத் துக்களில் ஆடிச் சிறப்புச் சேர்த்தனர்.

கல்முனையில் 1930 – 1955 வரை மு. கணவ திப்பிள்ளை அண்ணாவியார், F. வன்னியான்பிள்ளை அண்ணாவியார் இருவரும் வடமோடியில் 'புருவச்சக் கரவர்த்தி', 'வள்ளியம்மை' 'ஆரவள்ளி-சூரவள்ளி', 'குருக்கேத்திரன் போர்' போன்ற கூத்துக்களையும், 'அலங் காரரூபன்', மதன சுதந்திரன்', 'வாளவீமன்', இராவண சம்காரம்', 'சாம்பசந்திரன்' போன்ற கூத்துக்களை அரங் கேற்றினர். பாண்டிருப்பில் நீண்டகாலமாக 'இராம நாடகம்', வாள வீமன்' நாடகம் போன்றன அரங்கேற்றப்பட்டுள்ளன. இவற்றுடன் 'உருத்திரசேனன்', 'குருக்கேத்திரன் போர்' போன்ற கூத்துக்களும் ஆடப்பட்டுள்ளன.

காரைதீவில் 1950களில் கைலாயபிள்ளைக் கப்பு கனார் 'ராமலக்குமணர்', 'வள்ளியம்மை' போன்ற வடி மோடிக் கூத்துக்களை அரங்கேற்றியுள்ளார். கல்முனைப் பிரதேசத்தில் உள்ள நற்பிட்டிமுனை, சேனைக்குடி போன்ற ஊர்களில் கூத்தாடுது வழக்கமாகும்.

பாடசாலைகளிலும் மரபுவழி நாட்டுக்கூத்து ஆடப் பட்டன. முன்முயற்சியாகக் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் யோகம் வேலுப்பிள்ளையின் அனுசர ணையில் 'உத்தமன் பரதன்' என்ற நவீன நாட்டுக் கூத் தைத் திருமதி ரதினி செபஸ்தியான் நெறியாள்கை செய்தும், அவரே பரதனாக ஆடியும் மேடையேற்றினார். 1976ல் கல்முனை சாகிறாவில் நடைபெற்ற தமிழ் விழாவில் இக் கூத்து ஆடப்பட்டது. திருமதி திரவியம் இராமச் சந்திரன் எழுதியளித்த இக்கூத்தின் இசைநயமும், நவீன பாணியினா லான ஆடை அலங்காரமும் குறிப்பிடத்தக்கது. அக்கரைப் பற்று R.K.M. பாடசாலை 1990களில் 'பாமாருக்மணி' என்ற நாட்டுக்கூத்தை மத்தளம், ஆர்மோனியம், டோலக் போன்ற வாத்தியங்களைக் கையாண்டு புதிது படைத்தது. பாண்டி ருப்பு இந்து மகா வித்தியாலயம் 'பாரிஜாதம்' கூத்தைத் (1993) தமிழ்த்தின விழாவில் ஆடியது.

தாமே எழுதி நெறிப்படுத்திய ரூபவாஹினிக் கூத் துக்கள் என்ற புதிய மரபைப் பாடசாலைக் கூத்துக் களுக்கு ஏற்படுத்தியவர் அதிபர் வண. சகோ. S.A.I. மத்தியு அவர்களாவர். இதனையொட்டி 'கீசவன் வதை' கூத்தை உமாவரதராஜனின் சிபார்சினால் கார்மேல் பாத்திமாக் கல்லூரி 1892ல் ரூபவாஹினிக்கு அளித்தது. இதே கல்லூரி 'மண்டோதரி புலம்பல்' என்ற கூத்தையும் (1993) தமிழ்த்தின விழாவில் ஆடி வெற்றி பெற்றது.

வெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் B. வெங் கடாசலத்தின் முயற்சியால் 'உத்தமன் பரதன்' ரூபவாஹினி யில் ஒளிபரப்பப்பட்டது. பல பாடசாலைகளில் நாட்டுக் கூத்துக்களைத் தயாரிக்கும் முயற்சிகள் இப்பிரதேசத்தில் உண்டு எனலாம்.

1992ல் கூத்துசார் நாடகமாக 'மாமன்னர் மன மாற்றம்' என்ற நாடகம் கார்மேல் பாத்திமாக் கல்லூரி அதிபர் S.A.I. மத்தியு S.S.J. அவர்களால் மேடையேற்றப் பட்ட இந்நாடகம் கல்முனையிலும் மட்டு நகரிலும் மேடை ஏறியது.

*திருமதி. க. லோகிதராஜா*
உப அதிபர்
கார்மேல் பாத்திமாக் கல்லூரி
கல்முனை

பானை மண்ணிலிருந்து செய்யப்படுகிறது உபயோ கிப்பதோ உள்ளே உள்ள இடத்தைத்தான். கதவும், ஜன்னலும் அறையை உண்டாக்குகின்றன உபயோ கிப்பதோ ஒன்றுமில்லாத உள்ளிடத்தைத்தான்.

*சீன் ஞான் லாகு*

# வெள்ளி விழா ஆண்டில் வெரித்தாஸ் தமிழ்ப்பணி

இன்று உலகின் பல நாடுகளிலும் தமிழ் ஒலிபரப்புகள் நடைபெறுகின்றன. ஈழத் தமிழரின் புலப்பெயர்வுக்குப் பின் தமிழ் ஒலிபரப்புகளின் தொகை அதிகரித்துள்ளதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆயினும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஒலி பரப்பாகிவரும் வெரித்தாஸ் தமிழ்பணி இவற்றுக்கிடையே தனித்து-தலை நிமிர்ந்து நிற்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

முழுமனித வளர்ச்சியை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள், நீதிக்காகவும், நியாயத்துக்காகவும், அடக்கி ஒடுக்கப்படுகின்ற மக்களுக்காகவும் ஒலிக்கும் உரிமைக்குரல், அதனூடாக வெளிப்படும் ஆழ்ந்த மனிதநேயம் போன்றவை பேதங்களைக் கடந்து அனைத்து நேயர்களையும் வெரித்தாஸ் தமிழ்ப்பணியை நோக்கி திரும்ப வைத்துள்ளது. சிறப்பாக ஈழத்தமிழரது உரிமைப் போராட்டத்தின் சகல பரிமாணங்களையும் தெரிந்துகொண்டு ஆதரவு காட்டி நிற்கும் வெரித்தாஸ் தமிழ்ப்பணி போலியான நடுவு நிலைமைகளை புறந்தள்ளி உண்மைக் குரலாய் ஒலித்து வருகிறது என்பது பாராட்டுக்குரியது.

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவிலிருந்து ஒலிக்கும் வெரித்தாஸ் வானொலி ஆசிய கத்தோலிக்க ஆயர் பேரவையால் 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் நாள் நிறுவப்பட்டது. வெரித்தாஸ் (VERITAS) என்னும் இலத்தீன் மொழிச் சொல்லுக்கு உண்மை என்பது பொருள். உண்மையான செய்திகள் மக்களைச் சென்றடையவும் உயர் விழுமியங்களை போற்றி வளர்க்கவும் ஆசிய மக்களின் மொழி, இன, மத, பண்பாடு, கலாசாரம் போன்ற வைகளைப் பாதுகாத்து, முழுமனித வளர்ச்சியை காணவும் வெரித்தாஸ் வானொலி உழைத்து வருகிறது.

ஆசிய நாடுகளில் வழக்கிலுள்ள இருபத்தினான்கு மொழிகளில் தினமும் காலை அரைமணி நேரமும் மாலை அரை மணி நேரமும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. எவ்வித வர்த்தக நோக்கமும் வருமானமும் இன்றி செயற்படும் வெரித்தாஸ் வானொலி முழுக்க முழுக்க கத்தோலிக்க திருச்சபையின் உதவியோடும் அன்பர்களின் ஆதரவோடும் இயங்கிவருகிறது. ஒவ்வொரு மொழிக்கான நிகழ்ச்சிகளுக்கும் அந்தந்த மொழிகளைப்பேசும் மக்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட நாடுகளில் உள்ள தலத்திருச்சபையே பொறுப்பாக இருக்கிறது. அவ்வகையில் தமிழ் நிகழ்ச்சிகளுக்குத் தமிழ் நாடும், சிங்கள நிகழ்ச்சிகளுக்கு இலங்கையும் பொறுப்பாக இருக்கின்றன.

வெரித்தாதாஸ் வானொலியில் தமிழ்ப் பணி 1976ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அதன் இயக்குனராகப் பொறுப்பேற்று தொடர்ந்து பத்து ஆண்டுகளாக நடாத்தி வளர்த்துவிட்டவர் காலஞ் சென்ற திரு.எம்.ஏ.சாமி அவர்கள். அவருடன் அவரது மகன் ரபிபேர்னாட் மற்றும் மார்க்கிரட் செலின், புனோரா ராணி போன்றோரும் பணியாற்றினர். அதன்பின் அருள் தந்தை செபா (ஸ்டின்) பொறுப்பாளர் ஆனார். அவரைத் தொடர்ந்து அருள்தந்தை ஜெகத்கஸ்பார் வெரித்தாஸ் தமிழ்ப்பணியை பொறுப்பேற்று மிகத் திறமையாக நடாத்தி வருகின்றார். இவர்களுடன் றைசல், செலன் மேரி, ரூபி, வி.மகிழன், சி.ஆன்ட்டோ, இ.ஏ. சகாயராஜா, ஜே. அக்னஸ் ஹேமா போன்றோரும் இணைந்து தமிழ்ப்பணியை வளர்த்துள்ளனர்.



வெரிதாஸ் கலையகமும் அலுவலகமும்

வெரித்தாஸ் தமிழ்ப்பணியில் ஒலிபரப்பாகி வரும் நிகழ்ச்சிகள் மிகத் தரமானவை என்பது பலரதும் கருத்தாகும். இவைகள் பெரும்பாலும் தமிழ்நாடு சாந்தோர்

கலைத்தொடர்பு நிலையத்தின் தயாரிப்பாக அமைந்துள்ளன. இவைகள் வெற்றிமுரசு, சங்கே முழங்கு, நலம்காப்போம், நேர்காணல் என்று பல வடிவங்களில் ஒலிபரப்பப்படுகின்றன. அத்துடன் உறவுப்பாலம், வந்ததும் தந்ததும், இதயங்களுக் காக இசைத்தேன், உலகச் செய்திகள், உண்மையின் எண்ண ங்கள் போன்றவை நிலையத் தயாரிப்பாக தொகுக்கப் படு கின்றன. இவற்றுள் உலகச் செய்திகள் உலக நடப்புகளை சிறப்பாக இலங்கை, இந்திய நிகழ்வுகளை உடனுக்கு உடன் தருபவையாகவும் உண்மையின் எண்ணங்கள் சமகால நிகழ்வுகள் பற்றிய காத்திரமான விமர்சனமாகவும் அமைகிறது. காய்தல், உவத்தல் இன்றி நேர்மையாக அமைகின்றன. உண்மை சுடும் என்பார்கள். உண்மையைப் பெயராகக் கொண்ட தமிழ்ப்பணியில் ஒலிக்கும் உண்மையின் எண்ணங்கள் பலரைச் சுட்டிருக்கிறது. அதனால் உண்மையின் குரலை நசித்துவிட உண்மையை விரும்பாதவர்கள் முயன்றே வருகிறார்கள். எத்தடைவரினும் உண்மை வாழும், வாழ வேண்டும் என்பதே உண்மையைத் தேடிநிற்கும் உள்ளங் களின் அவாவாகும்.உண்மையின் எண்ணங்கள் பொறுப் பாளரின் ஆழ்ந்த அவதானிப்பையும், கரிசனையையும், புலமைத் திறனையும் வெளிப்படுத்துவதோடு வெரித்தாஸ் தமிழ்ப் பணியின் செல்நெறியையும் கோடிட்டு நிற்கிறது எனலாம்.

1983ம் ஆண்டு இலங்கை யில் இடம் பெற்ற தமிழ் மக்களுக் கெதிரான வன்முறையைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அதிக அக்கறையோடு வெரித்தாஸ் தமிழ்ப் பணி செயல்பட்டு வந்துள்ளது. அதிலும்


அருள்பணி
ஜெகத் கஸ்பார்

தற்போதைய பொறுப்பாளர் அருள் தந்தை ஜெகத் கஸ்பார் அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி ஆழ்ந்த அறிவும் புரிதலும் உடையவர். அவரது விமர்சன உரைகள் உண்மைகளை மிகத் தெளி வாக உலகின் பார்வைக்கு தருவதோடு ஒடுக்கப்படும் மக்களுக்கு ஆறுதலும், உறுதியும், நம்பிக்கையும் தருவதாகவும் அமைந்துள்ளன. ஈழத்தமிழரது போராட்ட வரலாற்றில் வெரித் தாஸ் தமிழ்ப்பணியின் பங்கு என்றும் நன்றியுடன் நினைவு கூறப்படும் என்பதில் ஐயமில்லை.

இன்னலுறும் ஈழத்தமிழரின் துயர் துடைக்க ஒலி பரப்புப்பணிக்கு அப்பாலும் பல ஆக்கபூர்வமான செயற் பாடுகளை தமிழ்ப் பணிபுரிந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் உறவுப்பாலம் என்னும் நிகழ்ச்சியினூடாக பிரிந்துபோன தமிழ் மக்களை இணைக்கின்ற அன்புப் பணியையும், ஈழத்தமிழ் மக்களுக்காக நெஞ்சுருக நடாத்தும் பிரார்த்தனையையும் யாரும் மறந்துவிட முடியாது.

தரம் வாய்ந்த தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி தமிழர் தம் வாழ்வுக்காகக் குரல் எழுப்பி, அல்லலுறும் மக்களுக்கு ஆதரவு காட்டி, ஆக்கமுறச் செயற்படும் வெரித்தாஸ் தமிழ்ப்பணி இன்று வெள்ளி விழாக் கண்டுள்ளது. அதனை வாழ்க! வளர்க! என்று வாழ்த்துவோம்.

✳ மலர்வேந்தன்

## தொண்டன் சிறுகதைப் போட்டி முடிவுகள்


சஞ்சீவி சிவகுமார்
கல்முனை

கல்முனை மறைக்கோட்ட எழுத்தாளர்களுக்காக தொண்டன் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு ரூபா.1000/பெறுகிறார்.

போட்டிக்கு வந்த ஏனைய கதைகள் நடுவர்களின் தீர்ப்பின்படி பரிசுக்கு ஏற்றவையல்ல என நிராகரிக்கப்பட்டதால் 2ம், 3ம் பரிசுகள் வழங்கப்படவில்லை. கல்முனை மறைக் கோட்டத்தில் எழுத்தாற்றல் உள்ளவர்கள் பலரிருந்தும் மிகக் குறைவான சிறுகதைகளே (பத்துச் சிறுகதைகள்) போட்டிக்கு வந்திருந்தன என்பதை வருத்தத்துடன் தெரிவிக் கின்றோம். போட்டியில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

*ஆசிரியர்*
*தொண்டன்*

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## இலக்கியங்களுக்கூடாக சமயம்

இலக்கியங்கள் 'காலத்தின் கண்ணாடிகள்' என்று அழைக்கப்படுகின்றன. ஆம்! உண்மையிலேயே ஒவ்வொரு காலகட்டங்களின் வரலாறுகளை நாம் அறிய வேண்டுமாயின் வரலாறு மற்றும் சரித்திர நூல்களை மட்டும் புரட்டிக்கொண்டிருக்க வேண்டியது இல்லை; மாறாக அக்காலங்களுக்குரிய இலக்கியங்களை சற்றுப்புரட்டிப்பார்த்தால், குறிப்பிட்ட கால வாழ்க்கை முறைகள், சமய பண்பாட்டுக் கோலங்கள், அரசியல் பின்னணிகள் போன்றன தெள்ளெனப் புரியும்.

தமிழ் இலக்கிய வரலாற்றினை அதன் சமூகப் பின்னணியின் அடிப்படையில், சங்க காலம், சங்க மருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலம், 20ம் நூற்றாண்டுகளுக்குப் பின்னுள்ள தற்காலம் என்று காலகட்டங்களாகப் பிரித்து உள்ளனர்.

ஒவ்வொரு காலப்பகுதியிலும் படைக்கப் பட்ட இலக்கியங்கள் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சமயங்களின் தாக்கத்திற்குட்பட்டிருந் தமை கண்கூடு. சங்கமருவிய காலம் அறநூற் காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. அக்காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் பன்னிரண்டு நூல்கள் அறத்தைப்பற்றிப் போதித்தன. எனினும் அவையும் சமயம் சார்ந்தவையாகவே காணப்பட்டன. இன்னாநாற்பது, இனியவை நாற்பது, ஆசாரக்கோவை என்பன வைதீக சமயக்கருத்துக்களையும், நாலடியார், திருக்குறள், திரிகடுகம், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, சிலப்பதிகாரம் போன்றவை சமணக் கருத்துக்களையும் வலியுறுத்தி நிற்க, மணிமேகலையானது பௌத்தமதம் சார்பாகக் காணப்பட்டது.

தொடர்ந்து வந்த பல்லவர்கால இலக்கியங்களை 'பக்தி நெறிக்கால இலக்கியங்கள்' என்பர். இக்காலத்தில் அப்பர் சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாறுகின்றார். சமண பௌத்த மதங்களை தழுவிநின்ற மன்னர்களின் உண்மையான ஈடேற்றம் சிவனைச் சரணடைவதன் மூலம்தான் உண்டு என அப்பரும், சுந்தரரும் கூறினார். இதற்கு உதாரணமாக இராவணன் சிவனிடம் சரணடைந்ததால்தான் ஈடேற்றப்பெற்றான் என்று இருவரும் தங்கள் பதிகங்களில் பாடியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுவர்.

சோழர்காலம், காவியகாலம் என அழைக்கப்பட்டது. இக்காலக்காப்பியங்களிலும் சமயசார்பான கருத்துக்களே காணப்பட்டன. ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து கிறிஸ்தவம் கீழை நாடுகளில் பரவத் தொடங்கியது. இதற்கு தமிழகமும், இலங்கையும் விதிவிலக்கல்ல. இக்காலகட்டத்தில் எழுத்து உலகில் மாபெரும் புரட்சிகள் உண்டாயின. குறிப்பாக அச்சு இயந்திரங்கள் தமிழ் நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன்மூலம் கிறிஸ்தவ இலக்கியங்கள் தமிழில் படைக்கப்பட்டன. 'வீரமாமுனிவர்' போன்ற தமிழர் அல்லாத கத்தோலிக்கப்பாதிரிமார் தமிழுக்குச் செய்த தொண்டு மிகவும் பெரிது. இது வண. பிதா தனிநாயகம் அடிகளார் வரை நீண்டு இன்றும் பட்டியல் தொடர்கின்றது. இலக்கியங்கள் அவ்வக் கால சமயங்களைச் சார்ந்து இருந்தாலும் கத்தோலிக்க திருச்சபையினரின் இலக்கியப்பணி, சமயப்பணி, சமூகப்பணி என்பன திருச்சபை என்ற வட்டத்தைத் தாண்டி உலகெங்குமுள்ள சகலரையும் இன, மத, மொழி, சாதி, நிற பேதமின்றி அரவணைத்து நிற்கின்றது. பணி செய்கின்றது. இச்சேவையின் காரணமாக சிலர் கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் கத்தோலிக்கத் திருச்சபை கட்டாய மதமாற்றத்தை நடைமுறைப் படுத்துவதில்லை.

எனினும் சில வெளியீடுகள் குருக்களை, ஆயர்களை, பரிசுத்தப்பாபரசரை பொது நிலையினரை மிகக்கேவலமாக விமர்சிக்கின்றன. இது மிகவும் வேதனைக்குரிய விடயம். ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், இலக்கியத்திற்கு ஊடாக சமயப் பணிபுரியும் சுதந்திரம் உண்டு. ஆனால் அவ்வாறான எழுத்துக்கள் நாகரீகமானவையாக இருக்கக்கூடியவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

# தியானம்

பெனி யே.ச

உலகம் தொலைகிறது - இந்த
உருவம் தொலைகிறது - எங்கும்
அழகு மிளிர்கிறது - எல்லாம்
அருவ மாகிறது

விண்ணும் தொலைகிறது - இந்த
விடியல் தொலைகிறது - பறவைகள்
பண்ணும் தொலைகிறது - இந்தப்
பாரும் தொலைகிறது

இரவும் தொலைகிறது - எல்லா
பகலும் தொலைகிறது
உறவும் தொலைகிறது - சில
உண்மைகள் புரிகிறது

காலம் தொலைகிறது - என்
கற்பனைகள் தொலைகிறது - நீல
வானம் தொலைகிறது - என்
வயசும் தொலைகிறது

வார்த்தை தொலைகிறது - என்
வாலிபம் தொலைகிறது
பார்வை தொலைகிறது - பறவைகள்
பாடல் தொலைகிறது

நினைவு தொலைகிறது - இந்த
நேரம் தொலைகிறது
கனவு தொலைகிறது - கண்ட
காட்சி தொலைகிறது



நான் (ஈகோ) தொலைகிறது - இந்த
நாள் தொலைகிறது - எண்
சாண் உடல் தொலைகிறது - ஒரு
சத்தியம் விரிகிறது

இருத்தல் புரிகிறது - அதில்
இறையருள் வழிகிறது
பருப்பொருள் கடந்த - மனம்
பக்தியில் நனைகிறது - அதில்
பரமாத்மா காண்கிறது.

## இலக்கிய மஞ்சரி

# இலக்கியங்களுக்கூடாக சமயம்

ஆழியோன்

இலக்கியங்கள் 'காலத்தின் கண்ணாடிகள்' என்று அழைக்கப்படுகின்றன. ஆம்! உண்மையிலேயே ஒவ்வொரு காலகட்டங்களின் வரலாறுகளை நாம் அறிய வேண்டுமாயின் வரலாறு மற்றும் சரித்திர நூல்களை மட்டும் புரட்டிக்கொண்டிருக்க வேண்டியது இல்லை; மாறாக அக்காலங்களுக்குரிய இலக்கியங்களை சற்றுப்புரட்டிப்பார்த்தால், குறிப்பிட்ட கால வாழ்க்கை முறைகள், சமய பண்பாட்டுக் கோலங்கள், அரசியல் பின்னணிகள் போன்றன தெள்ளெனப் புரியும்.

தமிழ் இலக்கிய வரலாற்றினை அதன் சமூகப் பின்னணியின் அடிப்படையில், சங்க காலம், சங்க மருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலம், 20ம் நூற்றாண்டுகளுக்குப் பின்னுள்ள தற்காலம் என்று காலகட்டங்களாகப் பிரித்து உள்ளனர்.

ஒவ்வொரு காலப்பகுதியிலும் படைக்கப் பட்ட இலக்கியங்கள் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சமயங்களின் தாக்கத்திற்குட்பட்டிருந் தமை கண்கூடு. சங்கமருவிய காலம் அறநூற் காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. அக்காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் பன்னிரண்டு நூல்கள் அறத்தைப்பற்றிப் போதித்தன. எனினும் அவையும் சமயம் சார்ந்தவையாகவே காணப்பட்டன. இன்னாநாற்பது, இனியவை நாற்பது, ஆசாரக்கோவை என்பன வைதீக சமயக்கருத்துக்களையும், நாலடியார், திருக்குறள், திரிகடுகம், பழமொழி நானூறு, சிறு பஞ்சமூலம், ஏலாதி, சிலப்பதிகாரம் போன்றவை சமணக் கருத்துக்களையும் வலியுறுத்தி நிற்க, மணிமேகலையானது பௌத்தமதம் சார்பாகக் காணப்பட்டது.

தொடர்ந்து வந்த பல்லவர்கால இலக்கியங்களை 'பக்தி நெறிக்கால இலக்கியங்கள்' என்பர். இக்காலத்தில் அப்பர் சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாறுகின்றார். சமண பௌத்த மதங்களை தழுவிநின்ற மன்னர்களின் உண்மையான ஈடேற்றம் சிவனைச் சரணடைவதன் மூலம்தான் உண்டு என அப்பரும், சுந்தரரும் கூறினார். இதற்கு உதாரணமாக இராவணன் சிவனிடம் சரணடைந்ததால்தான் ஈடேற்றப்பெற்றான் என்று இருவரும் தங்கள் பதிகங்களில் பாடியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுவர்.

சோழர்காலம், காவியகாலம் என அழைக்கப் பட்டது. இக்காலக்காப்பியங்களிலும் சமயசார்பான கருத்துக்களே காணப்பட்டன. ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து கிறிஸ்தவம் கீழை நாடுகளில் பரவத் தொடங்கியது. இதற்கு தமிழகமும், இலங்கையும் விதிவிலக்கல்ல. இக்காலகட்டத்தில் எழுத்து உலகில் மாபெரும் புரட்சிகள் உண்டாயின. குறிப்பாக அச்சு இயந்திரங்கள் தமிழ் நாட்டில் அறிமுகம் செய்யப் பட்டது. இதன்மூலம் கிறிஸ்தவ இலக்கியங்கள் தமிழில் படைக்கப்பட்டன. 'வீரமாமுனிவர்' போன்ற தமிழர் அல்லாத கத்தோலிக்கப்பாதிரிமார் தமிழுக்குச் செய்த தொண்டு மிகவும் பெரிது. இது வண. பிதா தனிநாயகம் அடிகளார் வரை நீண்டு இன்றும் பட்டியல் தொடர்கின்றது. இலக்கியங்கள் அவ்வக் கால சமயங்களைச் சார்ந்து இருந்தாலும் கத்தோலிக்க திருச்சபையினரின் இலக்கியப்பணி, சமயப்பணி, சமூகப்பணி என்பன திருச்சபை என்ற வட்டத்தைத் தாண்டி உலகெங்குமுள்ள சகலரையும் இன, மத, மொழி, சாதி, நிற பேதமின்றி அரவணைத்து நிற்கின்றது. பணி செய்கின்றது. இச்சேவையின் காரணமாக சிலர் கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் கத்தோலிக்கத் திருச்சபை கட்டாய மதமாற்றத்தை நடைமுறைப் படுத்துவதில்லை.

எனினும் சில வெளியீடுகள் குருக்களை, ஆயர்களை, பரிசுத்தப்பாபரசரை பொது நிலையினரை மிகக்கேவலமாக விமர்சிக்கின்றன. இது மிகவும் வேதனைக்குரிய விடயம். ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், இலக்கியத்திற்கு ஊடாக சமயப் பணிபுரியும் சுதந்திரம் உண்டு. ஆனால் அவ்வாறான எழுத்துக்கள் நாகரீகமானவையா இருக்கக்கூடியவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

# தியானம்

பெனி யே.ச

உலகம் தொலைகிறது - இந்த
உருவம் தொலைகிறது - எங்கும்
அழகு மிளிர்கிறது - எல்லாம்
அருவ மாகிறது

விண்ணும் தொலைகிறது - இந்த
விடியல் தொலைகிறது - பறவைகள்
பண்ணும் தொலைகிறது - இந்தப்
பாரும் தொலைகிறது

இரவும் தொலைகிறது - எல்லா
பகலும் தொலைகிறது
உறவும் தொலைகிறது - சில
உண்மைகள் புரிகிறது

காலம் தொலைகிறது - என்
கற்பனைகள் தொலைகிறது - நீல
வானம் தொலைகிறது - என்
வயசும் தொலைகிறது

வார்த்தை தொலைகிறது - என்
வாலிபம் தொலைகிறது
பார்வை தொலைகிறது - பறவைகள்
பாடல் தொலைகிறது

நினைவு தொலைகிறது - இந்த
நேரம் தொலைகிறது
கனவு தொலைகிறது - கண்ட
காட்சி தொலைகிறது



நான் (ஈகோ) தொலைகிறது - இந்த
நாள் தொலைகிறது - எண்
சாண் உடல் தொலைகிறது - ஒரு
சத்தியம் விரிகிறது

இருத்தல் புரிகிறது - அதில்
இறையருள் வழிகிறது
பருப்பொருள் கடந்த - மனம்
பக்தியில் நனைகிறது - அதில்
பரமாத்மா காண்கிறது.

# கல்முனைப் பிராந்தியத்தில் வாழும் இனக் குழுக்களுக்கிடையே காணப்படும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சமூக உறவுகள், பிரச்சினைகள் போன்றவை

அருட் திரு எஸ் ஏ. ஐ மத்தியு

கல்முனைப்பிராந்தியம் 1963ம் ஆண்டுக்கு முன்னர் மட்டக்களப்போடு இணைந்திருந்தது. அது மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதியாகும். மட்டக் களப்பு மாவட்டத்தின் பொதுவான கலை, கலாசார விழுமிய ங்கள், வாழ்கைமுறைகள் இப்பிரதேச முழுவதற்கும் பொது வானதாகும்.

கல்முனை மறைக்கோட்டத்தில் குருக்கள் மடம் தொட்டு பொத்துவில் - பாணம உள்ளடக்கிய பிரதேசத்தில் பெரியகல்லாறு வரையிலும் தமிழ் கிராமங்களும் மருதமுனை தொட்டு பாணம வரையிலும் தமிழ், முஸ்லிம் கிராமங்கள் அருகருகே அமைந்தும் காணப்படுகின்றன. தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவானதும் சிறப்பா னதுமான அம் சங்கள் உண்டு. இப்பிரதேசத்தில் ஆங்காங்கே போர்த்துக் கீச வழித்தோன்றல்களான பறங்கியரும், இலங்கையின் ஆதிக் குடிகளான வேடர்களும் வாழ்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தின் தென்கிழக்குப் பிரதேசம் இலங்கையின் வரலாற்றின் சிறப்பிடம் பெற்ற தொன்றாகும். இலங்கையின் தென் இராச்சியமாகிய உருகுணையின் ஒரு இராச்சிய பிரிவாக இப்பிரதேசம் விளங்கியது. சதாதிஸ்ஸ மன்னனின் ஆட்சி பீடம் இங்கு அமைக்கப்பட்டிருந்ததை யும் தீகபாபீ முதலான முக்கிய பௌத்த திருத்தலங்கள் அமைந்திருந்ததும் இதற்குச்சான்றுகளாகும். கோமாரி போன்ற இடங்களில் சதாதிஸ்ஸ மன்னன் காலத்திய தங்க நாண யங்கள் ஆங்காங்கே மக்களால் கண்டெடுக்கப்பட்டுள் ளன.

இப்பிரதேசம் குறிஞ்சியும், நெய்தலும், மருதமும், முல்லையும் நெருங்கியிருந்த ஒரு பிரதேசமாகும். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் யானை பாதைகளால் உண்டான ராஜா பாட்டைக்கு வெளியே அடர்த்தியான காடுகள் இருந்தன. தேன் சொரிந்தது. விலங்கினங்கள் ஏராளம் ஒரு கதை சொல்லுவார்கள் கல்முனை 2ம் குறிச்சியில் அமைந்திருந்த கண்ணகி கோயில் பெரிய தூண்களுடன் சீமெந்து பூச்சியில் லாது (வழுவழுப்பில்லாது) நிர்மாணிக்கப் பட்டதாம். ஏனெனில் யானைகள் வந்து தம் தினவுகளைப் போக்குவதற்கு இவ் ஆலயத் தூண்களை பயன்படுத்தினவாம். அதற்காகவே பெரியதூண்களாக கட்டப்பட்டிருந்தன.

நீர் வளம் நிறைந்த நன்னாடு இது. கிட்டங்கி ஆறும், கல்லோயா நதியின் நீர்த்தேக்கத்தின் வான்வெளியும் கிளையும் வளமூட்டுகின்றன. சேனநாயக்க சமூத்திரம் என வர்ணிக்கப்படும் கல்லோயா நீர்த்தேக்கம் இப்பிரதேசங்களின் வளங்களுக்கு மேலும் வளமூட்டும். இந்த நீர்த்தேக்கம் இலங்கையின் இரண்டாவது பெரிய நீத்தேக்கமாகும். 7,30,000 ஏக்கர் அடி நீர்பரப்பை கொண்டது இந்த நீர்த் தேக்கம். இதனால் பார்க்குமிடம் எங்கும் பசுமையாக காட்சி யளிக்கும் வயல் நிலங்கள். அவற்றின் இடையிடையே தென்னஞ் சோலைகள். மறுபக்கத்தில் கடல்படு திரவியங் களை கரைக்கு அள்ளிக்கொணரும் பல இலட்ச மோட்டார் படகுகள், சிறுபடகுகள். முன்பொரு சமயம் தத்தம் வள விலிருந்த மரங்களைத் தறித்து வீடு கட்டினார்கள். அவை முதிரையும், வேம்பும், பாலையுமாகும்.

இத்தகைய செல்வச் செழிப்புப் பின்னனியிலேயே வளம் பெற்ற கலை இலக்கியப் பண்பாட்டு தோற்றங்களை ஆராய்ந்து பார்க்கலாம். பெரியதொரு ஆய்வுக்கு இச்சிறு கட்டுரை இடமளிக்காது என்பதனால் ஒரிரு விடயங்களை தொட்டுக்காட்டலாம்.

நாட்டுக் கூத்துக்கு பேர்போன இடங்கள் சொறிக்கல் முனை, கல்லாறு, மண்டூர், திருக்கோயில் போன்ற இடங்களா கும். காரைதீவில் பேர்விளங்கும் பல வசந்தன் கோலாட்டக் காரர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் சொறிக்கல்முனையிலிருந்து அண்ணாவிமார் பிற இடங்களுக்கு நாட்டுக்கூத்துப் பயிற்சியளிப்பதற்காகவும் நாடக மேடை ஏற்றுவதற்காகவும் சென்றனர். வடமோடி, தென்மோடி, நாட்டுக்கூத்துக்கள் இப்பிர தேசத்தின் சிறப்பான கலைகளாகும். இவற்றைத் தேடிப்பிடித்து பிரபல்யப்படுத்தி ஆவனப்படுத்துவதில் யாழ் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். K.J செல்வராஜகோபால் or ஈழத்து பூராடணார் களுதா வளையிலிருந்து அச்சகம் நடாத்தி பிரதேசத்தின் சொற்கள், கதைகள், நாடோடிப்பாடல்கள் இன்னொரன விடயங்களை ஆவணப்படுத்தியுள்ளார்.

இப்பிரதேசத்தில் சிறப்பான வரலாற்றுச் சுவடு பதித்த இலக்கியக் கர்த்தாக்களைப் நாம் பார்க்கின்றோம். அவர்களில் முதன்மையான வராக காரைத்தீவு பிறந்த சுவாமி விபுலானந்த அடிகள், மண்டூர் தந்த பெரியதம்பிப்பிள்ளை ஆகிய பேரறிஞர்களை குறிப்பிடுவது அவசியம். இவர்களது வரலாறுகளை. ஏனைய விடயங்களை மட்டக்களப்பு தமிழகம் தந்த பண்டிதர் வித்துவான் வி.சி. கந்தையா

B.O.L. அவர்கள் தமது ஆய்வு நூலில் திறம்பட கூறியுள்ளார். இந்த ஆய்வு நூல் 1964 ஆண்டோடு முற்றுப் பெறுகிறது. அதற்குப் பின்னுள்ள வரலாறுகளும் ஆவணப் படுத்த வேண்டியதன் அவசியத்தை அறிஞர்கள் உணர்ந் துள்ளார்கள்.

இப்பிரதேசத்தின் சாதிப் பாகுபாடுகள் பண்டைய காலம் தொட்டு இறுக்கமாக இருந்து வந்துள்ளன. அவர வர் சாதிகளுக்கென கோவில்கள் அமைக்கப்பட்டன. இன்று அவை அருகிவருகின்றன.

இப்பிரதேசத்தின் மிகச்சிறப்பான இந்துக் கோவில் களின் உற்சவத்தை குறிக்கும் கோயில்களான கொக்கட்டிச் சோலை தான்தோன்றி ஸ்வரர் கோவில், காரைதீவு கண்ண கியம்மன்கோவில், பாண்டிருப்பு திரௌபதி அம்மன்கோவில், சங்கமன் கண்டி சின்னக்கதிர்காமம் ஆகியன பிரசித்திப் பெற்ற வைகள். இப்பகுதி மக்கள் ஆண்டுதோறும் கதிர்காமப் பாதயாத்திரை செல்வார்கள்


மக்கள் பில்லி, சூனியம், மாந்திரீகம், ஜாதகம், சாஸ்திரம், ஆகியவற்றிலே நம்பிக்கை கொண்டவர்கள் குழந்தை பிறந்தால் ஜாதகம் பெண்கள் பூப்படைந்தால் ஜாதகம், மணப்பெண் பொருத்தங்கள் ஆகியன பிரபல்யம் அடைந்து காணப்படுகின்றன.

வ.அ இராசரெத்தினம் தமது கொட்டியாரக் கதை களிலும் இதுப்பற்றி கூறுகிறார். பாண்டிருப்பு திரௌபதி அம்மன்கோவில் மிகவும் பிரசித்திப்பெற்றது. ஆண்டுதோறும் நடைபெறும் இவ்வைபவத்தில் தீ மிதிப்பு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஊர்கள் தோறும் கண்ணகிஅம்மனுக்கு கோவில்கள் உண்டு. கண்ணகி வழக்குரை கதைகளும் பிரசித்தி பெற்றவை. கண்டி பெரஹராவிலும் கண்ணகி விழாவே இடம் பெற்றது. அந்தளவிற்கு சிலப்பதிகாரக் கண்ணகி இப்பகுதியில் சிறப்புப்பெறுகின்றாள். ஒருவேளை பாண்டிய நாட்டிலிருந்து இங்குள்ள தமிழ்க் குடியேற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. எனினும் கண்டி அரசர்கள் காலத்திலேயே இங்கு மேலதிக தமிழ் குடியேற்றங்கள் அமைத்ததாக வரலாற்றுச் செய்திகள் உண்டு. சீர்பாதகுலம் எனும் வரலாறு தழுவிய நூலை எழுதிய ஆசிரியர் துறைநீலா வணைச் சூழ்ந்த பிரதேச மக்கள் தென்னிந்தியாவிலிருந்து திருகோணமலை துறைமுகத்தை யடைந்து அங்கிருந்து மட்டக்களப்பு முகத்துவாரம் வழியாக கப்பல் செலுத்தி துறைநீலாவணைப் பிரதேசங்களுக்கு வந்ததாக (ஆசிரியர் செல்வநாயகம்) குறிப்பிடுகின்றார்.

---

# யாருக்குப் பெருமை

(உருவகக் கதை)



மணித்தியாலக் கம்பிக்கு ஒரு பெருமிதம் நேரத்தைச் சொல்லுகிற போது நான் தான் முதலில் வருகிறேன் பார்த் தாயா! என்ற தோரணையில் கம்பீரத் துடன் நிமிடக்கம்பியைநோக்குகிறது மணித்தியாலக்கம்பி.

தான் இரண்டாவது இடத்தில் இருந்தாலும் செக்கன் கம்பியையிட்டு எவரும் அலட்டிக் கொள்ளாததை நினைத் துப் பார்க்கும் போது நிமிடக் கம்பிக்கு ஓரளவு திருப்தி தான் இருந்தாலும், பெரிதா கக் கதைக்கப்படும் மணித்தியாலக் கம்பியை ஒரு கட்டம் நகர்த்த, தான் ஒருமுறை சுற்றி ஓடி வரவேண்டியிருக் கிறதே. தனது உழைப்பிற்கு மதிப்பு இல்லையே என்று நினைக்கும் போது உள்ளூரக் கவலை.

டிக்.டிக். என்று மூச்சு வாங்க ஓயாது உழைக்கும் தன்னைப் பற்றி எவருமே நினைத்துப் பார்ப்பதில்லை என்பதை எண்ணும் போது செக்கன் கம்பிக்கு பெரு வேதனை.

பெரியவரே பாருங்கள்! நான் ஓடி ஓடி உழைக்கிறேன் ஆனாலும் நன்றி கெட்ட மனித சமூகம் என்னைப் பற்றி நினைத்துக் கூடப்பார்ப்பதில்லை. நான் ஐந்துமுறை இந்த வட்டத்தைச் சுற்றி சுறுசுறுப்பாக ஓடித்தான் உங்களை ஒரு கட்டம் நகர்த்துகிறேன். காலம் பொன்னானது என்று பழமொழி படைக் கும் இந்த மனிதர்கள் ஏன் என்னைப் பொருட்படுத்துவதில்லை. என்னுடைய ஒரு அசைவுக்குள்ளே எத்தனையோ பெரிய விடயங்கள் நடந்து விடுகின்றன. என்று கூறி வேதனையின் விளிம்புக் குச் சென்று விடுகிறது செக்கன் கம்பி.

அப்படி யொன்றும் வேதனைப் படாதே, என்னுடைய உழைப்பில் தான் அந்த சோம்பேறிக்கு முதலிடம் கிடைக் கிறது. என்னுடைய உழைப்புக்கும் மதிப்பு கிடையாது. இவை நிமிடக் கம்பி கூறும் ஆறுதல் வார்த்தைகள்.

இவவாறு நிமிட, செக்கன், கம்பிகள் கருத்துப்பரிமாறிக் கொள் கிறார்கள்.

இந்த உரையாடலைக் கேட் டுக் கொண்டிருந்த மணித்தியாலக் கம்பி பெருமிதப்பட்டாலும் வீட்டுத் தலை வன் பணம் கொடுத்து தங்களை வேலைக் கமர்த்தியிருப்பதை நினைத்துப் பார்த்து முகத்தைச் சுருக்கிக் கொள்கிறது.

**D. பென்ஜமின்**
கல்முனை.

**கண்ணகி வழிபாடு**

கண்ணகி வழிபாடு பழங்காலத்து சோழ நாட்டு கண்ணகி பாண்டிய நாட்டில் வீரகற்பரசியாகி சேரநாட்டில் பத்தினித் தெய்வமாகி, ஈழநாட்டுச் சிங்களவரிடையே 'பத்தினி தெய்யே' வாகி மட்டக்களப்பிலும் கல்முனையிலும் கண்ணகை அம்மனாகின்றாள். இதனால் கவரப்பட்டுத்தானோ என்னவோ விபுலாந்த அடிகள் சிலப்பதிகாரத்தை ஆய்ந்து யாழ் நூலை உலகிற்களித்தார். பத்தினித் தெய்வ வழிபாட்டை 'இராஜாவளி' என்ற நூலில் இருந்து அறியலாம்.

கடல்சூழ் இலங்கை கயவாகு மன்னன் சோழ நாட்டில் பல வெற்றிகளை ஈட்டி மீண்டு வருகையில் கண்ணகி தேவியின் காற் சிலம்பு ஒன்றை கொண்டு வந்தான் எனவும் பின் ஈழத்தில் பல இடங்களிலும் அத்தெய்வத்திற்கு கோயில் எடுத்தான் என்றும் நாம் அறிகின்றோம். கல்முனைப் பிராந்தியத்தில் காரைதீவில் அமைந்திருக்கும் கண்ணகி அம்மன் ஆலயமும் சான்று பகிர்கின்றது. எசாலா அல்லது ஆடிமாத பூரணையில் பத்தினித் தெய்வத்திற்காக கண்டிப் பெரகரா நடை பெறுகின்றது. இதனையே நாம் பிரகாரம் என்கின்றோம். பின்னர் சீனா நாட்டில் இருந்து வந்திருந்த சில பௌத்த பிக்குகளின் விரும்பப்படி பெரகரா காலங்களில் புத்தபிரானின் புனித தந்தப் பேழையும் கண்டிப் பெரகராவில் இடம் பெற்றது. மட்டக்களப்பு எங்கும் கண்ணகி அம்மன் கோயில் கொண்டுள்ளாள். துறைநீலாவணை, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, அக்கரைப்பற்று, ஆரைப்பற்றை தாண்டவன்வெளி, தம்பிலுவில், காரைநகர், விரமுனை, கல்முனை, கல்லாறு, பெரிய கல்லாறு, செட்டிபாளயம், புதுக்குடியிருப்பு, கொக்கட்டிச்சோலை முதலைக்குடா, வந்தாறுமூலை, சித்தாண்டி, மண்முனை ஆகிய இடங்களில் கண்ணகி தெய்வத்திற்கு கோயில்கள் உண்டு. யாழ்ப்பாணத்திலும் பல கோயில்கள் உண்டு. மட்டக்களப்பில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஒரு கண்ணகி சிலை பிரித்தானிய நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கல்முனைப் பிராந்தியத்தில் கண்ணகி என்ற சொல் கண்ணகை என வழங்கப்படுகின்றது. கண்ணகியோடு தொடர்புடைய ஒரு விழாவாகவே குளுத்தி என்று நடைபெறுகின்றது. கண்ணகி அம்மன் குளுத்தியோடு தொடர்புடைய மற்றுமோர் இலக்கிய அம்சம் அம்மன் கொளுவாகும். மரங்களின் கொம்புகளைக் கொண்டு ஆடும் கொம்பு விளையாட்டு கல்முனைப்பிராந்தியத்திலுள்ள ஒரு விளையாட்டு. கொம்பு விளையாட்டு தொடங்கியதும் ஊர்முழுவதும் இரண்டு கட்சிகளாகி விடுவதுமுண்டு. ஒன்று கண்ணகிக்கும் மற்றையது கோவலனுக்கும் முறையே வடசேரி, தென்சேரி என பெயர் பெறுகின்றது.

வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
மணமுள்ள காழியின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே யெங்கே
செம்பரப் பற்றைக்கு கீழே கீழே

கொம்பு விளையாட்டு விளையாடப்பட்டதன் சிறப்பாகச் 'கொம்புச் சந்தி' என ஒரு பெயர் பெற்றது.

**குரவைக் கூத்து**

மிக முற்பட்ட காலத்திலே இப் பிரதேசத்தில் குரவைக் கூத்து இருந்து வந்துள்ளது. குரவை என்பது குலவை எனவும் மருவி ஒலிக்கும். இஸ்லாமியப் பெண்களும் குரவை செய்வார்கள். சிலப்பதிகார ஆய்ச்சியற் குரவையும், குன்றக்குரவையும் இப்பிரதேசங்களில் செல்வாக்குப்பெற்றன.

**வசந்தன் பாட்டு**

'வசந்தன்' அல்லது வசந்தன் கூத்து இங்கு பிரசித்திமாக உள்ள ஒன்றாகும். காரைதீவிலும் தம்பிலுவில்லிலும் அவ் வசந்தன் பாடல்கள் பிரசித்தி பெற்றிருந்தன. நரேந்திர சிங்கன்பள்ளு, இராசசிங்கன் பள்ளு என்பவற்றை கண்டி தாசன் பள்ளு என குறிப்பிடுவதுமுண்டு.

அம்மன் பள்ளுவில் மாதவியின் நடன அரங்கேற்றம் பற்றியும் குறிப்பிப்பிடப்படுகின்றது.

**இந்நாட்டுப் புலவர்கள்**

1856இல் பிறந்த வித்துவான் ச.பூபாலப் பிள்ளை அவர்களைக் குறிப்பிட முடியாமல் இருக்க முடியாது. அரச பகிரங்கசேவை முதல்வர் பதவி வகித்தவர். பல தமிழ்ச் சங்கங்கங்களை ஆங்காங்கே அமைத்தவர். சுமார் இருபது சமய நூல்களை ஆக்கியவர்.

பெரும் புகழ்பெற்ற வித்துவான் இ. சரவணமுத்து தாண்டவன்வெளியைச் சார்ந்தவர். 1890இல் பிறந்த இவர் ஒரு மாபெரும் இலக்கிய மேதை. மதுரையிலும் இவர் தம் சொற்பொழிவுகளினால் பெயர் பெற்றவர். ஏராளமான கவி புனைந்துள்ளார்.

ஆரைப்பற்றைக் கிராமத்தைச் சேர்ந்தவர் குமாரசாமி ஐயர். இவர் ஒரு பெரும் தமிழ்ப் புலவர். விபுலானந்த அடிகளுடன் தமிழுறவு இவருக்கு ஏற்பட்டிருந்தது இவர் 1879ஆம் ஆண்டு பிறந்தவர். அவர் வைத்தியத்திலும் புலமை பெற்றிருந்தார்.

இந்த புலவர் வரிசையிலே மொட்டைச் சோளாப் போடியார் என்பவர் தம்பிலுவில் கிராம சம்பவத்தை பின் புலனாகக் கொண்டு 'தம்பிலுவில்பற்று' என்ற நூலை



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இயற்றினார். இவருடைய பேரன் தாண்டவர் வேழான் எனப்படும் ஒரு புலவன். மொட்டைச்சோளாப் போடி 1857ம் ஆண்டளவில் மரணமெய்தினார். தம்பிலுவில்லில் பிரசித்தி பெற்ற மற்றுமொரு புலவர் பண்டிதர் குஞ்சுத்தம்பிப்பிள்ளைப் புலவர் ஆவார். தம்பிலுவில்லில் பல நாடோடிக் கவிதை களை தோற்றுவித்துள்ள குஞ்சத்தம்பிப் புலவர் மதுரை தமிழ்ச் சங்கத்திலும் பரிசுபெற்றவர். திருக்கோயில் சிவசுப் பிரமணியக் கடவுளின் மீது பல பாடல்களைப் பாடியுள்ளார். பெரியகல்லாற்றிலே பெரியதம்பி விதானை கோட்டைக் கல் லாற்றிலே வினாசித்தம்பி விதானை. மண்டூர் வினாசித் தம்பி விதானை, கோணாமலை உபாத்தியாயர், புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளை ஆகியோருடைய தமிழ்ப்பணிகளும் எடுத்தி யம்ப வேண்டியவையாகும். இவர்கள் காலங்களிலே கிராமங்கள் தோறும் புராணவகுப்புக்களை நடாத்தியுள் ளார்கள்.

மண்டூர் என்ற பழம்பதியிலே புலவர் வினாசித்தம்பி தோன்றினார்கள். கல்முனையிலுள்ள பாண்டிருப்பு ஊரிலே துரோபதை அம்மன் தேவாலயத்திலே ஆண்டு தோறும் பாண்டவர் வனவாசம். அரிச்சுனன் தவனிலை. துரோபதை தீக்குளிப்பு நடைபெறும். புலவர் வினாசித்தம்பி இங்கு வந்து பல விவாதங்களை நடாத்தி வெற்றியும் பெற்றுள்ளார். கல்முனைப் பிராந்தியத்திலே விபுலானந்த அடிகளை அடுத்து புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை விளங்குகின்றார். 1890ல் மண்டூரில் பிறந்த அவர் ஒரு தமிழ் இலக்கியச் செல்வர். பகவத் கீதையை வெண்பாவடிவில் பாடி அரச விருது பெற்றவர். அவர் கிறிஸ்தவ மதத்தத்துவங்களை இரண்டு ஆண்டு இந்தியாவில் பயின்றவர் கிறிஸ்த்தவ உலகின் மதிப்பைப் பெற்றவர்.

அவர் யாத்த தனிப்பாடல்கள் 2500க்கும் அதிக மாகும். மருதமுனை கிராமத்திலே உதித்தவர் சின்ன ஆலீம் அப்பர் என்ற புலவராவார். தமிழ் வளர்ந்த கிராமத்திலே அவர் தோன்றினார். அவர் பெரும் செல்வாக்குப் பெற்றவர். தெய்வபக்தி மிக்கவர். இஸ்லாமிய தத்துவ ஞானம் அராபிய மொழி ஞானமும் அவரது கவிதைகளில் காணலாம்.

*– தொடரும்....*



# பொன்விழாக் கண்ட

## ஜே. எஸ். அரசரெத்தினம் அடிகள்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கடந்த 34 ஆண்டுகளாகக் குருத்துவப் பணியாற்றி தமது குருத்துவ வாழ்வில் ஐம்பது ஆண்டுகளை நிறைத்துள்ளார் அருள்தந்தை **ஜே. எஸ். அரசரெத்தினம்** அவர்கள்.

1924ம் ஆண்டு நவம்பர் 16ம் நாள் யாழ்ப்பாணம் நாரேந்தனையில் பிறந்த இவர் வளர்ந்தது பண்டத்தரிப்பில். ஆரம்பக் கல்வியை பண்டத்தரிப்பு ஆரம்பப் பாடசாலையிலும், பின் மாதகல் புனித சூசையப்பர் ஆங்கிலப் பாடசாலை, இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி, புனித பத்திரியார் கல்லூரி போன்றவற்றிலும் கற்றார்.

குருத்துவக் கல்வியை புனித பேணாட் குருமடத்திலும் பின்பு பெங்களூர் புனித பீற்றர் குருத்துவக் கல்லூரியிலும் பெற்றார்.

1951ம் ஆண்டு ஜூன் 29ம் திகதி தமிழ்நாடு தூத்துக்குடியில் குருப்பட்டம் பெற்ற அடிகள் 1968ம் ஆண்டு வரை தூத்துக்குடி மறைமாவட்டத்திலேயே பணி ஆற்றினார். 1968ம் ஆண்டில் இலங்கை வந்து திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இணைந்து பல்வேறு பங்குகளிலும் பணியாற்றினார். தற்போது பங்குப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றாலும் பல்வேறு சமூகப்பணிகளிலும் ஆர்வத்தோடு உழைக்கும் அடிகளார் மட்டக்களப்பில் "சீலோம்" மருத்துவமனையை உருவாக்குவதில் முன்னின்றவர். அத்துடன் முதியோர்களுக்காக "பரிபூரணம்" என்னும் முதியோர் இல்லத்தையும் உருவாக்கி நடத்தி வரும் அடிகளார் முதிய வயதிலும் துடிப்போடு பணியாற்றும் ஓர் இளைஞராக காட்சிதருகிறார். சர்வதேசப் பாடசாலை ஒன்றை உருவாக்கி ஆங்கில அறிவை வளர்க்கவேண்டும் என்ற திட்டத்தையும் வைத்துள்ள அடிகளார் அதனைச் செயலாக்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்தான்.

குருத்துவ வாழ்வில் பொன்விழாக் கண்ட அருள்தந்தை ஜே. எஸ். அரசரெத்தினம் அடிகள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பணிபல ஆற்ற அவருக்கு நிறைந்த ஆரோக்கியமும், அருள்வளமும் கிடைக்கவேண்டுமென வாழ்த்துவோம்.

~மலர் ~

# அரசியல் பக்கம்

## என்ன வழி?

"அக்கினிச் சுவாலை" படை நடவடிக்கையில் ஏற்பட்ட பின்னடைவு, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மீது நடைபெற்ற பாரிய அதிரடித்தாக் குதல், அதற்குமுன் ஐக்கிய தேசியக்கட்சி ஏனைய கட்சிகளோடு இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டமும், அதைக்கலைக்க பொலிசாரும், படையினரும் எடுத்த கடும் நடவடிக்கைகளும் எல்லாம் சேர்ந்து நாட்டு மக்களை மட்டுமல்ல அரசாங்கத்தையும் அதிர்ச்சியுற வைத்துள்ளது.

அரசநிர்வாகம், பாதுகாப்பு, சட்டம் அனைத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ள இந்நிகழ்வுகள் இந் நாட்டின் எதிர்காலம் பற்றிய அச்சத்தையே அனைவருக்கும் ஏற்படுத்தியுள்ளதெனலாம். ஆயினும் இவை எதுபற்றியும் தெளிவான ஒரு முடிவை எடுத்து செயலாக்க முடியாத ஒரு தடுமாற்றமே அரசாங்க மட்டத்தில் காணப்படுகின்றது. பலமில்லாத அரசாங்கத்தால் பாராளுமன்றத்தைக் கூட்டவும் முடியவில்லை; பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை வைக்கவும் முடியவில்லை; அவர்களோடு பிரச்சினையைப் பேசித்தீர்க்கவும் விருப்பமில்லை. இவ்வாறு தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில் நாடு மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவுக்குச் சென்று கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவும் போரினால் ஏற்படும் அழிவுகளும் வடக்கு, கிழக்கை மட்டுமல்ல முழு நாட்டையுமே உலுக்கிக் கொண்டிருக்கிறது. இன்று மக்கள் எதிர்ப்பார்ப்பதெல்லாம் நிம்மதியான வாழ்வையும் நிரந்தரமான சமாதானத்தையும் தான். ஆனால் ஆட்சியிலிருப்பவர்களும் சரி ஆட்சியை எப்படியும் பிடிப்போம் என்று கச்சைகட்டி நிற்பவர்களும் சரி பிரச்சினைகளுக்கு நிரந்தரமான, நீதியான ஒரு தீர்வைக் காண்பதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. நிரந்தரத்தீர்வைக்கான நியாயமான திட்டம் அரசிடமும் இல்லை; எதிர்க்கட்சிகளிடமும் இல்லை. இந்நிலையில் புதிய அரசியல்யாப்பு, சர்வஜன வாக்கெடுப்பு என்று அரசு பேசுகிறது. அப்புதிய யாப்பின் உள்ளடக்கம் என்ன? நாட்டை வருத்தும் பிரச்சினைகளுக்கு அது எவ்வாறான தீர்வைக் கொண்டுள்ளது என்பது சிதம்பர ரகசியமாகவே உள்ளது. உண்மையில் இந்த அரசியல் வித்தைகள் எல்லாம் ஆட்சியையும், அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்ளப் போடுகின்ற திட்டங்களாகவே காணப்படுகின்றன. பதவிக்காக அலையும் அரசியல்வாதிகள் தமக்கு வசதியான திட்டங்களையும், சட்டங்களையும் வைத்துக் கொள்வார்களே அன்றி நீதியான தீர்வைக்காண்பார்கள் என்பதோ, அதற்கு இந்நாட்டின் பெரும்பான்மையை மையப்படுத்திய ஜனநாயகம் இடந்தருமென்றோ நம்புவதற்கில்லை. சமாதான வாழ்விற்குத் தடையாயிருப்பது சட்டமல்ல. சட்டத்தை வளைத்து வைத்திருக்கும் அரசில்வாதிகளே. இந்த அரசியல்வாதிகளின் பிடிகளிலிருந்து மக்கள் முதலில் விடுதலை பெறவேண்டும். சமாதானத்தையும், சௌஜன்னியத்தையும் நிலைநிறுத்த இன, மத பேதங்களைக் கடந்து சமாதான சகவாழ்வில் அக்கறையுள்ள அனைத்து மக்களும் ஒன்றுபட வேண்டும். அரசில்வாதிகள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டாது அரசியல்வாதிகளை இயக்கும் சக்தியாக மக்கள் இயக்கம் உருவாகவேண்டும். இது நடைபெறுமா?

~ மலர் ~

> புலனாகிற உலகம் விஞ்ஞான உண்மைகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குகிறது. புலனாகாத உலகம் தர்மநெறிகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குகிறது. அந்த தர்ம நெறிகள் - ஞானிகள் கண்ட உண்மைகள், கண்டுபிடிப்புகள், பௌதீக உண்மைகள்போல் நிரந்தர உண்மைகள்.
>
> **டாக்டர் எம். எஸ் உதயமூர்த்தி**

# நன்றி சொல்வோம்

கல்முனை மறைக்கோட்டச் சிறப்பு மலரை உருவாக்குவதில்
எமக்குப் பல கரங்கள் துணைநின்றன. அவை,

கவிதைகள் வடித்தன
கதைகள் எழுதின
கட்டுரைகள் தந்தன
ஆய்வுகள் செய்தன
ஆலோசனைகள் நல்கின
விளம்பரங்கள் கொடுத்தன
ஆசிகள் வழங்கின

அனைவருக்கும்

நன்றி ! நன்றி ! நன்றி!

இன்னும் இம்மலரை உருவாக்குதிலும் உலகத் தொடர்பு தினவிழாவை நடாத்துவதிலும் அதிகளவில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய உறுப்பினர் திரு. J. டேவிட் அவர்களுக்கு சிறப்பான விதத்தில் நன்றி கூறுகின்றோம்.

ஆசிரியர் குழுவினர்
தொண்டன்

*With Best Compliments From*

# St. Joseph Sale Centre
# (EHED)

52. Central Road,
Batticaloa.

T.Phone: 065-22268

- Keels Sausages

- Australian honey
- Broiler (Chicken)

- Mineral Water

- Cake Ingredians
- Croceries


- Goats Milk

Available Here..

Registered as a News Paper in Sri Lanka




தங்க நகை உலகில்
தனித்துவமாய் ஒளிரும்
நகைச் சுரங்கம்
சொக்கவைக்கும் நகை உலகின் சொர்க்காபுரி



# சொர்ணம் நகை மாளிகை

தூய 22K தங்கத்தில்
புத்தம் புது டிசைன்களில்
அனுபவம் மிக்க சிற்பிகளின்
கைவண்ணத்தில் உருவாகும்
அழகுமிகு நகைகளைப் பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய இடம்.

SJ **Sornam**
JEWELLERS

| | | |
|---|---|---|
| 212-214, பிரதான வீதி, கல்முனை.<br>T.PHONE: 067-29121, 29860<br>FAX: 067-29166 | 59, மட்டுநகர் வீதி, கல்முனை.<br>T.PHONE: 067-20191 | 33, பிரதான வீதி, மட்டக்களப்பு.<br>T.PHONE: 065-22715<br>FAX: 065-25588 |


St.Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designation - St. Joseph's Catholic Press, Batticaloa.